2017 மார்ச் 20
திங்கள்
விலை: 20/-

ஹிஜ்ரி 1438 ஜ.ஆகிர் பிறை 20 | பக்கங்கள் 12 | மணி 03 | ஒளி 045

NAVAMANI DAILY
නවමණී දිනපතා

# நவமணி

தமிழ்பேசும் மக்களின் சுதந்திரமான குரல்

QD / 154 / NEWS / 2017



12»

100 வது டெஸ்டில் பங்களாதேஷ் வெற்றி



04»

தீர்வு திட்டத்தில் அக்கறையற்ற முஸ்லிம் தலைமைகள்



09»

ஆபாசத்தின் கூடாரங்களாக மாறும் பாடசாலைகள்

# இனவாதம், மதவாதம் முன்னேற்றத்துக்கு தடை



## அடுத்த பரம்பரைக்கு வாழும் உரிமை

## இதுவே எம் முன்னுள்ள பாரிய பணி

## வெலிகம பிரகடன கூட்டத்தில் சபாநாயகர்




■ அஷ்ரப் ஏ. சமத்

நாட்டில் மதவாதம் மற்றும் இன வாதம் தலைதூக்கினால் எமக்கு முன்னேற முடியாது. இந்த ஆண்டு இறுதியில் நாட்டுக்கு ஜனநாயக உரிமை கிடைத்து 70 வருட நிறைவைக் கொண்டாடுகிறோம். அடுத்த பரம்பரைக்குப் புதிய நாட்டில் வாழும் உரிமையை உருவாக்குவதே எம் முன்னுள்ள பாரிய பணி என சபாநாயகர் கரு ஜயசூரிய நேற்றுத் தெரிவித்தார்.

11 »»»»

ஹம்பாந்தோட்டை துறைமுக ஒப்பந்தம்

## நகல் வரைபு நாளை அமைச்சரவையில்

ஹம்பாந்தோட்டை துறைமுகத்தை சீனாவுக்கு வழங்குவது தொடர்பிலான ஒப்பந்தத்தின் நகல் வரைபு நாளை செவ்வாய்க் கிழமை அமைச்சரவைக்கு தாக்கல் செய்யப்படவுள்ளது.

இதில் சீன நிறுவனத்தால் குத்தகைக்கு எடுக்கப்படும் துறைமுகத்தின் நான்கின் ஒரு பங்கினை 10 வருடங்களுக்குப் பின்னர் இலங்கை நிறுவனமொன்றுக்கு வழங்குவது தொடர்பிலும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

ஹம்பாந்தோட்டை துறைமுகத்தை தனியார் மயப்படுத்துவதற்கு நாடளாவிய ரீதியாக

11 »»»»



## சுமந்திரன் போன்ற தலைவர்கள் இருக்கையில் இன பிரச்சினைக்கு தீர்வு காண்போம்

இம்தியாஸ் பாகிர்மாக்கார் அழைப்பு



சுமந்திரன் போன்ற மிதவாத போக்குள்ள தலைவர்கள் வாழும் போதே இனப் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காண்பதற்கு நாம் முக்கியத்துவமளிக்க வேண்டுமென தேசிய ஐக்கியத்துக்கான பாக்கிர் மாக்கார் நிலையத் தலைவர்

11 »»»»

## வடமத்திய மாகாண சபை சுற்று நிருபத்தால் ஹஜ் உம்ரா கடமைக்கு சிக்கல்



■ இக்பால் அலி

வடமத்திய மாகாண கல்வித் திணைக்களத்தினால் ஆசிரியர் சேவையாளர்களுக்கு வெளிநாட்டு விடுமுறை எடுப்பது தொடர்பாக விடுக்கப்பட்ட சுற்று அறிக்கையில் புனித ஹஜ் கடமையை

11 »»»»

## கிண்ணியா டெங்கு கட்டுப்பாடு; அமைச்சரவைக்கு அறிக்கை



■ அ. அருண் பிரசாந்த்
■ பிறவ்ஸ்
■ சஹ்ரின் எம். இஸ்மத்

கிண்ணியாவில் தீவிரமாக பரவும் டெங்கு நோயை கட்டுப்படுத்துவது தொடர்பான விசேட அறிக்கையொன்றை சுகாதார அமைச்சர் மூலமாக, அடுத்த அமைச்சரவையில் சமர்ப்பிக்கவுள்ளதாக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் அமைச்சருமான ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.

டெங்கு நோயினால் பாதிக்கப்பட்டு கிண்ணியா தள வைத்திய சாலையில்

11 »»»»

## மாலைதீவில் விஷக் காய்ச்சல்

விமான நிலையத்தில் பாதுகாப்பு

மாலைத்தீவில் பரவும் எச்1என்1 வைரஸ் தொற்று காரணமாக ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் விமான சேவை கடுமையான அவதானத்தை செலுத்தியுள்ளது.

இந்த நோய் தொற்று காரணமாக அந்த நாட்டு சுற்றுலா துறை குறித்து அவதானம் செலுத்தப்பட்டுள்ளதாக மாலைத்தீவு

11 »»»»

6 முஸ்லிம் நாடுளுக்கு தடை

## உச்ச நீதிமன்றத்துக்கு எதிராக ட்ரம்ப் அரசு மேன்முறையீடு



6 முஸ்லிம் நாடுகளைச் சேர்ந்த மக்கள் அமெரிக்காவில் நுழைவதற்கு ஜனாதிபதி விதித்த தடையை நீக்கிய உச்சநீதிமன்றத்திற்கு எதிராக டிரம்ப் அரசு மேல்முறையீடு செய்துள்ளது.

அமெரிக்க ஜனாதிபதியாக டொனால்ட் டிரம்ப் பதவியேற்ற பின்னர் தொடர்ந்து பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறார். அந்த வகையில், முஸ்லிம்கள் பெரும்பான்மையாக வசிக்கும் ஆறு நாட்டு அகதிகள் அமெரிக்கா வருவதற்கு 120 நாட்கள்

11 »»»»

## கிண்ணியா பாடசாலைகள் இன்று மீண்டும் திறப்பு

■ கிண்ணியா சஹ்ரின் எம். இஸ்மத்,
■ திருமலை எம் டி எம் பாரிஸ்

கிண்ணியா பிரதேசத்தில் டெங்கு காய்ச்சலினால் பாடசாலை ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் பாதிப்புக்குள்ளாகியதன் விளைவாக கடந்த வாரம் மூடப்பட்டிருந்த கிண்ணியா வலயப் பாடசாலைகள்

11 »»»»

## சவுதியில் புழுதியுடன் கூடிய காலநிலை



சவூதியில் தற்போது புழுதி நிறைந்த கால நிலை நிலவுகின்றது.

இதனால், சவூதியின் பல பிரதேசங்களிலும் புழுதி நிறைந்து வளிமண்டலம் தெளிவற்றுக் காணப்படுவது குறிப்பிடத்தக்கது.

புழுதிக்காற்று காரணமாக அங்குள்ள பாடசாலைகள் மற்றும் பல்கலைக்கழகங்களுக்கு இரண்டு நாட்கள் விடுமுறையளிக்கப்பட்டுள்ளது.

## ஐ.நா.வின் தீர்மானத்துக்கு அரச அனுசரணை வேண்டாம்

22 ஆம் திகதி ஜெனீவாவில் ஆர்ப்பாட்டம்

■ அ. அருண் பிரசாந்த்

ஐ.நா. தீர்மானத்துக்கு இலங்கை அரசு அனுசரணை வழங்கக் கூடாது என்றும் இதில் குறிப்பிடப்பட்டுள்ள இராணுவத்தினருக்கு விரோதமான குற்றச்சாட்டுக்களுக்கு எதிர்ப்பினை வெளியிடும் முகமாகவும் எதிர்வரும் 22 ஆம் திகதி ஜெனீவாவில் ஆர்ப்பாட்டமொன்று மேற்கொள்ளப்படவுள்ளது.

ஐ.நா. அலுவலகத்துக்கு முன்னாள் மதியம் 2 மணிக்கு நடைபெறவுள்ள இந்த ஆர்ப்பாட்டமானது இலங்கை பூகோள ஒன்றியத்தினாலேயே ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

ஒன்றியத்தின் ஸ்தாபகர் வசந்த கீர்த்திரத்தன, ரியாட் எட்மிரால் சரத்வீரசேகர உள்ளிட்ட

11 »»»»

# சமுர்த்தியை அழித்தொழிக்க எவருக்கும் இடமளியோம்

## அமைச்சர் எஸ்.பீ. திஸாநாயக்க



(வெலிகம நிருபர்)

நாட்டில் வறுமையை ஒழித்து சுபீட்ச த்தை ஏற்படுத்த சமுர்த்தி திட்டம் மக்களுக்கு பெரும் வரப்பிரசாதமாக அமைந்துள்ளது. வறிய மக்களின் எழுச்சி க்காக முன்னெடுக்கப்படும் சமுர்த்தியை எவரும் அழிக்கவோ ஒழிக்கவோ நாம் ஒரு போதும் இடமளிக்கமாட்டோம் என்று சமூக வலுவூட்டல் மற்றும் நலனோம்புதல் அமைச்சர் எஸ்.பி. திசாநாயக்க தெரிவித்தார்.

மாத்தறை மாவட்டத்தில் சமுர்த்தி அதிகாரிகளுக்கு நிரந்தர நியமனக் கடிதங்களை வழங்கும் வைபவம், மாத்தறை மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் நடைபெற்ற போது, அதில் பிரதம அததியாகக் கலந்து கொண்டு பேசு கையிலேயே அமைச்சர் மேற்கண்டவாறு கூறினார்.

இவ்வைபவத்தில் நிதி இராஜாங்க அமைச்சர் லக்ஷ்மன் யாப்பா அபேவர்தனவும் கலந்து கொண்டார்.

இங்கு அமைச்சர் எஸ்.பி. திசாநாயக்க தொடர்ந்து கூறியதாவது:-

சமுர்த்தி அதிகாரிகள் நிரந்தர நியமனம் கேட்டு கோஷங்களையும், ஆர்ப்பாட்டங் களையும் நடத்தி வந்தனர். இனிமேல் அவர்கள் அவ்வாறான ஆர்ப்பாட்டங்கள் செய்ய வேண்டியதில்லை. சமுர்த்தி அதிகாரிகளுக்கு நிரந்தர நியமனங்கள் வழங்கப்படுவதன் மூலம் அவர்களின் பிரயாணக் கொடுப்பனவுகள், அலுவலக கொடுப்பனவுகள் உள்ளிட்ட சகல பிரச்சி னைகளுக்கும் தீர்வு கிடைக்கும்.

1994ம் ஆண்டில் 28.7 வீதமாகக் காணப்பட்ட வறுமை நிலை, இன்று 6.7 வீதமாக குறைவடைந்துள்ளது. அதற்கு சமுர்த்தி அதிகாரிகள் வழங்கிய ஒத்துழைப்புக்கள் மிகவும் பெறுமதியானது.

2020ம் ஆண்டுகளாகும் போது இவ்வறுமையை ஐந்து சதவீதமாக குறைக்க பாரிய நிகழ்ச்சித் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

ஆசியாவிலே விசாலமான இயக்கமாக சமுர்த்தி வங்கி அமைந்துள்ளது. தற்போது நாடெங்கும் 1074 சமுர்த்தி வங்கிகள் உள்ளன. 332 வங்கி மகா சங்கங்கள் வரை அதிகரித்துள்ளன.

சமுர்த்தி வங்கிகளின் ஊடாக பயனாளிகளுக்கும், தனிநபர் குழுக்களுக் கும் கடன் வழங்கப்படுகின்றது. சுமார் 15 கடன் திட்டங்கள் முன்னெடுக்கப்படு கின்றன. இங்கு அங்கத்தவர்களுக்கு 50 ஆயிரம் ரூபாவில் தொடங்கி 10 இலட்சம் ரூபா வரையில் கடன் வழங்கப்படுகின்றன.

அத்துடன் விவசாயம், கைத் தொழில், கடற்றொழில் மற்றும் கால்நடை வளர்ப்பு போன்ற வேலைத் திட்டங்கள் வாழ்வாதார அபிவிருத்தி திட்டங்களாக முன்னெடுக்கப்படுகின்றன.

தொழில் பயிற்சி கற்கை நெறியை மேற்கொள்ளும் வருமானம் குறைந்த குடும்பங்களைச் சேர்ந்த பிள்ளைகளுக்கு 'யொவுன் திரிய' இளைஞர் ஊக்குவிப்பு கடன் திட்டத்தின் மூலம் கடன் பெறலாம்.

இவ்வைபவத்தில் நிதி இராஜாங்க அமைச்சர் லக்ஷ்மன் யாப்பா அபேவர்தன உட்பட பலர் உரை நிகழ்த்தினர்.

## 200 கோடி ரூபாய் செலவில் பள்ளிவாசல்பாடு வீதி புனரமைப்பு

(பாலாவி விஷேட நிருபர் ஏ.எல். முனாப்)

புதிதாக புனரமைக்கப்பட்ட மங்களஎலிய தொடக்கம் பள்ளிவாச ல்பாடு வரையிலான காபட் வீதி அண்மையில் திறந்து வைக்கப்பட்டது.

மங்களஎலிய, கொத்தாந்தீவு, கின்னபாடு, ஊடாக பள்ளிவாசல் வரையிலான 12 கிலோமீற்றர் தூரமுடைய குறித்த வீதி மிக நீண்ட காலமாக போக்குவரத்து செய்ய முடியாதவாறு குன்றும் குழியுமாக காணப்பட்டது.

வீதியை இராஜாங்க அமைச்சர் நிரோஷன் பெரேரா ஊடாக 200 கோடி ரூபாவை ஒதுக்கீடு செய்துள்ள துடன் வீதியின் புனரமைப்பு பணிகளும் நிறைவடைந்துள்ளன.

குறித்த வீதி மக்கள் பாவனைக்கு கையளிக்கும் நிகழ்வுக்கு ஐக்கிய தேசியக் கட்சியின் புத்தளம் மாவட்ட அமைப்பாளர் எம்.என். எம். நஸ்மியின் அழைப்பின் பேரில் இராஜாங்க அமைச்சர் நிரோஷன் பெரேரா, புத்தளம் பாராளுமன்ற உறுப்பினர் எம்.எச். எம். நவவி, புத்தளம் மாவட்ட செயலாளர் எச்.என். சித்ரானந்த உட்பட பிரமுகர்கள், மதகுருமார்கள் எனப்பலரும் கலந்து கொண்டனர்.

## கிணறுகளில் வலை போடுமாறு பணிப்பு

( மினுவாங்கொடை நிருபர் )

மினுவாங்கொடை நகர சபை மற்றும் பிரதேச சபைகளின் எல்லைகளுக்குட் பட்ட கிணறுகளுக்கு வலை போடு மாறு, மினுவாங்கொடை பொது சுகாதாரப் பரிசோதகர்களினால் இப்பிர தேச மக்களுக்கு பணிப்புரை விடுக்கப் பட்டுள்ளது .

மினுவாங்கொடை பிரதேசத்தின் பல்வேறு பகுதிகளிலுள்ள கிணறுகளைப் பரீட்சித்துப் பார்த்தபோது, அவற்றில் அதிகமான இடங்களில் டெங்குக் குடம் பிகள் இருப்பது கண்டுபிடிக்கப்பட் டுள்ளதினாலேயே, இப் பிரதேச கிணறு களை வலை போட்டு மூடிப் பாவிக்கு மாறு மக்கள் அறிவுறுத்தப்பட்டுள்ளதாக மினுவாங்கொடை சுகாதார வைத்திய அதிகாரி தெரிவித்துள்ளார்.

இப் பிரதேச கிணறுகளில் டெங்குக் குடம்பிகள் இருப்பதாக அடையாளங் காணப்பட்ட வீட்டு உரிமையாளர்களுக்கு எதிராக, வழக்குத் தாக்கல் செய்யப்பட வுள்ளதாகவும் சில வீட்டு உரிமையாளர் களுக்கு சிவப்பு நோட்டீஸ் வழங்கப் பட்டு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ள தாகவும் அவர் தெரிவித்தார்.

கம்பஹா மாவட்டத்தில் தற்போது அடிக்கடி பெய்துவரும் மழை காரண மாகவே டெங்கு நுளம்புப் பெருக்கம் அதிகரித்து வருவதாகவும் அவர் குறிப்பிட்டார்.



## உலக வாய் வழிச் சுகாதார தினம் அனுஷ்டிப்பு

(ஏறாவூர் நிருபர் -ஏ.எச்.ஏ. ஹுஸைன்)

மார்ச் 20ஆம் திகதி அனுஷ்டிக்கப்படும் உலக வாய்; வழிச் சுகாதார தினத்தையொட்டி வாய்வழிச் சுகாதா ரத்தை வலியுறுத்தும் பல்வேறு விழிப்புணர்வு நிகழ்வுகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக சுகாதாரத் திணைக்களம் அறிவித்துள்ளது.




''சுகாதாரமான வாய், வாழலாம் மிடுக்காய்'' என்பது இவ்வருட உலக வாழ் வாய் வழிச் சுகாதார தினத்தின் தொனிப்பொருளாகும்.

இது குறித்து விழிப்பூட்டும் பதாதைகள் மட்டக்களப்பு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பிரிவிலுள்ள ஏறாவூர் சுகாதார வைத்திய அதிகாரிப் பிரிவு உட்பட மாவட்டமெங்கும் தொங்க விடப்பட்டுள்ளன.

## முஸ்லிம் விவாகப் பதிவாளராக நியமனம்

(இறக்காமம் நிருபர் ஏ.கே.ஏ.ரவூப்)



இறக்காமம்- 01 கத்தீப் வீதியில் வசி க்கும் அப்துல் ஜப்பார் அப்துல் அஜ்மீர் மௌலவி முஸ்லிம் விவாகப் பதிவாளராக இலங்கை சனநாயக சோசலிச குடியரசி ன் பதிவாளர் நாயகம் ஏக்கநாயக்கவால் நியமிக்கப்பட்டுள்ளார்.

இறக்காமம் ஜும்ஆப் பெரிய பள்ளிவாசலில் பேஷ் இமாமாகக் கடமையாற்றி வரும் இவர் ஆரம்பம் முதல் உயர்தரம் வரை இறக்காமம் அஷ்ரப் மத்திய கல்லூரியில் கல்வி கற்ற பின் மார்க்கக் கல்வியை சம்மாந்துறை தப்லீகுல் இஸ்லாம் அரபுக் கல்லூரியில் கற்று 1998ஆம் ஆண்டு மௌலவி பட்டம் பெற்றார். இவர் அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமா சபையின் நீண்ட கால உறுப்பினருமாவார்.

இவர் இறக்காமம் 1, 3, 4, 5, 6, 8, 9 ஆகிய பிரிவுகள் உட்பட நல்லதண்ணிமலை, குடிவில் ஆகிய கிராமங்களுக்கும் முஸ்லிம் விவாகப் பதிவாளராக நியமிக்கப்பட்டுள்ளார். சமூகசேவையில் அதிக ஈடுபாடு கொண்ட இவர் அப்துல் ஜப்பார், லைனம்பு தம்பதியரின் புதல்வராவார்.

## ஆஸ்பத்திரிகளில் உள்ள டெங்கு நோயாளர்களை பார்க்க வருவதை தவிர்க்குமாறு கோரிக்கை

( மினுவாங்கொடை நிருபர் )

கம்பஹா மாவட்டத்தில் டெங்கு நோயின் தாக்கம் அதிகரித்துக் காணப் படும் நிலையில், கம்பஹா மாவட்ட வைத்திய சாலைகளில் சிகிச்சை பெறுவோரைப் பார்க்க வருவதை இயலுமானவரை தவிர்ந்து கொள்ளுமாறு கோரிக்கை விடப்பட்டுள்ளது.

கம்பஹா, நீர்கொழும்பு தள வைத்தியசாலைகளில் டெங்குத் தாக்கத்திற்குள்ளானோரும் தங்கிச் சிகிச்சை பெறுவோறும் அதிகம் உள்ளனர். இவர்களைப் பார்ப்பதற்காக சிறுவர்கள், முதியோர்கள், கர்ப்பிணித் தாய்மார்கள் மற்றும் உடல் பலவீனமானவர்கள் வந்து போகின்றனர். எனினும் இச் சந்தர்ப்பத்தில் இவ்வாறானவர்கள் வைத்தியசாலைகளுக்கு வருவதை இயன்றளவு தவிர்க்குமாறு வைத்திய நிபுணர்கள் ஆலோசனை வழங்கியுள்ளனர்.

இவ்வாறு வருபவர்களும் டெங்கு தொற்றுக்கு உள்ளாகுவதாக இனங்காணப்பட்டிருப்பதால், இந்த ஆலோசனை முன் கூட்டியே வழங்கப்படுவதாகவும் இந்த அறிவுறுத்தல் மிக முக்கியம் என்பதைக் கருத்தில் கொண்டு, வைத்தியச ாலைகளுக்கு சமூகமளிக்கும் அனைவரும் இதன்படி செயற்படுமாறும் டாக்டர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இதேவேளை, டெங்கு தாக்கத்திற்குள்ளானோர்களால் நீர் கொழும்பு தள வைத்தியசாலையின் டெங்கு தொற்றுப் பிரிவு வார்ட் நிரம்பி வழிவதாலும் போதிய இடமின்மை காரணமாகவும் இங்கு கொண்டுவரப்படும் டெங்கு நோயாளர்கள் அனைவரும் கம்பஹா தள வைத்தியசாலைக்கு திருப்பி அனுப்பப்படுவதாகவும் அங்கிருந்து கிடைக்கும் நம்பத் தகுந்த செய்திகள் தெரிவிக்கின்றன.

## திவுலப்பிட்டிய டிப்போ பஸ்களில் பல்வேறு வகையான வசதிகள்

( மினுவாங்கொடை நிருபர் ஐ. ஏ. காதிர் கான் )

பயணிகளின் நன்மை கருதி குருநாக லில் இருந்து கொழும்புக்கு 5ஆம் இலக்க வழியில் மினுவாங்கொடை ஊடாகப் பயணிக்கும் சகல இ.போ.ச. பஸ் வண்டிகளிலும் பல்வேறு வசதிகள் செய்து கொடுக்கப்படவுள்ளன

திவுலப்பிட்டிய இ.போ.ச. டிப்போவி னால் எதிர்வரும் ஏப்ரல் மாதம் முதல் இந்நடவடிக்கை முன்னெடுக்கப்பட வுள்ளதாக டிப்போ முகாமையாளர் எச். பி. அனுர சாந்த குமார தெரிவித்தார்.

பஸ் வண்டிகளில் சீ.சீ.ரீ.வி. கெமராக் களைப் பொருத்துதல், ஆபத்து ஏற்படும் வேளைகளில் பயன்படுத்துவதற்காக சாரதிக்குப் பக்கத்தில் அவசர மணி (அலாம் ) பொருத்துதல், சாரதிக்கு முன் பக்கமாக உயரத்தில் பஸ் வண்டியின் உள்ளே பின்புறம் வரையிலான ஆசனங் கள் தெரியும் விதத்திலான முகம் பார்க்கும் கண்ணாடிகளைப் பொருத்துதல், பஸ் டிப்போவுடன் எந்நேரமும் தொடர்புடையதான தொலைபேசிகளைப் பொருத்துதல் ஆகிய வசதிகள் செய்து கொடுக்கப்படவுள்ளதாக அவர் தெரிவித்தார்.

மக்களின் தேவை, பாதுகாப்பு மற்றும் வசதிகள் ஆகிய நலன்களைக் கருத்தில் கொண்டே இந் நடவடிக்கைத் திட்டம் முன்னெடுக்கப்படுவதாகவும் டிப்போ முகாமையாளர் தெரிவித்தார்.

இது தவிர, பயணிகளின் வசதி கருதி, ஏப்ரல் மாதம் முழுவதும் சித்தி ரைப் புத்தாண்டை முன்னிட்டு, கட்டுநாயக்க விமான நிலையத்திலிருந்து மினுவாங்கொடை ஊடாக தூரப் பிரதேசங்களுக்கான பஸ் சேவைகளை நடத்தத் திட்டமிட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

### நீத்தார் பெருமை

## கல்விப்பணியில் ஆர்வம்கொண்ட அதிபர் எம்.எல்.எம். மர்ஹூம்

இறைவன் தனக்களித்த கல்விச் செல்வத்தை - ஆசிரியர் பதவியை தனக்கும் தனது குடும்பத்துக்கும் மட்டுமல்லாமல் சமூகத்துக்கும் நாட்டுக்கும் பிரயோசனமான முறையில் பயன்படுத்திய முன்னாள் மதீனா தேசிய கல்லூரி பிரதி அதிபரும் அதிபருமான அல்ஹாஜ் எம்.எல்.எம். மர்ஹூம் அண்மையில் தனது 87ஆவது வயதில் காலமானார். அவரது ஜனாஸா அன்றைய தினமே மடவள ஜாமிஉல் கைராத் ஜும்ஆப் பள்ளிவாயல் மையவாடியில் நல்லடக்கஞ் செய்யப்பட்டது. இன்னாலில்லாஹி வ இன்னா இலைஹி ராஜிஊன்....

மடவள பஸாரில் கௌரவமான குடும்பத்தில் பிறந்த (1928.04.28) இவர், தனது கல்வியை மதீனா தேசிய கல்லூரியிலும் சன்மார்க்கக் கல்வியை பிரதேசத்திலும் கற்றுத் தேர்ந்தார். சிரேஷ்ட தராதரப் பரீட்சையில் வெற்றிகரமாக சித்தியெய்தி ஆசிரியர் பயிற்சிக்காக அளுத்கம ஆசிரியர் கலாசாலைக்குத் தெரிவாகி இருவருட பயிற்சியின் பின் மாவனல்ல, உயன்வத்த வித்தியாலயத்திற்கு நியமனம் பெற்றார். அங்கிருந்து உதவி ஆசிரியராக இனிகலை, கந்துரை, அக்குறணை ஸாஹிரா, பங்கொள்ளாமட, குமுக்கந்துரை, மடவள பெண்கள் பாட சாலை, மதீனா தேசிய பாடசாலை ஆகிய வித்தியாலயங்களில் ஆசிரியராகவும் அதிபராகவும் சேவை யாற்றி, அப்பாடசாலைகளில் சிறந்த பெறுபேறுகளை பெற்றுக் கொடுத்த பெருமைக்குறியவர் ஆவார். அவரின் மாணவர்கள் பலர் வைத்தியர், பொறியியலாளர், சட்டத்தரணி, தொழிலதிபர்கள், ஆசிரியர்களாக நாட்டின் நாலா பக்கங்களிலு முள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.



பாடசாலை சேவையின்போதும் தனிப்பட்ட வாழ்க்கையிலும் சிறந்த குணநலன்களும் இறை திருப்தியைப் பெறும் நோக்கமுடையவராகவும் காணப்பட்டார். தனது தந்தையின் பேரில் சதகதுல் ஜாரியாவாக சொந்தக் காணியை மடவள கல்வீட்டு தைக்கா கட்ட அன்பளிப்புச் செய்தார்.

மடவள ஜாமிஉல் கைராத் ஜும்ஆப் பள்ளிவாயல் நிருவாக சபையில் பொருளாளராகவும் செயலாளராகவும் பணிபுரிந்ததோடு, அரச, அரச சார்பற்ற சங்கங்களின் உறுப்பினராகவும் பணி புரிந்துள்ளார். கண்டி போதனா வைத்தியசாலை டாக்டர் எம்.சியாத், பொறியியலாளர் எம். ரிபாத் ஆகியோரின் தகப்பனாரும் கட்டிட காந்தராத்துக் காரர் முஹம்மது சப்ரியின் மாமனாரும் சித்தி மரியத்தின் அன்புக் கணவருமாவார். இவரின் ஜனாஸா நல்லடக்கத்தின் போது உள்ளூர் வெளியூர்களைச் சே ர்ந்த பெருந்தொகையான மக்கள் கலந்து கொண்டனர். அன்னாருக்கு ஜன்னத்துல் பிர்தௌஸ் கிடைக்கப் பிரார்த்திப்போமாக.

எச்.ஏ. ஷுகூர், மடவள பஸார்.

## ஓட்டமாவடி பிரதேச இளைஞர் கழக நிர்வாகிகள் தெரிவு




தேசிய இளைஞர் சேவைகள் மன்றத் தின் பணிப்பாளர் நாயகம் சட்டத்தரணி டபிள்யு. ஜீ. எஸ். எரந்திகவின் தலைமை யிலும் தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் மட்டக்களப்பு மாவட்ட உத விப்பணிப்பாளர் ஆலித்தீன் ஹமீர் வழி காட்டலிலும் இயங்கி வருகின்ற கோற ளைப்பற்று மேற்கு ஓட்டமாவடி பிரதேச இளைஞர் கழக சம்மேளன வருடாந்த பொதுக்கூட்டம், இளைஞர் சேவை அதிகாரி பீ. எம். றியாத் தலைமையில், அண்மையில் பிரதேச செயலக கூட்ட மண்டபத்தில் நடைபெற்றது.

நிகழ்வில் ஓட்டமாவடி பிரதேச இளை ஞர் கழக சம்மேளனத்தின் நடப்பு வரு டத்திற்கான தலைவராக எம். எச். எம். அஸீம் வாக்களிப்பின் மூலம் தெரிவு செய்யப்பட்டார்.

உப தலைவர் எம். எம். சம்ஹான், செயலாளர் பீ.எம். றியாத் (இளைஞர் சேவை அதிகாரி), உப செயலாளர் எம். ரீ. எம். பஹாத், பொருளாளர் ஏ. எம். பௌஜிர், அமைப்பாளர் எம். கே. எம். பர்ஹான், உப அமைப்பாளர் ஏ. எஸ். எம். முபாஸ், கணக்காளர் எஸ்.எச்.எம். அஸாம் ஆகியோர் ஏனைய நிர்வாகி களாக தெரிவு செய்யப்பட்டனர். ஏனைய பிரிவுகளின் செயலாளர்களாக ரீ.அஸ்ஜத் அஹமத், ஏ.எல்.எம். பர்ஹான், எப்.எம். அஸ்லீம், பீ.நுசைக் அஹமத், ஏ.எச். எம். பிக்ரி, வை.எம். றிஸ்கான், ஏ.எஸ் எம். அக்ரம், எல்.ரீ.றிஜா முஹம்மத் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர். கோறளைப்பற்று மேற்கு ஓட்டமாவடி பிரதேச செயலகத்தின் உதவித்திட்டமி டல் பணிப்பாளர் எச். எம்.எம். றுவைத், ஏறாவூர் நகர் பிரதேச செயலக இளைஞர் சேவை அதிகாரி ஏ.எம். ஹனிபா மற் றும் ஜவா தாதியர் பயிற்சி நிலையத்தின் நிர்வாக உத்தியோகத்தர் ரீ.துஸ்யந்தி மற்றும் இணைப்பாளர் பிரிஞ்சியாறோ சைறே ஆகியோர் நிகழ்வில் அதிதிகளா கக் கலந்து கொண்டனர்..

# ஆமாம் சாமி போடும் அரசியல்வாதிகள் வேண்டாம்

## அரசியல் கலா நிலையத் திறப்பு விழாவில் ஜனாதிபதி

தலைவர்கள் முன்னிலையில் அனைத்துக்கும் ஆமாம் சாமி போடுகின்ற அரசியல்வாதிகளாக அல்லாமல், அவ்வாறல்ல இவ்வாறு என விடயங்களைச் சுட்டிக் காட்டக்கூடிய இளம் அரசியல்வாதிகளை நாட்டில் உருவாக்க வேண்டிய தேவை உள்ளதாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன் தெரிவித்தார்.

நேற்று(19) முற்பகல் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைமையகத்தில் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின், இளைஞர் முன்னணியினால் ஆரம்பிக்கப்பட்ட அரசியல் கலாநிலையத்தைத் திறந்துவைத்து உரையாற்றும்போதே ஜனாதிபதி தெரிவித்தார்.

தொடர்ந்து தெரிவித்த ஜனாதிபதி,

அரசர்கள் முன்னிலையில் துதிபாடும் அரசியல் பாரம்பரியத்திற்கு இனிவரும் காலங்களில் இடம்கிடையாது, அறிவு மற்றும் சிந்தனையுடன் செயற்படும் அரசியல் இயக்கத்திற்காக இந்த கலாநிலையத்தை ஆரம்பிக்க நடவடிக்கை எடுத்துள்ளோம்.

இன்று தூய அரசியல் இயக்கமொன்றைக் கட்டியெழுப்புவதற்குள்ள முக்கிய சவால் அரசியல்வாதிகளுக்கு அனுபவம் இல்லாமையாகும். சில நேரங்களில் வீழ்ந்து சில நேரங்களில் எழுந்து முன்னேறிவரும் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் அரசியல் பயணம் தொடர்பாகக் கட்சியின் அனைத்து அரசியல்வாதிகளிடமும் தெளிவு காணப்பட வேண்டும்.

எந்தவொரு ஊழல்வாதியும் வெண்ணிற ஆடையை அணிந்துகொண்டு தேர்தலில் வெற்றிபெற முடிந்திருப்பது விருப்புத் தேர்வு முறைமை காரணமாகவேயாகும.; அரசியல் கட்சிகளின் வீழ்ச்சி மற்றும் தனிநபர் வழிபாடு அரசியல் நிலைமையைச் சரி செய்வதற்கு அறிவையும் தெளிவையும் பெற்றுக்கொடுப்பது அவசியமாகும்

அரசியல் நிகழ்ச்சி நிரலைப் பார்கிலும் சுதந்திரத்திற்குப் பின்னர் இலங்கையின் தேசியத்தையும் பாரம்பரியத்தையும் பேணி இலங்கை கலாசாரத்தை மதிக்கும் தேசாபிமானத்துடன்கூடிய அதிகாரத்தின் தேவையை நிறைவேற்றும் வகையில் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி உருவானது. சரியான கொள்கை மற்றும் நிகழ்ச்சித் திட்டத்துடன் கட்சி அன்றும் இன்றும் ஒரு பலமான அரசியல் கட்சியாக முன்னோக்கிப் பயணிக்கின்றது.

ஸ்ரீல.சுதந்திரக் கட்சியைப் பலமாக முன்னெடுத்துச் செல்வதற்கு தூய்மையும் நேர்மையும் கொண்ட ஓர் அரசியல் இயக்கத்தைக் கட்டியெழுப்ப வேண்டும். கடந்த இரண்டு வருட காலப்பகுதியில் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி பலமான ஒரு பாதைக்கு வந்திருப்பதோடு, கட்சியின் மகளிர் மற்றும் இளைஞர் அமைப்புகள் வெற்றிகரமாகச் செயற்பட்டு வருகின்றது. சரியான கொள்கை மற்றும் நிகழ்ச்சித் திட்டமின்றி ஒரு அரசியல் இயக்கமாக



முன்னேறிச் செல்வதற்கு ஒருவராலும் முடியாது. உலகில் எங்குமே இடம் பெறாத அத்தகையதொரு நிகழ்வு எதிர்காலத்திலும் இடம்பெறாது. எதிர்காலத்தில் தூய அரசியல்வாதிகளை உருவாக்குவதற்காச இந்த அரசியல் கலாநிலையம் ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன், மூன்றுமாத பயிற்சி நெறியின் பின்னர் சர்வதேச தரம்வாய்ந்த சான்றிதழ்கள் வழங்கப்படவுள்ளன. கடந்த சில தசாப்த காலமாகப் பேசப்பட்டுவந்த கட்சி வரலாற்றில் நிறைவேற்றப்படாதிருந்த இந்த அரசியல் கலாநிலையத்தை தனது தலைமைத்துவத்தின் கீழ் ஆரம்பிக்கக் கிடைத்திருப்பதையிட்டு ஜனாதிபதி மகிழ்ச்சி வெளியிட்டார்.

அமைச்சர்களான மஹிந்த சமரசிங்க, சுசில் பிரேமஜயந்த, பைஸர் முஸ்தபா, ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளர் அமைச்சர் துமிந்த திசாநாயக்க உள்ளிட்ட பலர் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர்.

## சர்வதேச வாய்ச் சுகாதார தினம் இன்று



நாட்டு மக்களின் 90 சதவீதமானோர் ஏதோவொரு வகையிலான வாய் நோயுடன் சம்பந்தப்பட்டிருப்பதாக சுகாதாரப் பிரிவு தெரிவித்தது.

அதிகளவு சீனியுடன் கூடிய உணவுகளை உட்கொள்ளல், முறையாக வாயை சுத்தம் செய்யாமை போன்றன வாய் சுகாதாரப் பாதிப்பிற்கு காரணமாகும் என்று இலங்கை பல் வைத்தியர் சங்கம் தெரிவித்தது.

அதிகளவில் வெற்றிலை மெல்லுதல், புகைத்தல் ஆகியன வாய்ச்சுகாதாரத்திற்கு பாதிப்பை ஏற்படுத்தும் விடயங்களாகும்.

சர்வதேச வாய்ச் சுகாதார தினம் இன்று இடம்பெறவுள்ளது. 'ஆரோக்கியமான வாழ்வுக்கு - வாய்ச் சுகாதாரத்தை முன்னெடுத்தல்' என்ற தொனிப்பொருளின் கீழே நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன.

நாட்டில் வாயுடன் தொடர்புபட்ட நோய்களுக்கு உள்ளானவர்கள் பெருமளவில் இருப்பதை காணக்கூடியதாக உள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

பாடசாலை மாணவர்களில் 65 சதவீதமானோர் வாய் சம்பந்தப்பட்ட நோய்களுக்கு உள்ளாகியுள்ளனர். 95 சதவீதமானோர் பல் ஈறுகள் தொடர்புட்ட நோய்களுக்கு உள்ளாகியிருப்பதாக அமைச்சின் புள்ளிவிபரங்களில் இருந்து தெரியவந்துள்ளது.

முரசு கரைதல், வாய்ப் புற்றுநோய் மற்றும் சொத்தைப் பல் போன்றவற்றினால் பாதிக்கப்பட்டோர் பெருமளவில் இருப்பதாக கண்டறியப்பட்டுள்ளது.

நாட்டின் மொத்த மக்கள் தொகையில் 90 சதவிதமானோர் வாய் சம்பந்தப்பட்ட நோய்க்கு உள்ளாகியிருப்பதாக அடையாளம் காணப்பட்டுள்ளது.

சர்வதேச வாய் சுகாதார தினத்தை முன்னிட்டு ஆரம்ப பாடசாலை மற்றும் பாடசாலை மாணவர்களின் வாய் சுகாதாரப் பாதுகாப்புக்கான வேலைத்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

## அவிஸ்ஸாவளை வேன் விபத்து

### 16 பேர் காயம்

அவிஸ்ஸாவளையில், ஊருபெலடிய பிரதேசத்தில் நேற்று இடம்பெற்ற வாகன விபத்தில் 16 பேர் காயமடைந்துள்ளனர்.

மரண வீடொன்றிக்கு சென்றிருந்த குழுவினர் பயணித்த வேன் ஒன்றே இவ்வாறு சுமார் 50 அடி பள்ளத்தில் வீழ்ந்து விபத்துக்குள்ளானது.

காயமடைந்தவர்களுள் 8 பேர் பெண்கள் எனவும், இரண்டு பேர் சிறார்கள் எனவும் தெரியவந்துள்ளது.

அவர்கள் கேகாலை மற்றும் தெரணியகலை பிரதேசத்தில் வசிப்பவர்கள் என விசாரணையில் இருந்து தெரியவந்துள்ளது.

சாரதிக்கு நித்திரை ஏற்பட்டதே இந்த அனர்த்தத்திற்கு காரணம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, மொரட்டுவ எகொட உயன பிரதேசத்தில் இடம்பெற்ற வாகன விபத்தில் 3 பேர் மரணித்த சம்பவம் தொடர்பில் பிரதேசவாதிகள் மத்தியில் அமைதியற்ற நிலை ஏற்பட்டுள்ளது.

தனியார் பஸ் ஒன்று வேகத்தை கட்டுப்படுத்த முடியாத நிலையில் முன்னால் சென்ற லொறி மீதும், அருகில் இருந்த பஸ் தரிப்பிடம் மீதும் மோதியதில் நேற்றுமுன்தினம் மூன்று பேர் பலியாகியுள்ளனர்.

விபத்துக்கு காரணமான சாரதிக்கு எதிராக பிரதேசவாசிகள் ஆர்ப்பாட்டம் மேற்கொண்டுள்ளதோடு, அவர்கள் மொரட்டுவ பொலிஸ் நிலையத்திற்கு சென்று ஏற்பட்ட மரணங்களுக்கு நியாயம் கோரியுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.





கொழும்பு-12, வாழைத்தோட்டம் அல்-ஹிக்மா கல்லூரி பழைய மாணவர்களின் பங்களிப்புடன் பல மில்லியன் செலவில் 13 வகுப்பறைகளையும் ஒரு கேட்போர் கூடத்தையும் கொண்ட மூன்று மாடிக் கட்டடத்தை பூர்த்தி செய்து கொடுத்ததையிட்டு அவர்களை கௌரவிக்கும் நிகழ்வு வாழைத் தோட்டம் அல்-மஸ்ஜிதுன் நஜ்மி ஜும்ஆப்பள்ளிவாசல் ஏற்பாட்டில் அதன் தலைவர் எஸ்.எம்.எம். இஸ்மத் தலைமையில் கடந்த சனிக்கிழமை இடம்பெற்றது. இந்நிகழ்விற்கு பிரதம பேச்சாளராக நவமணி பத்திரிகையின் பிரதம ஆசிரியரும், முஸ்லிம் கவுன்சில் மற்றும் முஸ்லிம் மீடியாபோரத்தின் தலைவருமான என்.எம்.அமீன், அகில இலங்கை ஜமிய்யதுல் உலமா சபையின் கொழும்புக் கிளையின் தலைவர் அஷ்-ஷெய்க் முஸ்கித் அஹமட், கௌரவப் பேச்சாளராகவும், சிறப்புச் பேச்சாளர்களாக சத்திய எழுத்தாளர் எஸ்.ஐ.நாகூர்கனி, நசீர் அஹமட் அதிபர் நாளிர் உள்ளிட்ட பல நலன் விரும்பிகள், பாடசாலையின் உப அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், பாடசாலை அபிவிருத்திச் சங்க உறுப்பினர்கள், நலன் விரும்பிகள் எனப் பலர் கலந்து கொண்டிருந்தனர். (படங்கள் - ஏ.எஸ்.எம்.ஜாவித்)

## கணிதம் சொல்லிக் கொடுத்த அமைச்சர் சம்பிக்க



90 இலட்ச ரூபா பெறுமதியிலான சிறிமுது உயன வீட்டுத்திட்டத்தின் கேட்போர் கூடம் கடந்த சனிக்கிழமை அமைச்சர் பாட்டலி சம்பிக்க ரணவக்கவினால் திறந்த வைக்கப்பட்டது.

இந்த கேட்போர் கூடத்தில் பிள்ளைகளுக்கு எதிர்காலத்தில் கல்வி, கலை ஆகிய வேலைத்திட்டங்களுக்கும் இந்த கேட்போர் கூடத்தை பயன்படுத்த முடியும்.

இதன் போது அமைச்சர் அங்கிருந்த குழந்தைகளுக்கு எவ்வாறு கணிதப்பாடத்தை இலகுவாக கற்றுகொள்ளலாம் என்றும் தெளிவுபடுத்தினார். அத்தோடு, கணிதப் பாடத்திலுள்ள வெறுப்பை நீக்கி ஆசையுடன் எவ்வாறு கற்றுகொள்ள முடியும் என்றும், கணிதத்தை வெற்றி கொள்வது எவ்வாறு என்றும் தெளிவுபடுத்தினார்.

ஹொரணை தக்ஷி கல்லூரியில் உயர் தரம் கணக்கியல் கற்ற அமைச்சர், மொறட்டுவை பல்கலையில் பொறியியல் கற்கையை கற்று பின்னர் பல்கலைக்கழகங்களின் விரிவுரையாளராகவும் கடமையாற்றினார். அவரின் முதல் தொழிலாக ஆசிரியர் தொழிலையே தேர்ந்தெடுத்தார் என்றும் இதன் போது பிள்ளைகளுக்கு சுட்டிக்காட்டினார்.



தமிழ் மிரர் பத்திரிகை ஆசிரியர் மதனவாசன் எழுதிய தணிக்கை தகர்க்கும் தனிக்கை என்ற நூல் வெளியீட்டு விழாவின் போது புரவலர் ஹாசீம் உமர் பிரதம அதிதி ரணில் விக்கிரமசிங்கவிடமிருந்து நூலின் பிரதி ஒன்றைப் பெற்றுக் கொள்வதனை படத்தில் காணலாம். பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் மற்றும் நூலாசிரியரையும் படத்தில் காணலாம்.

(படம்- இன்பாஸ் சலாஹுதீன்)

## விபத்தில் தந்தை, மகள் பலி தாய்க்கு தீவிர சிகிச்சை

(ஏறாவூர் ஏ.எச்.ஏ. ஹுஸைன்)

மட்டக்களப்பு வாகரைப் பொலிஸ் பிரிவிலுள்ள மட்டக்களப்பு திருகோணமலை வீதியிலுள்ள கதிரவெளிப் பிரதேசத்தில் நேற்றுமுன்தினம் மாலை இடம்பெற்ற வீதி விபத்தில் தந்தையும் மகளும் பலியாகியுள்ளனர். மேலும் மனைவி படுகாயங்களுக்குள்ளான நிலையில் திருகோணமலை பொது வைத்தியசாலையின் அதிதீவிர சிகிச்சை பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

திருகோணமலை பாலையூற்று கிராமம், லூர்த்து ஆலய வீதியைச் சேர்ந்த றிஷி கில்பேர்ற் எல்விஸ் அடம் (58) மற்றும் அவரது மகளான ஷெனொன் எல்விஸ் அடம் (20) ஆகியோரே உயிரிழந்துள்ளனர். மனைவி ஷெலின் எல்விஸ் அடம் (56) காயமடைந்துள்ளார். பஸ்ஸூம் முச்சக்கரவண்டியும் மோதியதிலேயே விபத்து நேர்ந்துள்ளது.

## சிலாபம் தம்பி சாஹிப் சித்தி பரிதாவின் இஸ்லாமிய தத்துவ முத்துக்கள் நூல் வெளியீடு



(திருச்சி சாஹல் ஹமீத்)

இந்தியாவில் இராமநாதபுரத்தில் இலங்கை சிலாபத்தைச் சேர்ந்த தம்பி சாஹிப் சித்திபரிதா எழுதிய இஸ்லாமிய தத்துவ முத்துக்கள் என்ற நூல் வெளியீட்டு விழா இராமநாதபுரம் நவாப் கிச்சன் ஹாலில் நடைபெற்றது.

இதில் திருச்சி ஜமால் முகம்மது கல்லூரி நிர்வாகிகள் மற்றும் இராமநாதபுரம் மாவட்ட இந்திய யூனியன் முஸ்லிம் லீக் மாவட்ட தலைவர் வருசை முகம்மது உட்பட பலர் கலந்து கொண்டார்கள்.

இந்தியாவைச் சேர்ந்த இராமநாதபுர மாவட்ட கிழக்கரையைச் சேர்ந்த மர்ஹூம் முகம்மது தம்பி சாஹிபின் மூத்த மகன் சித்தி பரிதா இவர் இலங்கை சிலாபத்தில் சிறுவயதில் இருந்து குடும்பத்துடன் தனது மகன், மகள்மார்களுடன் வசித்து வருகிறார. இவருக்கு ஆரம்பகால முதலே கவிதையில் ஆர்வம் அதிகம். சிறுவயதில் இருந்து பல கஷ்டங்களை அனுபவித்து இறுதியாக இவர் ஒரு புத்தகத்தை வெளியிட்டார். இவருக்கு இப்போது வயது 63 ஆகும். தனது சொந்த மாவட்டத்தில் இவர் எழுதிய புத்தகத்தை வெளியிட வேண்டும் என்ற ஆசையின் காரணமாக இராமநாதபுரத்திலே புத்தக வெளியீடு நடைபெற்றது.

இவ்விழாவிற்கு இராமநாதபுரம் மாவட்ட தொழில் வர்த்தக சங்கத் தலைவர் அஸ்மாபாக் அன்வர்தீன் தலைமை வகித்தார். நிகழ்ச்சியை ஜெனிபர் ராஷியா அசாருதீன் கிராஅத் ஓதி தொடங்கி வைத்தார். எம்.எ.எஸ் முகம்மது அசாருதீன் அனைவரையும் வரவேற்று பேசினார். முன்னாள் ஜனாதிபதி ஏ.பி.ஜே அப்துல் கலாமின் அண்ணன் மகள் ஹாஜியானி முனைவர் நசீமா மரைக்காயர் , ஜமால் முஹம்மது கல்லூரி தலைவர் மற்றும் செயலாளர் முனைவர் ஏ.கே காஜா நஜ்முத்தீன், உதவிச் செயலாளர் ஹாஜி ஜமால் முகம்மது, முதல்வர் முனைவர் முகம்மது சாலிகு, மதுரை மாட்டுத்தாவணி ஹோட்டல் வசந்தம் உரிமையாளர் சிராஜுதீன், டாக்டர் பாத்திமா சின்னதுரை அப்துல்லா ஆகியோரும் கலந்துகொண்டனர்.

## மொறட்டுவை விபத்து; பஸ் தரிப்பிடத்தில் இருந்த மூவர் பலி



(பாணந்துறை நிருபர் - எம்.கே.எம்.அஸ்வர்)

மொறட்டுவை எகொட உயன பிரதேசத்தில் இடம்பெற்ற வாகன விபத்தில் 3 பேர் மரணித்த சம்பவம் தொடர்பில் பிரதேசவாதிகள் மத்தியில் அமைதியற்ற நிலை ஏற்பட்டுள்ளது.

தனியார் பஸ் ஒன்று வேகத்தை கட்டுப்படுத்த முடியாத நிலையில் முன்னால் சென்ற லொறி மீதும், அருகில் இருந்த பஸ் தரிப்பிடம் மீதும் மோதியதில் நேற்று முன்தினம் மூன்று பேர் பலியாகியுள்ளனர். பஸ் தரிப்பிடத்தில் பஸ்ஸுக்காக காத்து நின்ற மூவரும் பலியானதையடுத்து, விபத்துக்கு காரணமான சாரதிக்கு எதிராக பிரதேசவாசிகள் ஆர்ப்பாட்டம் மேற்கொண்டுள்ளதோடு, அவர்கள் மொரட்டுவ பொலிஸ் நிலையத்திற்கு சென்று ஏற்பட்ட மரணங்களுக்கு நியாயம் கோரியுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. நிலைமையைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர அயல் பொலிஸ் நிலையங்களில் இருந்தும் மேலதிக பொலிஸார் வரவழைக்கப்பட்டனர்.

மொறட்டுவை புதிய காலி வீதியினூடாக பாணந்துறை திசையிலிருந்து கொழும்பு நோக்கி பயணித்த இரண்டு தனியார் பஸ்வண்டிகள் ஒன்றை ஒன்று முந்திக்கொண்டு செல்ல முற்பட்ட போது, ஒரு பஸ் வண்டி முன்னால் பயணித்த லொரியின் பின்புறத்தில் மோதியதில் கட்டுப்பாட்டை இழந்த லொரி, பஸ் தரிப்பில் நின்றுகொண்டிருந்தவர்களை மோதியதில் இக்கோர விபத்து ஏற்பட்டது.

குறித்த விபத்தில், மொறட்டுவை,எகொட, உயனையைச் சேர்ந்த பெமின ஹென்னதிகே மஹிந்தசிரி ரத்ன பாரதி (வயது 68), பாணந்துறை, பின்வல என்ற இடத்தைச் சேர்ந்த தீப்தி மஞ்சுளா பீரிஸ் (வயது 48) தாய், தாந்துல தெல்கே நெத்மி திலுக்ஷா மகள்(வயது 13) ஆகியோரே உயிரிழந்துள்ளனர்.

மூவரின் சடலங்களும் பாணந்துறை ஆதார வைத்தியசாலையில் டாக்டர் எம்.ஏ.பவாஸ் முன்னிலையில் பிரேத பரிசோதனை நடாத்தப்பட்டது. தலை உட்பட உடம்பின் ஏனைய பகுதிகளில் உண்டான இரத்தக் கசிவினால் மரணம் சம்பவித்ததாக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மொறட்டுவை பொலிசாரால் லொரி சாரதி, பஸ் சாரதி, பஸ் நடத்துனர் ஆகியோர் கைதுசெய்யப்பட்டு பதில் மாஜிஸ்ரேட் சரத் த சில்வா முன்னிலையில் ஆஜர் படுத்தப்பட்டனர்.

## கைத்தொழில் கிராமிய அபிவிருத்தி திட்டம்

முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்கவை தவிசாளராகக் கொண்டு செயற்படுகின்ற தேசிய ஒருமைப்பாட்டிற்கும் நல்லிணக்கத்திற்குமான அலுவலகத்தினால் வடக்கு, கிழக்கு ஆகிய இரு மாகாணங்களிலும் உள்ள 8 மாவட்டங்களினதும் மாவட்டச் செயலாளர்களினது ஒத்துழைப்புடன் மேற்கொள்ளப்பட்ட பரந்த கணிப்பீடுகளின் பின்பு கைத்தொழிலை அடிப்படையாகக் கொண்ட கிராமிய அபிவிருத்திக் கருத்திட்டம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டது.

ஜனாதிபதியினால் இது தொடர்பாக முன்வைக்கப்பட்ட அமைச்சரவை விஞ்ஞாபனம் அமைச்சரவையினால் கடந்த வாரங்களில் அனுமதிக்கப்பட்டதுடன் இக் கைத்தொழிலை அடிப்படையாகக் கொண்ட கிராமிய அபிவிருத்திக் கருத்திட்டமானது இம் மாத இறுதியில் முன்னெடுக்கப்படவுள்ளது. யுத்த மோதல்களினால் மிகவும் பாதிக்கப்பட்டுள்ள வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் முன்னெடுக்கப்படும் இக் கருத்திட்டத்தினோடு தொழில் முயலுநர் நிலையை அடிப்படையாகக் கொண்ட கிராமியப் பொருளாதாரத் திட்டத்தின் மூலம், இப் பிரதேசங்களில் இன்னமும் பெற்றுக் கொள்ளப்படாமலிருக்கும் சமூக பொருளாதார அபிவிருத்திக்கு வழிகோலுவதே இதன் நோக்கமாகும்.

NAVAMANI DAILY நவமணி
தமிழ்பேசும் மக்களின் சுதந்திரமான குரல்
FREELANKA MEDIA LTD.
156, Hospital Road, Kalubowila, Dehiwala.
Telephone: 011 7393880 - 1/2 Fax: 011 7393883
E-mail: editornavamani@gmail.com
freelankamedia@gmail.com
20TH MARCH 2017 - MONDAY

# தேசிய ஐக்கியத்துக்கு வழிகாட்டும் வெலிகம பிரகடனம் சமூகமயப்படுத்தப்பட வேண்டும்

நாட்டில் தேசிய ஐக்கியத்தைக் கட்டி எழுப்புவதில் ஊடகங்கள் முன்னுள்ள பொறுப்பு பற்றி மீளாய்வு செய்யும் கருத்தரங்கொன்று நேற்று கொழும்பில் நடை பெற்றது.

தேசிய ஐக்கியத்துக்கான பாக்கிர் மாகார் நிலையம் இன்றைக்கு பத்து வருடங்களுக்கு முன் வெளியிட்ட வெலிகம பிரகடனத்தை மீளாய்வு செய்வதற்காக நேற்று அரசியல்வாதிகள் ஊடாக விற்பன்னர்கள், பத்திரிகை ஆசிரியர்கள் மற்றும் ஊடக அமைப்புக் களது பங்குபற்றலுடன் நடைபெற்ற கருத்தரங்கில் வெலிகம பிரகடனத்தை முன்னெடுத்துச் செல்வ தன் அவசியம் வலியுறுத்தப்பட்டது.

2006ஆம் ஆண்டு யுத்த காலத்தில் நாட்டின் ஊட கங்கள் செயற்பட்ட விதத்தை கருத்தில் கொண்டே பத்து ஊடக அமைப்புக்களது இணக்கப்பாட்டுடன் வெலிகம பிரகடனம் வெளியிடப்பட்டது.

தேசிய ஐக்கியத்தைக் கட்டி எழுப்புவதற்கு ஊடகங் கள் எப்படிச் செயற்பட வேண்டுமென்ற பதின்மூன்று வழிகாட்டல்களை உள்ளடக்கியே வெலிகம பிரக டனம் வெளியிடப்பட்டது.

நேற்று கொழும்பில் நடைபெற்ற வெலிகமப் பிரகடனத்தை மீளாய்வு செய்யும் கருத்தரங்கில் பங்குபற்றிய சபாநாயகர் கரு ஜயசூரிய, ஊடக அமைச்சர் கயந்த கருணாதிலக, தமிழர் கூட்டமைப் பின் பாராளுமன்ற உறுப்பினர் எம். ஏ. சுமந்திரன் உட்பட கருத்தரங்கில் உரையாற்றிய பத்திரிகை ஆசிரியர்கள், பல்கலைக்கழகப் பேராசிரியர்கள் இந் தப் பிரகடனத்தை சமூகமயப்படுத்தி முன்னெடுத்துச் செல்வது காலத்தின் தேவை என வலியுறுத்தினர்.

நாட்டில் முப்பதாண்டு காலமாக நீடித்த யுத்தம் முடிவுக்கு கொண்டுவரப்பட்டு எட்டு வருடங் களாகியும் இன்றும் நாட்டில் நல்லிணக்கம் கட்டி எழுப்பப்படாதுள்ளது. இலங்கையர்கள் என்ற வகை யில் எமது நாட்டுக்கு, எழுந்து நிற்பதற்கு, உலகின் முன் தோன்றுவதற்கு பிரதான தடையாக எம் மத்தி யில் நிலவும் கருத்து முரண்பாடுகள் காரணமாக இருக்கின்றன.

இலங்கையர்கள் என்ற வகையில் சமூகங்களுக் கிடையே நல்லிணக்கத்தைக் கட்டி எழுப்புவதில் ஊடகங்களுக்கு மிகப்பாரிய பொறுப்புள்ளது. இந்த பொறுப்பினை பொறுப்புணர்ச்சியுடன் ஊடகங் கள் முன்னெடுக்குமாயின் இலங்கையர்கள் என்ற வகையில் முன்னேற்றமிகு நாடாக இலங்கை மிளிர முடியும்.

இந்த வகையில் ஊடகங்களுக்கு வழிகாட்டும் வெலிகம பிரகடனம் சமூகமயப்படுத்தப்படல் அவசிய மாகும்.

நாட்டில் நல்லெண்ணத்தைக் கட்டி எழுப்பும் நோக் கில் நல்லாட்சி அரசு ஜனாதிபதியின் கீழ் தேசிய ஒருங்கிணைப்பு மற்றும் நல்லிணக்க அமைச்சு மற் றும் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க தலைமையிலான தேசிய ஒருமைப்பாட் டுக்கான அலுவலகம் என்பனவற்றை உருவாக்கி தேசிய ஒருமைப்பாட்டினைக் கட்டி எழுப்புவதற்கு நடவடிக்கை எடுத்து வருகின்றது. இந்த இரு நிறுவ னங்களும் ஊடகங்களுக்கு வழிகாட்டும் சகல ஊடக அமைப்புக்களாலும் அங்கீகரிக்கப்பட்ட வெலிகம பிரகடனத்தை சமூகமயப்படுத்துவதற்கு குறிப்பாக ஊடக சமூகத்தவர்களிடையே பிரபல்யப்படுத்துவ தற்கு முன் வரவேண்டும்.

---

# தீர்வு திட்டத்தில் அக்கறையற்ற முஸ்லிம் தலைமைகள்

எம்.எம்.எம்.நூறுல்ஹக்
சாய்ந்தமருது - 05





நமது நாட்டில் காணப்பட்ட இனப்பிரச்சினை தொடர்பிலான தீர்வையும் மையப்படுத்தி இலங்கை யின் அரசியலமைப்பில் அதனை இணைத்துக்கொள் வது என்கின்ற அடிப்படையை முன்னிறுத்தியே இன்றைய நல்லாட்சி அரசாங்கம் உருவாக்கப்பட்டது என்பது மிகவும் பட்டவர்த்தமானது.

நமது நாட்டில் காணப்படும் இனப்பிரச்சினை என்பது மூன்று வகைகளை கொண்டிருக்கின்றது. ஒன்று சிங்கள - பௌத்த ஆதிக்க சக்திகளின் தமிழர் களுக்கெதிரான அச்சுறுத்தல்களையும் இரண்டாம் தர பிரஜைகளாக அவர்கள் நடத்தப்படுகின்ற அம்சத்தைக் கொண்டிருக்கின்றது. மற்றொன்று இலங்கையின் பிரதான சமூகங்களில் ஒன்றான முஸ்லிம்கள் மேற்கு றித்த சிங்கள அரசாங்கங்களினூடாகவும் மிதவாத தமிழ் அமைப்புக்களும் முன்னர் இருந்த ஆயுதம் தரித்த ஆதிக்க தமிழர் சக்தியினாலும் முஸ்லிம் சமூக எதிர்கொண்ட அச்சுறுத்தல்களுக்கு விடிவு காண வேண்டிய அம்சத்தோடும் தொடர்புபட்ட தாகும்.

இனப்பிரச்சினையில் மதம் மொழி, நிலம், கல்வி, கலாசார பண்பாடுகளிலெல்லாம் இதன் தாக்கம் எதிரொலித்து காணப்பட்டது. மட்டுமன்றி வடபுலத்திலிருந்து முஸ்லிம் சமூகம் ஓர் இனச்சுத்திகரிப்புக்கு உள்ளாக்கப் பட்டு முற்றாக அப்பகுதியிலி ருந்து விரட்டியடிக்கப்பட்ட அம்சத்தையும் இதற்குள் நாம் பார்க்கலாம்.

இவ்வாறான இனப்பி ரச்சினைக்கான தீர்வினை காண்பதற்காக முயற்சிகள் எடுப்பது போன்ற பாங் கினை இன்றைய நல்லாட்சி அரசாங்கம் வெளிப்படை யில் காட்டிக்கொண்டாலும் யதார்த்தபூர்வமாக அதனை அடைந்துகொள்வதற்கான எத்தனிப்புக்களை சரிவர முன்னெடுத்திருக்கின்றதா என்ற ஒரு கேள்வியை நாம் எழுப்பினால் அதற்கான பதில் பூஜ்ஜியமாகவே உள்ளது.

இனப்பிரச்சினைக்கான தீர்வு என்பது இலங் கையில் இருக்கின்ற நடைமுறை அரசாங்கம் ஏற்படுத்திக் கொடுக்க வேண்டிய பொறுப்பு டன் தொடர்புபட்டதாகும்.அதனை அரசாங்கம் செவ்வனே செய்வதற்கான எந்த பாங்கையும் அல்லது வெளிப்படைத் தன்மையோடு முன்னெடுப்பதாக இல்லை.மாறாக வெவ் வேறு பிரச்சனைகளோடு அரசியலமைப்பு மாற்றத்தைக்கூட முடிச்சுப் போடுவதில் அக்கறை காட்டுகின்றது.

இதில் தேர்தல் முறைமையில் சீர்திருத்தத்தைக் கொண்டுவருவது மற்றும் நிறைவேற்று அதிகார முடைய செயலாற்று ஜனாதிபதி முறைமையினை ஒழிப்பது என்பதை மாத்திரம் முன்னிறுத்தி நல்லாட்சி அரசாங்கம் தன்னை ஒரு இன நல்லிணக்கத்தின் முன்னோடியாக காண்பிப்பதிலும் அக்கறைகாட்டிக் கொண்டிருக்கின்றது.

உண்மையில் தேர்தல் சீர்திருத்தங்கள் என்பது நாட் டில் சிங்கள - பௌத்த மேலாதிக்க மனோபாவத்தை மிகவும் இறுக்கமாக வலியுறுத்தும் வகையில் அமைத் துக்கொள்வதில் அதிக அக்கறையைக் காட்டிவருகின் றது. அதனை என்ன விலை கொடுத்தேனும் நிறை வேற்றிக் கொள்வதிலும் பாரிய பங்குகளை வகிப்பது போன்று இன்றைய நல்லாட்சி அரசாங்கம் அக்கறை காட்டுகின்றது.இதன் பின்னணியில் கூட முஸ்லிம் சமூகம்தான் பெரிதும் பாதிக்கக்கூடியதாக வகுக்கப்ப டுவதற்கான சாயலே காணப்படுகின்றது.

அதுமாத்திரமன்றி நிறைவேற்று அதிகாரமுடைய செயலாற்று ஜனாதிபதி முறைமையை முற்றாக ஒழிப்பதென்பதில் கூட வெகுவாக பாதிக்கப்படு கின்ற சமூகமாக முஸ்லிம்கள் இருப்பதென்பது மறைவன்று. பொதுவாக இவ்விரு விடயங்களிலும் இனப்பிரச்சனைக்கான தீர்வு என்றோ அல்லது நாட் டின் நலன் என்றோ நோக்குகையில் பௌத்த - சி ங்கள பேரினவாத ஆதிக்க சக்திகளை நிலைநிறுத்துவ தற்காக உருவாக்கிக்கொள்ள எடுக்கப்படுகின்ற ஒரு கட்டமைப்பே அதற்குள் திட்டவட்டமாக செய்யப்ப டுகின்றது.

இந்த அவலம் ஒருபுறமிருக்க மற்றொரு சட்டச் சி க்கலும் இதிலிருக்கின்றது.நமது இன்றைய நடைமுறை அரசியலமைப்பு முற்றாக மாற்றப்பட்டு புதிதாக வரை யப்படுவதா அல்லது யாப்பின் சில பகுதிகள் மாத் திரம் திருத்தத்துக்குள் உள்வாங்கப்படுவதா என்கின்ற விடயத்தில் கூட இன்றைய ஆளும் தரப்பினரிடையே ஒருமித்த கருத்து காணப்படுவதாக இல்லை. அவர்க ளில் ஒரு சாரார் முற்றாக அரசியலமைப்பை மாற்றி எழுதுவது என்று கூறிக்கொண்டாலும் அதன் பின்னால் பாரிய ஆதரவுக்கரம் இருப்பதாகத் தெரியவில்லை.

மாறாக ஆளும் தரப்பிலிருந்தே இன்றைய அரசியல மைப்பில் சில பகுதிகளில் மாத்திரம் திருத்தங்களை மேற்கொள்வதுதான் நோக்கம் என்பதை மிகவும் வலி யுறுத்தி கருத்துரைகளை முன்வைப்பதையும் பார்க் கின்றோம். அதிலும் குறிப்பாக சர்வஜன வாக்கெடுப்பு மூலம் திருத்தம் கொண்டுவரக் கூடியவற்றில் இப்போ தைக்கு மாற்றங்களைச் செய்வதில்லை என்கின்ற ஒரு தீர்மானத்தை அறுதியாகவும் இறுதியாகவும் இன்றைய நல்லாட்சியின் பங்காளர்கள் மிகவும் துலாம்பரமாக வெளிப்படுத்துகின்றனர்.

இத்தகைய நிலைப்பாடுகளெல்லாம் நமது நாட் டில் காணப்படுகின்ற இனப்பிரச்சினையை தீர்த்து வைப்பதற்காக உளத் தூய்மையோடும் உண்மையான நோக்கோடும் முன்னெடுக்கப்படுகின்றதா என்கின்ற சந்தேகத்தை மிகவும் வலுப்படுத்துகின்றது. என் றாலும் தேர்தல் சீர்திருத்தங்கள் மாத்திரம் சந்தேகங் களுக்கு அப்பால் அமுலுக்கு வருமென்கின்ற தோர ணையை நமக்கு ஏற்படுத்துகின்றது.

இதில் முஸ்லிம் சமூகத்துக்கு நலன்களை விளைவிக் கக்கூடிய விடயங்கள் எதுவும் கிடையாது. அதேநேரத் தில் முஸ்லிம், சமூகம் இதனூடாக பாதிக்கப்படுகின்ற பக்கத்திலிருந்து விடுதலை அடைவதற்கான வழிகள் இல்லாத போதிலும் அதனைக் குறைப்ப தற்கான முயற்சிகளை நம் மத்தியிலி ருக்கின்ற நமது முஸ்லிம் கட்சி கள் வெறும் பேச்சளவிலான கருத்துக்களை பிரசாரங்களாக முன்வைத்துவருகின்றன.

ஆக்கபூர்வமான முயற்சி யாகவும் எல்லா தரப்பி னர்களும் ஏற்கத் தகுமான முன்வைப்புக்களை முஸ் லிம் கட்சிகள் எல்லாம் ஒன்றிணைந்து ஒரே பாங்கில் முன்வைப் பதிலும் அதனை எங்கு பேசுவதால் அல்லது முன்னிறுத்துவதால் காரியமாகி விடுமோ அங்கு எடுத்துச் செல்வதில் ஒரு பின்னடை வையும் இந்த மாறுதச் சிந்தனைகளினால் முஸ்லிம் சமூகம் அடைகின்ற பின்னடைவை குறைக்கச் செய்கின்ற முயற்சிகளை எந்தக் கட்சியினர் செய்கின்றனர் என் கின்ற போட்டி மனப்பான்மையினாலும் ஒரு கிடப் பில் இது போடப்பட்டிருப்பதை அவதானிக்கலாம்.

எது எவ்வாறிருப்பினும் நமது முஸ்லிம் கட்சிக ளிடம் ஒரு பொறுப்பு இன்று இருக்கின்றது. குறிப் பாக முஸ்லிம் சமூகம் எதிர்கொள்கின்ற அனைத்துப் பிரச்சினைகளுக்கும் தீர்வுகளை எந்த அடிப்படையில் எட்டிக்கொள்ள வேண்டுமென்கின்ற விடயத்திலும், தீர்வுகளைத் தருகின்ற அரசாங்கம் என்ன வழிகளில் தீர்த்துவைக்க முனைகின்றதோ அந்த மாதிரிக்குள் நமது விடயங்களையும் சாத்தியப்படுத்திக்கொள்ளு கின்ற ஒரு திட்டமிட்ட வரையறைகளை வகுத்துக் கொள்வதிலும் நமது சமூக அரசியல் கட்சிகளும் சரி குடியியல் சமூகமும் சரி அக்கறையற்றிருப்பதை வெகு வாக பார்க்க முடிகிறது. இந்நிலையானது நமக்கு அனுகூலங்களை எட்டிவிடுவதற்கு வழிவிடுபனவை கள் அல்ல.

அதுமாத்திரமன்றி முஸ்லிம் சமூகத்தில் காணப்படு கின்ற மற்றொரு பாதகப் பண்பு யாதெனில் நாம் எவ் வாறான தீர்வுகளை நோக்கி நகர வேண்டும் அதனை எவ்வாறு அடைந்துகொள்ள வேண்டும் என்கின்ற ஒரு முழுமையான கட்டமைக்கப்பட்ட தீர்வுப்பொதிக ளைக் கொண்டவர்களாக நாம் இல்லை. மாறாக ஒவ் வொரு அரசியல் கட்சிகளும் மற்றும் நமது குடியியல் சமூகங்களும் அவரவர்களுக்கு ஏதுவான வகையில் எழுந்தமானதாகவும் சரியான திட்டம் இன்றியும் தாங் கள் கலந்துகொள்கின்ற மேடைப் பிரசாரங்களிலும் கூடிக் கலைகின்ற கூட்டங்களிலும் வெறும் வார்த்தை களை அடுக்கி மக்களை ஏமாற்றுகின்ற போக்கையுமே கடைப்பிடித்துவருகின்றனர்.

இதனால்தான் முஸ்லிம்களின் பிரச்சினைக்கான தீர்வாக நிர்வாக ரீதியில் தேவையாக உள்ள கல்முனை மாவட்டம் , சில இடங்களில் உருவாக்கப்படவேண் டியுள்ள உள்ளூராட்சி மன்றங்கள், குறுகிய எல்லை களைக் கொண்ட தென்கிழக்கு அலகு, இதனை விட சற்று விரிவுபட்ட அகன்ற தென்கிழக்கு அலகு, இணைந்து வடக்கு கிழக்கு மாகாணத்தில் முஸ்லிம் பெரும்பான்மையைக் கொண்ட மாகாணமொன்றை உருவாக்குதல் போன்ற விடயங்களை மாற்றி மாற்றி பேசுவதும் கல்முனை மாவட்டத்துக்கு எதிராக இன்று ஒலுவில் மாவட்டம் என்ற ஒரு பெயரை முன்னிறுத்தி அதிலும் நமது சமூகம் ஒரு கேள்விக்குரியதாக இருப் பது போன்ற ஒரு பிரம்மையையும் கட்டமைத்துக் கொண்டு நமது பதிவு செய்யப்பட்ட முஸ்லிம் அரசி யல் கட்சிகளும் அதன் தலைமைகளும் செயலாற்றிக் கொண்டிருக்கின்றன.

வெறுமனே வடக்கு, கிழக்கு மாகாணங்களின் இணைப்புத்தான் நமக்கு அச்சுறுத்தலான அம்சம் போன்றும் அது இணைக்கப்படாவிட்டால் நமக்கு ஒரு பிரச்சினையும் இல்லை என்கின்ற ஒரு அர்த்தமற்ற நிலைப்பாட்டிலும் நமது சமூக அரசியல் கட்சிகளும் சிவில் சமூகமும் தங்களை முன்வைப்பவர்களாக மாறிக்கொண்டிருக்கின்றனர்.

இதுவும் நமக்கு சாதகமான பலன்களைத் தரப்போ துமனதல்ல. மாறாக ஆபத்தான நிலைமைக்கே இது வழிவகுக்கும் என்பதில் நாம் மிக உறுதியாக இருக்க வேண்டும்.இனப்பிரச்சினையின் தீர்வாக வரக்கூடிய அதி உச்ச தீர்வாக மாகாண சபை முறைமைதான் வரும் என்ற நம்பிக்கையே இன்று வலுப் பெற்றுக் காணப்படுகின்றது.

ஏற்கனவே இந்த மாகாண சபை முறை மைக்காக உருவாக் கப்பட்ட அரசி யலமைப்பின் 13ஆம் திருத்தச் சட்டத்துக்கு அப் பால் செல்லாது என்கின்ற ஒரு பலத்த சாயல் தென்படுகின் றது. மாகாண சபை என்று வருகின்ற போது இன்று மாகாண சபைகள் கொண்டிருக்கின்ற அதிகாரங்களில் எதுவும் மேலதிகமாக ஆக்கப்படாது, ஆக்கப்பட்டி ருக்கின்ற சட்டத்தில் நடைமுறைக்கு வராதிருக்கின்ற காணி, பொலிஸ் அதிகாரங்களை குறிப்பாக வடக்கு, கிழக்கு ஆகிய இரு மாகாணங்களிலும் நடைமுறைப் படுத்தப்பட வேண்டும் என்பதில் தமிழர் தரப்பினர் ஒருமித்தும் விடாப்பிடியாகவும் இருந்துவருகின்றனர். இந்த விடயத்தில் ஐரோப்பிய நாடுகளும் இந்தியாவும் அதற்கு பச்சைக் கொடி காட்டிவருவதையும் நாம் அவ தானிக்க முடிகிறது.

இந்த நிலை முஸ்லிம் சமூகத்துக்கு பாரிய பாதிப்புக் களை தரக்கூடியதாக இருந்தும் நம் மத்தியில் இருக் கின்ற எந்த முஸ்லிம் அரசியல் கட்சிகளும் அதன் தலைமைகளும் இது குறித்து பகிரங்கமாக தமது அச்ச ங்களை வெளிப்படுத்தியதாக இல்லை. அது மாத்திர மன்றி, நமது குடியியல் சமூக புத்திஜீவிகளும், அரசி யல் ஆய்வாளர்களும் இந்த ஆபத்துக் குறித்து நமது சமூகத்தை விழிப்பூட்டியதாகவோ அல்லது தீர்வுகளை நல்கும் இடத்தில் கொண்டு சென்றதாகவோ இல்லை.

இப்படி நாம் அக்கறை செலுத்தவேண்டிய பல பக்கங்களிலும் கோட்டை விட்டவர்களாகவும் அது குறித்த பிரக்ஞை அற்றவர்களாகவும் அடங்கி வாய் மூடி மௌனிகளாக இருந்து இக்கட்டுக்களை கைக் கெட்டிய தூரத்தில் வைத்துக் கொண்டிருக்கின்றோம். இதில் தமிழ் தரப்பினர்களின் எதிர்பார்ப்பில் எந்தவித மான குலைவுகளையும் ஏற்படுத்திவிடக்கூடாது என் கின்ற அக்கறையுடன் கூடிய மௌனங்களையும் நமது முஸ்லிம் அரசியல் தளத்தில் காண்கின்றோம்.

சிங்களவர், தமிழர்களின் நல்லெண்ணம் நம் மீது தொடர வேண்டும் என்பதில் நமக்கு மாற்றுக்கருத்து இருக்க முடியாது. ஆனால் அவர்களின் தீர்வினால் நாங்கள் பாதிப்புக்குள்ளாகி வருகின்ற நிலையில் அவர்களின் நல்லெண்ணத்தைப் பெறவேண்டும் என்கின்ற உணர்வில் செயற்படுவதென்பது நமது சமூ கத் தளத்தில் நின்று பார்க்கின்ற போது ஒரு போதும் நியாயமானதாகவோ நிம்மதியானதாகவோ தீர்வுகளை அடைந்துகொள்வதற்கான வழியாகி விடாது என்கின்ற யதார்த்தத்தையும் நாம் புறந்தள்ளிவிடலாகாது.

நமது நாட்டின் ஒற்றையாட்சி முறைமையினை மாற்றுவதில் சிங்கள குடிமக்கள் தொட்டு அரசியல் செயற்பாட்டாளர்கள் வரை கிஞ்சித்தும் விட்டுக்கொ டுப்புக்கு இடமில்லை என்பதில் அவர்கள் உறுதியாக இருக்கின்றனர். இந்த அறுதித் தீர்மானத்துக்கு எதிராக தமிழர்களும் முஸ்லிம்களும் எவ்வளவுதான் எதிர்க் குரல்களை எழுப்பினாலோ அல்லது நியாயங்களை முன்வைத்தாலோ மாற்றம் ஏற்பட்டுவிடப்போவ தில்லை.

ஆயின் ஒற்றையாட்சி முறைமைக்கு மாறான சமஷ்டி முறைமையினூடாக நமக்கான தீர்வுகளைத் தேட முனைவது என்பது முயற்கொம்பை தடவிப் பார்ப்பதற்கு சமமான ஒரு நிலையே ஆகும்.இதனை நம்மில் எத்தனை பேர் சரிவர புரிந்திருக்கின்றோம் என்பதில் ஒரு கேள்விக்குறி காணப்படுகின்றது.

மாகாண சபை முறைமை நமது நாட்டில் இன்று இருப்பது ஒற்றையாட்சி அமைப்புக்குள்ளான அதிகார பரவலாக்கத்தைக் கொண்டதாகும்.இதற்கு மாறாக சமஷ்டி சாயலைக்கொண்ட அதிகாரப் பரவலாக்கத்தை நேரடியாக இன்றைய நல்லாட்சி அரசாங்கமோ அல் லது வரக்கூடிய எந்த சிங்கள - பௌத்த மக்களை பெரும்பான்மையாக பிரதிநிதித்துவப்படுத்துகின்ற அரசாங்கங்களோ முன்னெடுக்க துணியாது. ஏனெனில் அது இந்த நாட்டின் பெரும்பான்மை மக்களின் இசை வுக்குரியதன்றி இருப்பதும் அந்த மக்களினால்தான் இந்த நாட்டில் அரசாங்கம் அமையக்கூடிய சூழல் இருப்பதனாலும் சிங்கள மக்களின் விருப்பையோ மகா சங்கத்தினர்களின் அபிப்பிராயங்களையோ மீறிச் செயற்படுவதில் சிங்கள மக்களின் அரசி யல் செயற்பாட்டாளர்கள் ஒருபோதும் துணிய மாட்டார்கள்.

இத்தகைய பட்டறிவு அடிப்படையில் நிர்வாக அதிகாரங்களை பிரயோகிக்கின்ற பிரதேச செயலகங்கள், அரசியல் அதிகா ரங்களை நடைமுறைப்படுத்துகின்ற உள்ளூராட்சி மன்றங்கள் போன் றவற்றில் பயன்களை அந்தந்த மாவட்டத்தில் மேலோங் கச் செய்கின்ற வகையில் தமிழ் சமூகத்தின் சார்பில் முன்வைக்கப்பட்டிருக் கின்ற சில தீர்வுத் திட்ட முன்மொழிவுகளில் முன்மொழியப்பட்டிருப் பதை அவதானிக்கின் றோம்.

இவற்றினை இன்றைய நல்லரசாங்கமும் ஏற்றுக் கொள்கின்ற ஒரு சமிக் ஞையை அதற்குள் நாம் பார்க்கின்றோம். இது ஒரு முன்னேற்றகரமான ஏற்பாடாக இருந்தாலும் இதன் பயன்பாட்டைக்கூட முஸ்லிம் சமூகம் முழுமையாக அடைந்துகொள்ளக்கூடிய வகை யில் நமது மக்களை பெருவாரியாகக் கொண் டமைந்த பிரதேச செயலகங்கள், உள்ளூராட்சி மன்றங்கள் குறைந்தே காணப்படுகின்றன.

இதனை ஈடு செய்யும் வகையில் சிற்சில பிர தேசங்களை நாம் சுட்டிக்காட்டி அங்கெல்லாம் பிரதேச செயலகங்கள் அது போல தேவை யான இன்னும் சில பகுதிகளில் உள்ளூராட்சி மன்றங்களை உருவாக்க வேண்டும் என்கின்ற கருத்துக்களை நமது தாய்க் கட்சியான ஸ்ரீலங்கா முஸ் லிம் காங்கிரஸின் ஸ்தாபகத் தலைவர் மர்ஹூம் அஷ் ரஃபின் காலம்தொட்டு இன்றுவரை நாம் பேச்சளவில் கேட்டும் பேசியும் வந்திருக்கின்றோம். அது மாத்திர மன்றி சில ஆணைக்குழு முன் சென்றும் நமது இந்தத் தேவைகளை பதிவாக்கியுமிருக்கின்றோம்.

இதனை சாத்தியப்படுத்தும் வகையில் பெரிதாக நாம் அக்கறை எடுத்து நாம் சார்ந்திருக்கின்ற ஆட்சி அதிகார தலைவர்களோடு நெருங்கிய உறவுகளைப் பேணி சாதித்துக்கொள்ளுகின்ற பக்குவத்தில் நாம் எப்போதும் பின்னிற்பவர்களாகவே இருந்துவருகின் றோம். அழுத பிள்ளைதான் பால் குடிக்கும் என்ற மூதுரைக்கொப்ப நமது பிரச்சினைகள் குறித்து நாம் அடம்பிடித்துக் கேட்காத வரை தட்டில் வைத்து எந்த பௌத்த - சிங்கள மேலாதிக்க சக்தியுடைய அரசாங்கங்களும் நமக்கு தீர்வுகளைத் தந்துவிடப்போ வதில்லை என்பதை நன்கறிந்தும் நாம் பேசாமடந்தை களாகவே இருந்துவருகின்றோம்.

ஆகவே ஒரு முறைமையில் இல்லாவிட்டால் அதற்கு வேறான மற்றொரு முறைமையின் கீழ் ஓரளவு தீர்வென்று நம்பக்கூடிய எந்த விடயங்களிலும் நாம் சரியான முறையில் எங்களைத் தயார்படுத்தாத ஒரு சமூகமாகவும் எங்களை வழிநடத்துகின்ற அரசியல் கட்சிகள் அவர்களின் பதவி அதிகாரங்களைத் தக்க வைத்துக்கொள்வதற்கு நம்மிடமிருக்கின்ற வாக்குரி மையை பகடைக்காய்களாக கையாண்டு பிரயோசனப் பட்டுக்கொண்டிருக்கின்றனர்.

இப்படி எளிதாகவும் தெளிவாகவும் நமது இழப் புக்களை விளங்கிக்கொள்ளக்கூடியதாக இருந்தும் முஸ்லிம் சமூகம் ஏதோ ஒன்றுக்கு அடிமையாகி தங்களை அழித்துக்கொள்கின்ற பண்புக்கு இரையாகி நமது அரசியல் கட்சிகளின் பின்னால் சார்ந்து நிற்கின் றோம். இது எந்தவிதமான ஆரோக்கியமான விளை வுகளையும் நம் மத்தியில் விதைக்க மாட்டாதென்பது நிரூபிக்கப்பட்ட உண்மைகளாக இருந்தும் பல முறை பட்டறிவுகள் இருந்தும் படிப்பினை பெறாதவர்களாக நாம் இருப்பதென்பது நமது கையறு நிலையே அன்றி நமது அரசியல் செயற்பாட்டாளர்களின் நேர்த்தியான அணுகுமுறைகளினால் அல்ல.

எனவே முஸ்லிம் சமூகம் இன்று தமது கடந்த கால செயற்பாட்டு அக்கறையின்மை நிலைப்பாடுகளை எல்லாம் மறந்து நம் மத்தியில் இருக்கின்ற அனைத் துக் கட்சிகளும் ஒன்றிணைந்து ஒருமித்த குரலாக நமது பிரச்சினைகளுக்கு தீர்வு எது என்பதை சரியாக அடையாளம் கண்டு அவற்றினை வெறும் தலையங் கங்களாக வரைந்துகொள்ளாது அதற்கான செயற்றிட்ட வடிவங்களோடு கூடிய தீர்வுப் பொதியாக முன்வைக்க முன்வர வேண்டும்.

# எதிர்காலத்தை நிர்ணயிப்பதற்கான ஆட்டத்துக்கு முஸ்லிம்கள் புதுவியூகம் வகுக்க வேண்டும்

## முஸ்லிம் மு. மு. செயலதிபர் அஸ்வர் வேண்டுகோள்



(எம்.எஸ்.எம். ஸாகிர்)

முஸ்லிம் சமூகத்தின் எதிர்காலத்தை நிர்ணயிப்பதற்காக வேண்டி தற்போதுள்ள ஆட்டத்தில் வெற்றிபெறுவதற்கு புதுவியூகம் அமைக்க வேண்டிய காலசூழ்நிலை இப்போது கனிந்துள்ளது. இத்தனை காலமும் மைதானத்தில் அறிமுகப்படுத்தப்பட்ட வியூகம் முஸ்லிம் சமுதாயத்தின் பிரச்சினைகளை தீர்ப்பதற்கோ அவர்களின் குறைகளை அறிவதற்கோ எந்த விதமான உதவியும் செய்யவில்லை. ஆகவே இந்த ஆட்டத்தில் வெற்றிபெறுவதற்கு ஒரு பொது அணித்தலைவர் தேவைப்படுகின்றார். இன்று நாட்டிலுள்ள பெரும்பான்மையான சமுகத்தவர்கள் மட்டுமன்றி முஸ்லிம்கள் கூட இலங்கையின் பொது அணித் தலைவராக மஹிந்த ராஜபக்ஷவை இனங்கண்டு விட்டார்கள். கிழக்கு மாகாணத்தில் உள்ள மட்டக்களப்பு, அம்பாறை, கல்முனை, கல்முனைக்குடி, சாய்ந்தமருது, ஒட்டமாவடி போன்ற இடங்களில் இரண்டு நாள் சுற்றுப் பிரயாணம் மேற்கொண்ட முன்னாள் அமைச்சரும் முஸ்லிம் முற்போக்கு முன்னணியின் செயலதிபருமான ஏ. எச்.எம். அஸ்வர் உரை நிகழ்த்திய கூட்டங்களில் இவ்வாறு கருத்து தெரிவித்துள்ளார்.

மேலும் அவர் தெரிவிக்கையில்,

அரசிலுள்ள முஸ்லிம் தலைவர்கள் சதாவும் அரசாங்கத்தைச் சாடும் ஒரு புதுப் பழக்கத்தை ஏற்படுத்திக் கொண்டு இருக்கின்றார்கள். இதன் மூலமாக மேலும் அவர்கள் அரசினால் வஞ்சிக்கப்படுவார்களே தவிர, முஸ்லிம்களுக்கு எந்த விதமான பிரயோசனமும் அதனால் கிடைக்கப்போவதில்லை. எனவேதான் இத்தனை காலமும் ஆடுகளத்தில் ஆடியவர்கள் தங்களுடைய விக்கெட்டுகளை இழந்து வருகின்ற பரிதாபகரமான காட்சியைப் பார்த்து, அந்த விக்கெட்டுகளை சரி செய்து ஆட்டத்தில் வெற்றி பெறுவதற்காக, கிழக்கு மாகாணத்தில் உள்ள அனைத்து கட்சிகளையும் சேர்ந்த முஸ்லிம் தலைவர்கள் ஒன்றிணைய வேண்டும்.

அப்படி ஒன்றிணைந்து அவரை தனிப்பட்ட ரீதியிலோ அல்லது கூட்டாகவோ வந்து சந்தித்து எதிர்கால ஆட்டத்தில் வெற்றி பெறுவதற்காக வேண்டிய வியூகத்தை சமூகத்தின் நலனுக்காக வேண்டி காலம் செல்லாது அமைக்க வேண்டும் என்று நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

முஸ்லிம் இன விரோத சக்திகள் இப்போது அந்த அரசாங்கத்தின் தொட்டிலிலே வைத்து தாலாட்டப்படுகின்றார்கள். மஹிந்த ராஜபக்ஷ எந்த விதத்திலும் முஸ்லிம்களுக்கு அநியாயம் செய்யவில்லை என்று நெஞ்சைத் தொட்டு கூறுகின்றார். சில பல குறைகள் நடந்தாலும் எதிர்காலத்தில் அப்படி நடக்காது என்று சமுதாயத்திற்கு உறுதி கூறுகின்றார்.

நான் ஏனைய ஊடக சந்திப்பில் கூறியது போன்று இப்பொழுதே மஹிந்த ராஜபக்ஷவை கிழக்கு மாகாணத் தலைவர்கள் வந்து சந்தித்து எதிர்கால நலனுக்கு ஒரு புரிந்துணர்வை ஏற்படுத்திக் கொண்டால் அவர் மூலமாக நாம் இழந்த உரிமைகளைப் பெறலாம். கஷ்டங்களில் நிவர்த்தி பெறலாம். ஒரு சமாதான சூழ்நிலை ஏற்படும் என்பது திண்ணம்.

இந்த விஜயங்களுக்கு முத்தாய்ப்பு வைத்தாற் போன்று அப்துல் மஜீது முபாரக் மௌலவி ஓர் ஊடக சந்திப்பையும் ஏற்படுத்தி இருந்தார். அதில் அஸ்வர் முன்வைத்த கருத்துக்கள் முகப்புத்தகம் மூலமாக நேரடியாக அஞ்சல் செய்யப்பட்டது. இந்த விஜயத்தின் போது மேல் மாகாண சபையின் உறுப்பினர் எம்.எஸ்.எம். சகாவுல்லாஹ் கலந்து கொண்டார். கிழக்கு மாகாணத்தின் கிராம மட்ட பல தலைவர்கள் இந்த சந்திப்பின் போது தங்களுடைய கருத்துக்களையும் தெரிவித்தார்கள். மஹிந்த ஆட்சி காலம் சம்பந்தமாக அவர்கள் கேட்ட கேள்விகளுக்கு விளக்கமான பதில்களை முஸ்லிம் முற்போக்கு முன்னணியின் செயலதிபர் அஸ்வர் வழங்கினார். மேலும் இவ்விஜயங்கள் விஸ்தரிக்கப்பட்டு எதிர்வரும் கிழமைகளில் ஆங்காங்கு பல தொகுதிகளுக்கும், கிராமங்களுக்கும் விஜயம் செய்வதற்கான திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# பேருவளை நகர சபைக்கு பவுசர், உழவு இயந்திரங்கள்

## சு.க. அமைப்பாளர் அம்ஜாத் நடவடிக்கை

(பேருவளை நிருபர் பி.எம். முக்தார்)

பேருவளை நகர சபைக்கு மலசல கூட கழிவுகளை அகற்ற பேண்டி ஒரு பவுசர் வண்டியையும் குப்பை கூளங்களை அகற்றும் பணியை சீராக முன்னெடுக்க இரு உழவு இயந்திரங்களையும் பெற்றுக் கொடுக்க பேருவளை ஸ்ரீ.ல.சு. கட்சி அமைப்பாளரும் மேல் மாகாண சபை முன்னாள் உறுப்பினருமான எம்.எம்.எம். அம்ஜாத் நடவடிக்கை மேற்கொண்டுள்ளார்.

பேருவளை சீனன் கோட்டைப் பகுதியில் ஏற்பட்டுள்ள டெங்கு நோயை கட்டுப்படுத்துவது தொடர்பாக பெரேரா வீதியில் உள்ள பள்ளிச் சங்க இணைச் செயலாளர் எம்.எம்.எம். சிஹாப் ஹாஜியாரின் இல்லத்தில் நேற்று நடைபெற்ற விசேட கூட்டமொன்றில் இவற்றை பெற்றுக் கொடுக்க மேல் மாகாண முதலமைச்சர் இசுர தேவப்பிரியவுடன் அம்ஜாத் பேசினார்.

இதனையடுத்து எதிர்வரும் 22ஆம் திகதி புதன்கிழமை முதலமைச்சரை சந்தித்து நகர சபைக்கு அவசியமான முக்கிய தேவைகள் பற்றி கலந்துரையாடப்படவுள்ளதாக பள்ளிச் சங்க இணைச் செயலாளர் சிஹாப் ஹாஜியார் கூறினார்.

சீனன் கோட்டைப் பகுதில் உள்ள சமூகநல இயக்கங்களின் பிரதிவாதிகள் ஜமாஅத்தார்கள் பங்கு பற்றிய இக் கூட்டத்தில் பல்வேறு முக்கிய விடயங்கள் ஆராயப்பட்டன.

பேருவளை மாவட்ட ஆஸ்பத்திரிக்குச் சென்று இங்கு நிலவும் முக்கிய குறைபாடுகளை நேரடியாக பார்வையிட்டு அவற்றை நீக்க தேவையான நடவடிக்கை எடுப்பது பற்றியும் இக் கூட்டத்தில் ஆராயப்பட்டது.

பேருவளை நகர சபையில் கழிவு நீர் அகற்றும் பவுசர் வண்டி இல்லாமை இப் பகுதி மக்களுக்கு ஒரு பெரிய பிரச்சினையாகும் என பலரும் இக் கூட்டத்தில் சுட்டிக் காட்டினர்.

# சட்டம், ஒழுங்கு தொடர்பில் திருமலையில் கலந்துரையாடல்



(அப்துல்சலாம் யாசீம்)

திருகோணமலை மாவட்டத்தில் நீதி நிர்வாகத்திற்குற்பட்ட சகல பொலிஸ் உயரதிகாரிகளுக்கும். நீதவான்களுக்குமான விஷேட கலந்துரையாடல் கிழக்கு மாகாண மேல் நீதிபதி அன்னலிங்கம் பிரேம் சங்கர் தலைமையில் திருகோணமலை நீதிமன்ற கட்டிடத் தொகுதியில் வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

சட்டம்.ஒழுங்கு தொடர்பில் நீதி மன்றங்களில் வழக்கு தொடருநராக செயற்படும் பொலிஸாரின் செயற்பாடுகள்.குறைபாடுகள் மற்றும் அவற்றை நிவர்த்தி செய்வதற்கான வழிமுறைகள் பற்றியும் காலம் தாழ்த்தாமல் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீதி வழங்குதல் போன்ற விடயங்கள் இக்கலந்துரையாடலில் ஆராயப்பட்டது.

குறிப்பாக பிடி விறாந்து விதிக்கப்பட்டவரை கைது செய்யும் நடவடிக்கையின் போது பொலிஸாரின் அசமந்தப் போக்குகள் பற்றியும் பொலிஸ் உயரதிகாரிகளுக்கு தெரிவிக்கப்பட்டதுடன் ஆலோசனையும் வழங்கப்பட்டது.

குறைபாடுகள் தவறுகளை நிவர்த்தி செய்து சட்டம்.ஒழுங்கை நிலைநாட்டி உரிய நேரத்தில் காலம் தாழ்த்தாமல் நீதியை பெற்றுக்கொடுப்பதே இக்கலந்துரையாடலின் முக்கிய நோக்கமாகும் என திருகோணமலை நீதிமன்ற பிரதம நீதவான் எம்.எச். எம்.ஹம்ஸா இதன் போது தெரிவித்தார்.

இந்நிகழ்வில் திருகோணமலை மேல் நீதிமன்ற நீதிபதி ஏ.பிரேம் சங்கர். மாவட்ட நீதிமன்ற நீதவான் என்.எம். எம்.அப்துல்லாஹ். திருகோணமலை நீதிமன்ற பிரதம நீதவான் எம்.எச். எம்.ஹம்ஸா. மற்றும் திருகோணமலை நீதிமன்ற மேலதிக நீதவான் சமிலா குமாரி ரத்னாயக்க.மூதூர் நீதிமன்ற நீதவான் ஐ.என்.றிஸ்வான் மற்றும் சட்டத்தரணிகள்.

திருகோணமலை மாவட்ட சிரேஸ்ட பொலிஸ் அத்தியட்சகர் .பொலிஸ் நிலையங்களின் பொறுப்பதிகாரிகள் என பலரும் கலந்து கொண்டனர்.

# ஏறாவூர் பிரதேசத்தில் டெங்கு கட்டுப்பாட்டு நடவடிக்கைகளின் போது





(ஏறாவூர் நிருபர் )

கிழக்கு மாகாணத்தில் டெங்கினைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கைக்கென பிரதமர் ரணில் விக்ரமசிங்க விசேட நிதியொதுக்கிடு வழங்கியதையடுத்து டெங்கு கட்டுப்பாட்டுப்பணிகள் தற்போது பரவலாக முன்னெடுக்கப்பட்டுள்ளன.

இதனடிப்படையில் டெங்கு அதிகம் காணப்படுவதாக அடையாளப்படுத்தப்பட்டுள்ள மற்றுமொரு மாவட்டமான மட்டக்களப்பு மாவட்டத்தில் சுகாதார திணைக்களத்துடன் இணைந்து பல்வேறு சமூக அமைப்புக்கள் டெங்கு கட்டுப்பாட்டு நடவடிக்கையில் தீவிரமாக இறங்கியுள்ளன.

இதேவேளை ஏறாவூர்ப் பிரதேசத்தில் பாராளுமன்ற உறுப்பினர் செய்யித் அலி ஸாஹிர் மௌலானா மற்றும் மாகாண சபை உறுப்பினர் எம்எஸ் சுபைர் ஆகியோரின் தலைமையில் சுகாதார திணைக்கள அதிகாரிகள் உட்பட பல்வேறு அரசாங்க நிறுவனங்களின் பிரதிநிதிகள் டெங்கு கட்டுப்பாட்டு நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர்.

பிரதேச சுகாதார வைத்தியதிகாரி அலுவலகம், நகர சபை, பிரதேச சபை, பிரதேச செயலகம் , பொலிஸ் நிலையம் போன்ற அரசாங்க நிறுவனங்களின் அதிகாரிகளுடன் ஸாலி ஹாஜியார் பவுண்டேசன் முதலான பல்வேறு மக்கள்நல அமைப்புக்களின் பிரதிநிதிகளும் வீடுவீடாகச்சென்று சுத்தம் செய்தல் மற்றும் பொதுமக்களுக்கு விழிப்புணர்வூட்டும் நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

அத்துடன் காலை மாலை வேளைகளில் புகைவிசுறும் நடவடிக்கையும் மேற்கொள்ளப்பட்டது.

கைவிடப்பட்டுள்ள காணிகள் மற்றும் கிணறுகளில் நுளம்புகள் உருவாகும் சாத்தியம் காணப்பட்டதையடுத்து அவற்றின் உரிமையாளர்கள் அதிகாரிகளினால் எச்சிரிக்கப்பட்டனர். ஒரே காணியில் மூன்று கிணறுகள் அமைக்கப்பட்டிருந்ததும் அவதானிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# கிண்ணியா இணைப்பு வீதி கொங்கிறீட் வீதியாக புனரமைப்பு

நீண்டகாலமாக புனரமைக்கப்படாதிருந்த சுங்கான் கேணி கிண்ணியடி இணைப்பு வீதி புனரமைக்கப்பட்டு இன்று கிழக்கு முதலமைச்சரால் மக்கள் பாவனைக்கு கையளிக்கப்பட்டது.

மடடக்களப்புகோரளைப்பற்று பிரதேச சபைக்குட்பட்ட இந்த வீதி 84 இலட்ச ரூபாசெலவில் கொங்கிறீட் வீதியாக புனரமைக்கப்பட்டுள்ளது

இந்த நிகழ்வில் பிரதம அதிதியாக கிழக்கு மாகாண முதலமைச்சர் ஹாபிஸ் நசீர் அஹமட் கலந்துகொண்டதுடன் கௌரவ அதிதியாக கிழக்கு மாகாண விவசாய அமைச்சர் கே. துரைராஜாசிங்கம் கலந்து கொண்டார்.

அத்துடன் வாழைச்சேனை



கோரளைப்பற்று பிரதேச சபையின் செயலாளர் எஸ் எம் சிஹாப்தீன் மற்றும் அதிகாரிகளும் இதில் கலந்துகொண்டனர்

## பெயர் மாற்றம்

யாழ்ப்பாணம், மருதங்கேணி தெற்கு, தாளையடி என்ற முகவரியில் வசித்து வரும் ஜீவரத்தினராசா ஜீவிதா ஆகிய நானும் (பிறப்புச் சான்றிதழ் பத்திர இல.5390) எனது மகளான தனுஸ்கா (பிறப்புச் சான்றிதழ் பத்திர இல.9861) என்பவரும் புனித இஸ்லாம் மதத்தைத் தழுவி எங்களது பெயரை முறையே ஜீவரத்தினராசா ஸீனதுன்நிஸா என்றும் பாத்திமா அப்ஸா என்றும் மாற்றிக் கொண்டோம் எனவும் இனி சகல ஆவணங்களிலும் அவ்வாறே ஒப்பமிடுவோம் எனவும் இலங்கை சனநாயக சோஷலிச குடியரசுக்கும் அதன் மக்களுக்கும் அறியத்தருகிறோம்.

**ஜீவரத்தினராசா ஸீனதுன்நிஸா**
**பாத்திமா அப்ஸா**



ஒச்சட்வத்த முஸ்லிம் வித்தியாலயத்தின் வெள்ளிவிழாவை முன்னிட்டு, ஹொரகொல்ல, ஒச்சட்வத்த இளைஞர் கழகத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட பேச்சுப் போட்டி நிகழ்ச்சியில் (14 வயதின் கீழ்) நாம்புளுவ, பாபுஸ்ஸலாம் மஹா வித்தியாலயத்தில் தரம் 8இல் கல்வி பயில்கின்ற ஜே.எம். ரிம்ஸான் தம்பதிகளின் புதல்வியான செல்வி எம்.ஆர். எப். ரிஷ்மா முதலாம் இடத்தைப் பெற்றுக் கொண்டுள்ளார்.

## பொது மன்னிப்பு கோரல்

இல. 3ஏ, மீதொட்டமுல்ல வீதி, பெரேரா மாவத்தை, கொலன்னாவையை வதிவிடமாகக் கொண்ட அப்துல் றஹீம் முஹம்மட் பௌஸ் ஆகிய நான் இந்தியாவுக்கு தனிப்பட்ட விஜயமொன்றினை மேற்கொண்டிருந்தவேளையில் எனது நண்பர் ஒருவரின் வேண்டுகோளுக்கிணங்க Icroma Immuno Fluoresuces Assay System எனும் மருந்து உபகரணத்தை கொள்வனவு செய்து அதனை இலங்கையில் பதிவு செய்ய வேண்டுமென்ற விடயம்தெரியாமல் அந்நண்பருக்கு வழங்கியிருந்தேன். இனி இது போன்ற தவறைச் செய்ய மாட்டேன். இதனால் நான் செய்த தவறுக்காக இத்தால் பொது மன்னிப்பு கோருகின்றேன்.


## இலங்கை அரச (பொது) வர்த்தக கூட்டுத்தாபனம்

இல-100, நவம் மாவத்தை, கொழும்பு-02

### நாரஹென்பிடிய மெகா காட்சி அறையின் வெற்றிடங்கள்

இலங்கை அரச வணிக (பொது கூட்டுத்தாபனம் கைத்தொழில் வணிக அமைச்சின் கீழ் இயங்கும் முழுமையான அரசு உரிமையுடைய நன்கு ஸ்தாபிக்கப்பட்ட நிறுவனமாகும். இலங்கை அரச வணிகக் கூட்டுத்தாபனம் உலக பிரசித்த பெற்ற வீட்டு உபகரணங்கள், மின்சார, விவசாய உபகரணங்கள், அலுவலக வழங்கல்கள் மற்றும் தகவல் தொழில்நுட்ப சாதனங்களை விற்பனை செய்யும் முன்னணி நிறுவனமாக கடந்த 40 வருடங்களாகத் திகழ்ந்து வருகின்றது. நாம் எமது நாரஹென்பிடிய மெகா காட்சி அறைக்கு பின்வரும் பதவிகளுக்காக பிரதிபலன்களை அடையக்கூடிய தானாக இயங்கக்கூடிய நேர்மை, மற்றும் திறமை மிகு ஆட்களை சேர்ப்பதற்கு எதிர்பார்க்கின்றோம்.

**உதவிப் பொது முகாமையாளர் மெகா காட்சியறை**

பல்கலைக்கழக மான்ய ஆணைக்குழுவில் அங்கீகாரம் பெற்ற பல்கலைக்கழகம் ஒன்றில் எம்.பி.ஏ. பட்டம் பெற்ற அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக நிறுவனம் ஒன்றில் காட்சி அறை தொடர்பான 05 வருட அனுபவமுள்ளவர்.

**முகாமையாளர் - சந்தைப்படுத்தல் காட்சி அறை**

பட்டம் / சிம் / சிலிம் அல்லது சமாந்தரமான தகைமையுடன் காட்சி அறை செயற்பாட்டில் 05 வருட அனுபவமுடையவர்கள்.

**காட்சி அறை முகாமையாளர் / உதவி முகாமையாளர்**

பட்டம் / சிம் / சிலிம் / அல்லது சமமான தகைமையுடன் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக நிறுவன காட்சி அறை செயற்பாட்டில் முன்பெற்ற இருவருட அனுபவம் அல்லது சந்தைப்படுத்தல் டிப்ளோமா / அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம் ஒன்றில் காட்சி அறை செயற்பாட்டில் மூன்று வருட அனுபவத்துடன் சமாந்தரமான தகைமை /அல்லது க.பொ.த. உயர்தர மற்றும் சாதாரண தரத்துடன் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக நிறுவனம் ஒன்றில் காட்சி அறை செயற்பாடு தொடர்பான 05 வருட அனுபவம்.

**விற்பனை மேம்பாட்டு உதவியாளர்**

கல்வி பொதுத் தராதர உயர்தரம் மற்றும் க.பொ.த. சாதாரண தரப் பரீட்சையில் கணிதம், சிங்களம் / தமிழ் மொழி, விஞ்ஞானம் ஆகிய பாடங்களுடன் நான்கு திறமைச் சித்தியும் அங்கீகரிக்கப்படட வர்த்தக நிறுவனம் ஒன்றில் ஒரு வருட காட்சி அறை அனுபவம்.

ஜவுளி / கையுறைகள் / பாதணிகள் / நறுமணப் பொருட்கள் / ஆபரணங்கள் / கொஸ்மெடிக் / சொக்கலட்வகை / தேயிலை உற்பத்திகள் அலுவலக வழங்கல்கள் மற்றும் உபகரணங்கள், வீட்டு உபகரணங்கள் மின்சார / மற்றும் இலத்திரனியல் உபகரணங்கள் விரைவாக விற்பனையாகும் பாவனையாளர் உபகரணங்கள் விவசாய உபகரணங்கள், இயந்திர உபகரணங்கள் (வன்பொருள்) உள்ளக வடிவமைப்பு மற்றும் அலுவலக மருந்தகப் பொருட்கள்

ஆங்கிலம், தமிழ், சிங்கள மொழிப் புலமை கணனி அறிவு மேலதிக தகைமைகளாகும். வயது 45 க்குக் கீழ் சம்பளம் பேசி முடிவெடுக்கப்படும்.

சான்றிதழ்களின் பிரதிகளுடன் தொடர்பு கொள்ளும் முகவர் உறவினர்களல்லாத இரு நடுவர்களை உள்ளடக்கிய சுய விபரக் குறிப்புடன் மார்ச் 27ஆம் திகதிக்கு முன் கீழ் வரும் முகவரிக்கு விண்ணப்பிக்கவும்.

**தலைவர் முகாமைத்து பணிப்பாளர்**
**இலங்கை அரச (பொது) வர்த்தக கூட்டுத்தாபனம்**
**இல. 100,**
**நவம் மாவத்தை,**
**கொழும்பு - 02**

| | |
|---|---|
| தொலைபேசி இல. | : 011 2422341 / 2440880 |
| தொலைநகல் | : 011 2447970 |
| மின்னஞ்சல் | : lankagen@sltnet.lk; |
| வலைத்தளம் | : www.stcgeneral.com |






# மு.கா. தலைவர் ஹக்கீமுடன் ஏன் முரண்பட்டேன்

## மு.கா. பிரமுகர் அன்சில் கடும் விளக்கம்

**நான் ஏன் முஸ்லிம் காங்கிரஸ் தலைவருடன் முரண்பட்டேன் என்று பாலமுனை பொது மக்கள் மத்தியில் கடந்த ஞாயிற்றுக்கிழமை கருத்து தெரிவிக்கும்முகமாக ஏற்பாடு செய்யப்பட்ட மக்கள் மன்றில் அட்டாளைச்சேனை பிரதேச சபையின் முன்னாள் தவிசாளர் சட்டத்தரணி எம்.ஏ.அன்ஸில் ஆற்றிய உரையின் தொகுப்பு-**

**✱ அஹமட் ஸிறாஜ் இஸ்ஸதீன்**

மர்ஹூம் அஷ்ரப் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் என்ற கட்சியை எந்த நோக்கத்திற்காக ஆரம்பித்தாரோ. அந்த நோக்கம் இன்று அந்த கட்சியில் இருந்து தூரமாக்கப்பட்டுள்ளது. என்ற காரணத்திற்காகவே தலைவர் ரவூப் ஹக்கீமுடன் முரண்பட வேணடிய சூழ்நிலை எனக்கேற்பட்டது என்று அட்டாளைச்சேனை பிரதேச சபையின் முன்னாள் தவிசாளரும் ஸ்ரீலங்கா உயர் பீட உறுப்பினரும் முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் பாலமுனை அமைப்பாளருமான சட்டத்தரணி எம்.ஏ.அன்ஸில் தெரிவித்தார்.

நான் ஏன் தலைவர் ரவூப் ஹக்கீமுடன் முரண்பட்டேன் என்று பொது மக்களுக்கு விளக்கமளிக்கும் மக்கள் மேடை கடந்த ஞாயிற்றுக்கிழமை பாலமுனை பிரதான வீதியோரம் அமைந்துள்ள மக்கள் வங்கிக்கு முன்பாக நடைபெற்ற பொதுக் கூட்டத்தில கலந்து கொண்டு உரையாற்றும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில்,

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் தற்போதய தலைவருடன் நான் இருந்த நட்புக்கும், அபிமானத்திற்கும் அவருக்கு நம்பிக்கையாக செயற்பட்டவன். ஏன் இன்று அந்த தலைவருக்கெதிராக பேசுகின்றேன் என்று நீங்கள் யோசிக்கலாம் சிந்திக்கலாம். அதற்கு காரணம் இருக்கின்றது. நான் தலைவருடன் நம்பிக்கையாகவும் நேர்மையாகவும் ஹக்கை ஹக்கு என்றும் பாத்திலை பாத்தில் என்றும் சொன்னவன் தான். ஆனால் இன்று எமது சமூகத்திற்காக சமூகத்தின் விடிவுக்காக ஆரம்பிக்கப்பட்ட இந்த கட்சி வழிமாறி, திசைமாறிச் சென்று கொண்டிருக்கின்றது. அதனை சீரிய வழியில் செலுத்த வேண்டுமென்று முயற்சிகள் பல மேற்கொண்டும் அது பலனளிக்கவில்லை. தோல்வியடைந்ததன் காரணத்தினால்தான் இன்று உங்களிடம் எந்த முடிவையும் கேட்காமல் தனியாக வெளியேறி நான் வெளியேறியதற்கான காரணத்தை கூறும் முகமாகத்தான் இந்த மக்கள் சாதிக்க முடியுமென்று நினைத்துதானே சகோதரர்களே. நாம் நினைத்ததொன்று நடைபெறுவதொன்று இதனால் இவ்வாறான பிரச்சினைகளை தொடர்பாகவும். மஹிந்தவை ஆதரிப்பதற்கு வளி நாட்டு உளவாளிகளிடமிருந்து கோடிக்கணக்கில் பணங்கள் பெறப்பட்ட அந்த உண்மையான செய்தியை அது தொடர்பான விளக்கங்களை கேள்விகள் கேட்பதற்கு வெளிக்கிட்ட வேளையில்தான் எனக்கு முரண்பட வேண்டிய நிலை ஏற்பட்டது. இந்த கட்சியில் சமூகத்தின் உரிமைகள் பற்றி சிந்திப்பதற்கும் பேசுவதற்கும் யாரும் இல்லை. சமூகத்தின் உரிமை பற்றி பேசியதன் காரணத்தினால்தான் இன்று மக்கள் மேடையினை ஒழுங்கு செய்து இன்று பேசிக் கொண்டிருக்கின்றேன். இப்போது உங்களுக்கு விளங்கும். எனது கருத்தை முழுமையாக கேட்டால் உங்களுக்கு இலகுவாக புரிந்து கொள்ளமுடியும். எனது கருத்துடன் ஒத்தவர்களாக நீங்கள் அனைவரும் உடன் படுவீர்கள் என்ற ஆதங்கத்துடன் நின்று பேசிக் கொண்டிருக்கின்றேன்.

### கட்சி ஆரம்பிக்கப்பட்ட நோக்கம்.

எமது முஸ்லிம் சமூகம் பேரினவாத கட்சிகளுக்குள் அள்ளுண்டு எமது சமூகத்திற்கான பிரதிநிதிகள் பேரினவாத கட்சிகளுடன் சேர்ந்து கொண்டு பேரினவாத சக்திகள் அன்று சிறுபான்மை முஸ்லிம் சமூகத்திற்கெதிரான செயற்பாடுகளில் ஈடுபட்டிருந்த வேளைகளில். உதாரணமாக சொல்லப் போனால் 1976ஆம் ஆண்டு காலப்பகுதியில் புத்தள பள்ளிவாசலில் தொழுது கொண்டிருந்த முஸ்லிம் சகோதரர்களை சுட்டுக் கொலை செய்யப்பட்ட போது அன்றைய அரசில் ஆட்சியாளர்களுடன் ஒட்டிக் கொண்டிருந்த முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்கள் வாய் மூடி மௌனிகளாக இருந்தார்கள். இவ்வாறு பேரினவாத அரச ஆட்சியாளர்களின் கொடூரங்களும் பயங்கரவாதிகளின் அட்டூழியங்களும் அநியாயங்களும் முஸ்லிம் சமூகத்திற்கெதிராக தாண்டவமாடிய போது எமது சமூகத்தினருக்கு ஆதரவாக தைரியமாக பேசமுடியாத நிலை அன்றிருந்த முஸ்லிம் அரசியல் தலைமைகளுக்கு ஏற்பட்டது.

இதனை உணர்ந்த மர்ஹூம் அஷ்ரப் முஸ்லிம் சமூகத்துக்கென்று ஓர் இயக்கம் தேவை கட்சி தேவை என்று உணர்ந்தார்கள். அந்த உணர்வின் வெளிப்பாடுதான் அஷ்ரப் என்ற தனிமனிதரால் ஆரம்பிக்கப்பட்ட சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் என்ற பேரியக்கம் இன்று ஆல விருட்சமாக மாறியிருக்கின்றது. உண்மையிலே அஷ்ரப் எமது சமூகத்தின் விடிவுக்காக பல சாதனைகளை நிலை நாட்டி விட்டுத்தான் மரணித்துள்ளார்கள். அவர்களினால் சாதிக்கப்பட்டவைகள் அன்னவர்களினால் எமது சமூகத்திற்கு ஏற்படுத்தி கொடுக்கப்பட்ட எத்தனையோ விடயங்களை குறிப்பிடலாம். ஆனால் அவரது மறைவுக்குப் பின்னரான காலப்பகுதிகளில் இந்த கட்சியை முன்னெடுத்துச் செல்லும் சகோதரர் ரவூப் ஹக்கிம் எமது சமூகத்திற்காக சாதித்தவைகள்தான் என்ன. ஒன்றுமே இல்லை. இதனால்தான் நான் பல உண்மைகளை சமூகத்தின் நன்மைக்காக கேட்க வெளிக்கிட்ட போதுதான் எனக்கும் தலைவருக்கும் முரண்பட வேண்டியேற்பட்டது. நான் தலைவரிடம் கட்சியின் கோட்பாடுகள் கொள்கைகள் மீறப்படுவதாக கேட்டது பிழையா? சகோதரர்களே. இந்த இடத்திலிருந்துதான் எனக்கும் அவருக்கும் முரண்பாடு எழுகின்றது.

### விலை பேசப்படும் முஸ்லிம் சமூகத்தின் உரிமைகள்

கடந்த ஜனாதிபதி தேர்தல் காலத்தின் போது எமது சமூகத்தின் பிரச்சினைகள் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைமையினால் முன்னிறுத்தப்படவில்லை. மஹிந்தவை ஆதரிப்பதா? மைத்திரியை ஆதரிப்பதா? என்று திண்டாடிக் கொண்டிருந்த வேளையில், மக்கள் எல்லோரும் மைத்திரியை ஆதரிக்க வேண்டுமென்ற சூழ்நிலையில். இருந்த போது அந்த மக்கள் கருத்துடன் நானும் ஹஸனலி உட்பட ஒரு சிலரைத் தவிர மஹிந்தவை ஆதரிப்பதற்காக எமது கட்சியின் தலைவர் உட்பட அனைத்து பாராளுமன்ற உறுப்பினர்களும் மாகாண சபை உறுப்பினர்களும் உயர்பீடத்திலுள்ள இன்னும் பலரும் பல கோடி பணங்களை பெற்று அடிமைப்பட்டிருந்தனர். உயர்ரக உல்லாச விடுதிகளிலே தங்க வைக்கப்பட்டிருந்தனர். நாம் இந்த கட்சியின் பின்னாலும் தலைமையின் பின்னாலும் அள்ளுண்டு சென்றதன் நோக்கம் எமது சமூகத்தின் பிரச்சினைகளை உரிமைகளை வெல்ல முடியும் மேடை முன் பேசிக் கொண்டிருக்கின்றேன். சகோதரர்களே இப்போது சொல்லுங்கள் நான் செய்தது சரியா பிழையா? என்று.

### என்னை ஓரங்கட்டுவதற்கான முயற்சி

எனக்கு விளங்கி விட்டது நான் கொண்டு சென்ற எமது கிராமத்தின் அபிவிருத்தி மற்றும் இந்த கட்சிக்காக இரவு பகல் கண் விழித்து உழைத்த இளைஞர்களின் தொழில் வாய்ப்பு தொடர்பாக கொண்டு சென்ற எனது கோரிக்கைகள் கிடப்பில் போடப்பட்டன. அங்கே தலைமையிடமிருந்து ஓடர் பிறப்பிக்கப்பட்டிருந்தது. நான் விடயங்கள் கொண்டு வந்தால் அதனை நிறைவேற்றி கொடுக்காமல் விடுங்கள் என்று சொல்லி. அது எனக்கு விளங்கி விட்டது தலைவரிடம் கேள்வி கேட்டதன் காரணத்தினால்தான் எனது விடயங்கள் அங்கு நடைபெறவில்லை. என்னை ஓரங்காட்டப்படுவதற்கான. நடவடிக்கைகள்தான் இது என்று உணர்ந்து கொண்டேன்.

இப்போது என்மீது பழி சுமத்துகின்றனர். நான்தான் இந்த கிராமத்திற்கு வந்த



அபிவிருத்தி வேலைகளுக்கு தடையாக இருந்ததாகவும் இளைஞர்களுக்கான தொழில் வாய்ப்புக்களை பெற்றுக் கொடுக்க முயற்சி எடுக்கவில்லை என்றும் நான் சொல்லுகின்றேன். அபிவிருத்திக்கு தடையாக இருக்கவில்லை எமது சமூகத்தின் மீதான உரிமைகளுக்கெதிரான செயற்பாடுகளுக்கு தடையாக செயற்பட்டேன். கட்சி தொடர்பான பிழையான விடயங்களைத்தான் தலைவரிடம் சுட்டிக் காட்டினேன் தவிர எனது சுயநலத்திற்காக இந்த கட்சியில் நான் பேச வில்லை. இதுதான் இன்று நான் உங்கள் முன் பேசிக் கொண்டிருப்பதற்கான காரணமும். ஓரங்கட்டப்பட்டதற்கான காரணமும் சகோதரர்களே.

### ஹஸனலிக்காக பேசவில்லை

இன்று நான் ஹஸனலியின் தனிப்பட்ட பிரச்சினைக்காக அவருடன் சேர்ந்து போராடவில்லை. கட்சியின் முன்னாள் செயலாளருக்கு அநீதி இழைக்கப்பட்டுள்ளது. அவருக்கும் இந்த கட்சியில் எனது நிலைதான். ஹஸனலியின் போராட்டம் கட்சி நேரான பாதையில் செல்ல வேண்டும். தலைவர் மர்ஹூம் அஷ்ரப் ஆரம்பித்த நோக்கம் இன்று இந்த கட்சியில் இல்லை. அந்த நோக்கத்தை இந்த கட்சி அடைந்து கொள்ள வேண்டுமென்றுதான் ஹஸனலி இன்று போராடிக் கொண்டிருக்கின்றார். இந்த கட்சியின் முன்னாள் செயலாளர் நாயகம் ஹஸனலி கேள்வி கேட்கப் போய்த்தான் இன்று அவருக்கு நேர்ந்த கதி எனக்கும் ஏற்பட்டுள்ளது. அதனாலே இன்று இருவரு ஒரு அணியாக இருந்து போராடுகின்றோம்.

### சுய நல அரசியல் என்னிடமில்லை

இந்த கட்சி கடந்த 10 ஆண்டுகளாக அதிகாரமில்லாது இருந்த வேளையில் சுய நலம் எங்களிடம் இருந்திருந்தால் அபிவிருத்தி அரசியலை அதாஉல்லா, றிஷாத், தயா கமகே போன்றோருடன் சேர்ந்து இந்த கிராமத்தை அபிவிருத்தி செய்திருக்கலாம். நிறைய உழைத்திருக்கலாம். ஆனால் அந்த சுயநல அரசியல் எங்களிடமில்லை. சமூகத்திற்கான அரசியலைத்தான் நாங்கள் மேற்கொண்டோம். எங்களுக்கு மறைந்த தலைவர் மர்ஹூம் அஸ்ரப் அவர்கள் கற்றுத்தந்து விட்டு மரணித்துச் சென்றது. சுயநல அரசியலையும் சமூகத்தின் விடிவுக்கான உரிமைக்கான அரசியலையும்தான். இன்று நாங்கள் அதனைத்தான் செய்து கொண்டிருக்கின்றோம். இன்று தலைவருடைய கொள்கை கோட்பாடுகளிலிருந்தும் இந்த கட்சி வழிதவறிச் சென்று கொண்டிருக்கின்றது. வழிதவறிச் சென்று கொண்டிருக்கும் இந்த இயக்கத்தை சீரிய வழியில் கொண்டு செல்ல வேண்டும். இந்த கட்சியைப் பணத்திற்காக சோரம் போவதிலிருந்து விடுவிக்க வேண்டும். என்ற ஒரே காரணத்திற்காகவே நாங்கள் வேறு கட்சிகளுடன் சேர்ந்து போராடாமல் இந்த கட்சியிலிருந்தே எமது போராட்டத்தை ஆரம்பித்துள்ளோம் சகோதரர்களே.

என்னிடம் தலைவர் ஒரு முறை சொன்னார் நீங்கள் அவசரப்பட வேண்டாம். அட்டாளைச்சேனைக்கு தேசியப்பட்டியல் மூலம் எம்.பி பதவி வழங்கினால் மாகாண சபை தேர்தல் கேட்கும் அதிகாரம் உங்களுக்கு கிடைக்கும் நீங்கள் மாகாண சபைக்கு சென்று விடலாம் என என்னிடம் பேரம் பேசப்பட்டது. அதற்கு நான் விலை போகவில்லை எனக்கு இந்த ஆசை வார்த்தைகளை காட்டி என்னை பேசாமடந்தையாக்கி விடலாமென்று தலைவர் மற்றவர்களைப் போன்று என்னையும் நினைத்தார்.இதனை நான் ஏற்றுக் கொள்ளவில்லை. இதனை அன்று நான் ஏற்றிருந்தால் இன்று இந்த கட்சி செய்கின்ற அனைத்து விதமான பிழைகளுக்கும் நானும் பொறுப்பாளியாக ஆகியிருப்பேன். எனக்கு பதவி பட்டங்கள் தேவைப்பட்டால் அந்த நேரம் அம்பாறை மாவட்டத்தில் எல்லா அதிகாரங்களுடனும் இருந்து செயற்பட்ட அதாஉல்லா அமைச்சர் றிஷாத் பதியுதீன் அமைச்சருடன் சேர்ந்து எனது அரசியலை இந்த கிராமத்தில் முன்னெடுத்திருக்கலாம். ஆனால் சுயநல அரசியலுக்காக சோரம் போகவில்லை. சமூகத்தின் அரசியலைத் தான் கோட்பாடு கொள்ளையாக கொண்டிருந்தேன். சகோதரர்களே.

### வேண்டு கோள்

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் கொள்கை கோட்பாடுகளுக்கெதிராக முஸ்லிம் சமூகத்தின் முகவரியை, உரிமைகளை விலைக்கு காவுகொடுப்பதற்கு எத்தணிக்கும் முதலமைச்சர் மற்றும் சல்மான் போன்றோர். கூறும் கூற்றுக்களையும் அவர்களது பிடிக்குள் இருக்கும் கட்சியின் தலைமை சகோதரர் றவூப் ஹக்கீமே இந்த கட்சி வெந்நீராலும் கண்ணீராலும் பல தியாகங்களை செய்து வளர்த்தெடுத்த கட்சி இது. இந்த கட்சியை முஸ்லிம் சமூகத்தின் உரிமைக் குரலாக தலைவர் விட்டுச் சென்ற இடத்திலிருந்து கொண்டு செல்லுவதற்கு உங்களால் முடியாதென்றால் எங்களிடம் கட்சியை ஒப்படைத்து விட்டு தயவு செய்து வெளியேறுங்கள். சுயநலத்திற்காககவும், பணத்திற்காகவும் எமது சமூகத்தின் பேரியக்கத்தை விற்று விடாதீர்கள் என்று கேட்டுக் கொள்வதுடன் எமது சமூகத்தின் விடுதலைக்கான பயணத்தில் கட்சியை சுயநலவாதிகளிடமிருந்து மீட்டெடுக்கும்வரை ஒரு போதும் நாங்கள் ஓயப்போவதில்லை. எங்களது பயணத்தில் அனைவரும் ஒன்று திரண்டு முன்வாருங்கள்.

---

# மு.கா. போராளி ஹனீபாவிடம் இருந்து ஹசனலிக்கு கடிதம்

என் இனிய நண்பர் ஹஸனலிக்கு,
எனது பிரார்த்தனைகள்.

நண்பனே! தேசத்தின் முன்னாலும் குறிப்பாக நமது சமூகத்தின் மத்தியிலும் உங்களால் முன்வைக்கப்படும் உண்மைகளும் யதார்த்தங்களும் கவனத்திற் கொள்ளப்படாமைக்குக் காரணம் என்ன? கட்சியின் சரிபாதை உரிமையாளனாக

நீங்கள் கொலுவிருந்த காலத்தில், இந்த உண்மைகளில் எதையுமே சொல்லவில்லை. மாறாக

நீங்கள் சேர்ந்து கட்டிக் காத்த அந்தரங்கங்களை எந்தவித உரிமையுமற்றிருக்கும் இந்த நாளில் நடுத்தெருவுக்கு வந்து நின்று அள்ளி வீசுவதில் என்ன நியாயம் இருக்கிறது?

உங்கள் உண்மைகளும் யதார்த்தங்களும் உள்ளது போல், நீங்களும் இன்று சாயம் வெளுத்து பத்தோடு பதினொன்றாகிப் போனீர்கள். காலங்கடந்த ஞானம் ஒரு போதும் நம்மைக் கரை சேர்க்காது. கடந்த ஒரு தசாப்தகாலமாக நமது முஸ்லிம் அரசியல் தலைமைகளால் நமது மக்கள் நட்டாற்றில் கைவிடப்பட்ட போதெல்லாம் – நீங்கள் வெள்ளையுடுத்து அல்லாஹ்விடம் முறையீடு செய்ய உம்ரா செல்லவில்லை. மாறாக, நீங்கள் ஏமாற்றப்பட்டதற்காக கைவிடப்பட்டதற்காக இறைவனைத் தேடி கஃபாவுக்குச் சென்றிருக்கிறீர்கள். மர்ஹூம் அஷ்ரபின் மண்ணறையையும் தரிசித்திருக்கிறீர்கள்.

'எனக்கு அநியாயம் செய்து விட்டார்கள்' என்ற உங்களின் வார்த்தையை எங்களுக்கென்றாவது சொல்லியிருந்தால், ஒரு வீதமாவது பெறுமதி கொண்டிருக்கும்.

நண்பனே!

ஒரு சிறு விடயத்தை மட்டும் சொல்லி கடிதத்தை முடித்துக் கொள்கிறேன்.

தலைவரின் மௌத்தைத் தொடர்ந்து சகோதரர் ஹகீம் தலைமைப் பதவியையும் அமைச்சுப் பதவியையும் பொறுப்பேற்ற அந்த நாட்களில், ரக்ஷணமந்திரவுக்கு என்னை நீங்கள் விடாப்பிடியாக அழைத்து, இவ்வாறு கூறியதை எண்ணிப் பாருங்கள்:

'எஸ்.எல்.எம்.! என்னைப் பற்றி ஹகீமுக்கு அவ்வளவாகத் தெரியாது. கட்சியோடு நான் எப்படித் தொடர்புபட்டவன் என்பதை நீங்கள் அவருக்கு அழகாக எடுத்துக் கூற வேண்டும்' என்றீர்கள்.

அன்பான உங்களின் வேண்டுகோளை ஏற்று, உடனலக் குறைவோடும் கொழும்பு வந்து சகோதரர் ஹகீமுக்கு முன்னால், நான் உங்களுக்காக சாட்சியமளித்ததை எண்ணிப் பாருங்கள். அன்று நான் உங்களிடம் கையளித்து வந்த பல நூற்றுக் கணக்கான அரிய புகைப்படங்களும் இன்று அதற்கு சாட்சி சொல்லுமல்லவா? அதற்குப் பிறகு நீங்கள் மூன்று தடவைகள் பாராளுமன்றத்திற்குச் சென்றிருக்கிறீர்கள். ஒரு நாளாவது உங்களின் இந்த நண்பனை நீங்கள் நினைவு கூர்ந்திருப்பீர்களா?

எனவே, நாம் ஒவ்வொருவரும் நமக்கு சந்தர்ப்பங்களும் அனுகூலங்களும் வரப்பிரசாதங்களும் கிடைக்கும் போது, வழிகாட்டியவர்களை இலேசாக மறந்து விடுகின்றோம்.

இன்று அதுதான் உங்களுக்கும் நடந்திருக்கிறது.

பிரதி சுகாதார அமைச்சராக நீங்கள் இருந்த போது, வாழைச்சேனைக்கும் வருகை தந்தீர்கள். உங்களைக் கண்டு கதைப்பதற்காக நான் வந்தேன். என்னால் முடியவில்லை. வாழைச்சேனை ஆஸ்பத்திரிக்கு உங்கள் காலத்தில் எமது பகுதி மக்களின் சூத்தைப் பற்களைப் பிடுங்கிக் கொள்வதற்காவது ஒரு கதிரையையாவது தங்களிடம் பெற்றுக் கொடுக்கலாம் என்ற ஆசை எனக்கு இருந்தது. நீங்கள் எதுவுமே செய்யவில்லை.

அமைதியடையுங்கள் நண்பனே! சமூகத்திற்கு நல்வழி காட்டுங்கள்.

உங்கள் பிரார்த்தனையில் என்னையும் இணைத்துக் கொள்ளுங்கள்.

தொடர்ந்து நான் உங்களுக்கு இவ்வாறான சில கடிதங்கள் எழுத இருக்கிறேன்.

விடை பெறுகிறேன்.



# கிழக்கில் உயிர்கொல்லி டெங்கு..!

## அச்சத்தில் மக்கள்

**✱ அட்டாளைச்சேனை மன்சூர்**

உயிர்கொல்லி டெங்கு நாடு முழுவதிலும் அச்சுறுத்தலை ஏற்படுத்திவருகின்றது. இருந்தாலும் கிழக்கில் இன்றைய நாட்களில் கடுமையான அச்சுறுத்தலை ஏற்படுத்தியிருப்பது தெரியவந்துள்ளது. வைத்தியசாலைகள் நோயாளர்களாலும், நோய்க்காவி இருக்கின்றதா என்பதை கண்டறியவும் மக்கள்

அதாவது 4136 பேர் கொழும்பில் அடையாளம் காணப்பட்டுள்ளனர். மேலும், கிழக்கு மாகாணத்தை பொறுத்தவரை மட்டக்களப்பில் 510 பேர் , திருகோணமலையில் 810 பேர் மற்றும் அம்பாறையில் 87 பேர் என மொத்தம் 1421 டெங்கு காய்ச்சல் நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இதேவேளை இலங்கையில் நுளம்பினால் பரவும் மலேரியா மற்றும் யானைக் கால் நோய் ஆகிய நோய்கள் பரவும் நாடுகளின் பட்டியலிலிருந்து

திருகோணமலை அரச மருத்துவமனைகளில் சிகிச்சை பெற்று வருவதுடன், பலர் இறந்தும் உள்ளனர்.

அதேவேளை அண்மைய நாட்களில் அக்கரைப்பற்று, அட்டாளைச்சேனைப் பிரதேசங்களிலும் டெங்குக் காய்ச்சல் மற்றும் ஒருவகை வைரஸ் காய்ச்சலால் மக்கள் அவதிப்படுவதாகவும் கூறப்படுகின்றது. அட்டாளைச்சேனையில் இரண்டுபேர் டெங்கு நோய்த் தாக்கம் காரணமாக உயிர் இழந்ததைத் தொடர்ந்து இறந்தவர்கள் வசித்த பிரதேசங்களில் சுகாதார துறையினர் பொலிசாரின் துணைகொண்டு வீடுகளில் நுளம்பு பரவுவதற்கான இடங்களைக் கண்டறியும் செயற்றிட்டத்தினை கடந்த சில நாட்களாக மேற்கொண்டு வந்தனர். அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலை மாத்திரமன்றி அப்பிரதேச ஏனைய வைத்தியசாலைகள் அனைத்திலும் ஒருவகை வைரஸ் காய்ச்சல் பரவியிருப்பதன் காரணமாக மக்கள் தினந்தோறும் இரத்தப்பரிசோதனையை மேற்கொள்வதற்காக வைத்தியசாலைகளை நாடுவதையும் அவதானிக்கக் கூடியதாக இருக்கின்றது.

மக்களின் அன்றாட வேலைகளை ஸ்தம்பிதம் அடையச்செய்யும்

டெங்கு அறிகுறிகள்:-

நுளம்பு கடித்து, நோய்வர 5தொடக்கம் 15 நாட்கள் வரையான காலப்பகுதியாகும். ஆரம்பத்தில் குளிர் ஜுரம், தலைவலி, கண்ணை சுற்றி வலி, முதுகு வலி, பின்னர் கடுமையான கால் மற்றும் மூட்டு வலி நோய் வந்து சில மணிநேரத்தில் இவை வரும். காய்ச்சல் 104 பர்னைட் வரையானதாகக் காணப்படும். இலேசாக நாடித்துடிப்பு குறைதல், இரத்த அழுத்தம் குறைதலும் ஏற்படலாம். கண்கள், சிவந்து போகலாம். உடலில் தோலில் சிகப்பு நிற மாற்றம் ஏற்படலாம். கழுத்து மற்றும் பிறப்பு உறுப்பு அருகே நெறி ஏற்படலாம். இந்த ஜுரம் மற்றும் ஏனைய நோய் அறிகுறிகள் 2 முதல் 4 வரை இருந்து, பின்னர் திடீரென உடல் வெப்பம் குறைந்து, அதிகமான வியர்வை ஏற்படலாம். இந்த காலகட்டத்தில், உடல் வெப்பம் சாதாரணமாக இருந்தாலும், நல்ல ஆரோக்கியமாக இருப்பது போலவே காணப்படும். இந்த காலகட்டம் தான், அநேகர் தாம்



அதேவேளை மருத்துவர் அறிவுரை இல்லாமல், வலி நிவாரணிகளை மேற்கொண்டால் இரத்த இழப்புக்

நிரம்பிவழிகின்றன. மூன்றுநாட்கள் தொடராக காய்ச்சல் இருந்தால் உடனடியாக வைத்தியசாலையை நாடுமாறு சுகாதாரப் பகுதியினர் வீதிகள் தோறும் அறிவுறுத்தி வருகின்றனர். மக்கள் குடியிருப்பு வீடுகள், பாதைகள், நீர்தேங்கிநிற்கும் வடிகான்கள், நிலப்பகுதிகள் போன்றவற்றை சுத்தப்படுத்துமாறும் மக்களை சுகாதார உத்தியோகத்தர்கள் வீடுகள்தோறும் அறிவுறுத்தல் கொடுத்து வருகின்றனர். உண்மையில் ஒரு சிறிய நுளம்புக்கு பயப்படவேண்டிய ஒரு சூழ்நிலையில் மக்கள் அச்சத்தினால் கடுமையான மன உளைச்சலுக்குள்ளாகி வருவதாகவும் வைத்தியர் ஒருவர் தெரிவித்தார்.

இலங்கையில் நாடு தழுவிய ரீதியில் இந்த ஆண்டு டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கையில் கடந்த ஆண்டுடன்

உலக சுகாதார ஸ்தாபனத்தால் கடந்த ஆண்டு இலங்கை முற்றாக விடுவிக்கப்பட்டிருந்தமை முக்கியமான விடயமாகும். இருப்பினும் இப்போது டெங்கு காய்ச்சலுக்கு எதிராகப் போராட வேண்டிய நிலைமை தோற்றம் பெற்றுள்ளதையும் கூறவேண்டியிருக்கிறது. குறிப்பாக திருகோணமலை மாவட்டத்திலுள்ள கிண்ணியா மற்றும் மூதூர், உப்புவெளி, திருகோணமலை போன்ற பிரதேசங்களில் டெங்கு

கள் அதிகமாகலாம். 1சதவீதத்திற்குக் குறைவான டெங்கு தான் உயிரிழப்பில் போய் முடிவடைவதாகவும் கூறப்படுகின்றது. Hemorrhagic Fever என்னும் டெங்கு இரத்தம் கசிதல் ஜுரமாகி பாதிப்பினை ஏற்படுத்துகின்றது. இந்த வகையான டெங்குவால் பாதிக்க பட்டவர்களுக்கு



ஒப்பிடுகையில் அதிகரிப்பு காணப்படுவதாக மத்திய சுகாதார அமைச்சகம் கூறுகின்றது. இந்த ஆண்டின் முதல் இரண்டு மாதங்களில் 16479 பேர் அடையாளம் காணப்பட்டுள்ளனர். கூடுதலானோர் கொழும்பு மாவட்டத்திலே இனம் காணப்பட்டுள்ளனர்.

என சந்தேகிக்கப்படும் 1300 பேர் வரை சுகாதார துறையினரால் அடையாளம் காணப்பட்டுள்ளதாக கடந்த வாரத்தில் தெரிவிக்கப்பட்டிருந்த நிலையில், 500க்கும் அதிகமானோர் கிண்ணியா பிரதேசத்தில் டெங்கு காய்ச்சல் அறிகுறிகளுடன், கிண்ணியா மற்றும்

அளவுக்கு மக்கள் டெங்கு நோய்க்குப் பயந்து காணப்படுவதையும், உடம்பில் காய்ச்சல் கண்டவுடன் ஒருவகையான பயச்சூழல் காரணமாக உடனடியாகவே வைத்தியசாலைகளை நாடுவதையும் அவதானிக்கக் கூடியதாக இருக்கிறது. இப்பிரதேசங்களில் கடந்த காலங்களில் இத்தகையதொரு காய்ச்சல் பரவலான முறையில் வந்ததாக இல்லை. ஆனால் தற்போதைய காலநிலை காரணமாகவும், கழிவுப்பொருட்களை அவதானமின்றி தூக்கிவீசுவதனால் தேங்கிநிற்கின்ற நீர் மற்றும் ஈரலிப்பான இடங்களில் நுளம்பின் பெருக்கம் அதிகரித்துக் காணப்படுவதுமே இத்தகைய காய்ச்சலுக்குக் காரணம் எனவும் சுகாதாரத் துறையினர் கூறிவருகின்றனர். எதுவாக இருந்தாலும் மக்களின் சுகாதாரப்பாதுகாப்பில் அரசு கடும் முனைப்புடன் நடந்து வருவதை மக்கள் பாராட்டியும் வருகின்றனர். மக்களின் வாழ்வாதாரத்தில் அதிக பங்குகொண்ட சுகாதாரம், சுகாதாரத்துடன் வாழ்வதற்கான நடைமுறைகளையும் மக்கள் ஒவ்வொருவரும் கவனத்திற் கொள்ளும் பட்சத்தில் நம்மை நோய்த்தாக்கம் நெருங்காது என்பது மட்டும் உறுதி.

நோயிலிருந்து மீண்டுவிட்டோம் என்று பொடுபோக்காக இருந்துவிடுகின்றனர். சில நாட்கள் கழித்து மீண்டும் ஜுரம் மற்றும் தோலில் நிற மாற்றம், முகம் தவிர எல்லா பகுதியிலும் தோன்றலாம். உள்ளங்கை மற்றும் கால் பாதம் சிவந்து தடித்துக் காணப்படலாம். இவைகளே டெங்குக்கான அறிகுறிகளாக கூறப்படுகின்றன.

**டெங்கினை எப்படி கண்டுபிடிப்பது?**

டெங்கு நோயின் ஆரம்ப கால அறிகுறி, மற்ற வைரஸ் நோய் போல் இருந்தாலும், டெங்கு பரவும் காலகட்டத்தில், இந்த நோய் பரவும் பகுதியில் இருந்தாலோ, அல்லது அந்த பகுதிக்கு சென்று வந்தாலோ, மேலே கூறிய நோய் அறிகுறிகள் இருந்தால், டெங்கு இருக்கும் வாய்ப்பு இருப்பதாக கருதி மருத்துவரை கலந்து ஆலோசிக்க வேண்டும். டாக்டர்கள் பிரத்தியேக இரத்தப் பரிசோதனை மூலம் இந்த நோயை கண்டு கொள்வர்.

**டெங்குக்கான சிகிச்சை**

இதற்கு தனியான மருந்து மாத்திரை மருந்துகள் கிடையாது. காய்ச்சலை குறைக்க சாதாரண பரசிடமோல், போதிய ஓய்வு, நன்றாக நீர் ஆகாரங்கள் உட்கொள்ளுதல் போன்றனவே இதற்குரிய சிகிச்சையாகும்.

வயிற்று வலி, இரத்த கசிவு, மற்றும் ஷொக் என்ற மோசமான உடல்நிலை உருவாகலாம். இந்த வகை டெங்கு, தொடர்ந்து அதிக ஜுரம், தலைவலி ஏற்படலாம். இருமல், வாந்தி, குமட்டல், வயிற்று வலியும் எற்படலாம். 2 முதல் 6 நாட்கள் கழித்து கை கால்கள் குளிர்ந்து போய், நாடித்துடிப்பு குறைந்து மோசமான நிலைக்கு கொண்டு சென்று விடுவதாகவும் வைத்தியர்கள் கூறுகின்றனர்.

தோலில் இரத்த கசிவு, இரத்த வாந்தி, மலத்தில் இரத்தம் போய் கறுப்பு மலம், பல் ஈரலில் இரத்த கசிவு, மூக்கில் இரத்தம், போன்ற ஏதாவது ஒன்று வரலாம். நிமோனியாவும் ஏற்படலாம். இதனால் இருதயமும் பாதிக்கலாம். எனவே, டெங்கு நோய்த் தாக்கத்திலிருந்து எம்மையும், எமது மக்களையும் காப்பாற்ற வேண்டிய பாரியபொறுப்பு சுகாதாரத்துறையினரின் பக்கம் இருந்தாலும் பொதுமக்களிடமும் அதற்கான பாரிய பங்களிப்பு காணப்படுகின்றது. அதனை முன்னிலைப்படுத்தி சுத்தமே சுகாதாரம், சுகாதாரமே ஆதாரம் என்று வாழ்வதற்கு எம்மை நாம் வழிப்படுத்திக் கொள்வோம். டெங்கிலிருந்து வீட்டையும் நாட்டையும் காப்போம்.

# அரசியலமைப்பு அரசாங்கத்தை மீளக்கட்டியெழுப்புதல்

**சூரி ரத்னபால**

**(கடந்த வார தொடர்ச்சி...)**

நலன்புரி அரசு / மாநிலம் அதன் அதிகூடிய ஆர்வமுறைகளில், சர்வதேசப் போட்டித்தன்மைக்கு தம்மை வெளிப்படுத்தாது நிலைத்து நிற்பதென்பது முடியாது. எனினும், அத்தகைய போட்டி அதை நிறைவேற்றியது. மேற்கத்திய நாடுகளுக்கான சந்தை வாய்ப்பை ஏற்படுத்திய மூன்றாம் மண்டலங்களுடன் ஒப்பிடுகையில் சமூக சனநாயகவாதிகள் ஜாம்பவான்களாகிவிட்டனர். அவர்களின் சிந்தனைமிக்க சக்திகள் அவர்கள் பெற்றுக் கொண்ட அடைவுகளை அழித்துவிடும் என்பது கேள்விக்குறியானது. அத்தகைய அழிவுதான் அவர்கள் கொண்டுவந்த சுருக்கமான வழிமுறையாகும். இத்தகைய அனைத்துப் பாடங்களிலிருந்தும் நாம் பெற்றுக்கொண்டவை யாதெனில், எதிர்வு கூறமுடியாமை, குறைந்த அளவு கட்டுப்பாடு, சுயாதீன ஒழுங்கிலமைந்த எமது வடிவமைப்புகளின் பெறுபேறுகள் ஆகியவையாகும். வடிவமைப்பு உள்ளீடுகளை நாம் வழங்க முடிந்தபோதும் எது பாதுகாக்கப்பட வேண்டுமென்பது தொடர்பில் கற்றாடல் தெரிவு செய்வதோடு, இத்தகைய விடயங்கள் எந்த வடிவமைப்பில் மற்றும் உருவில் பாதுகாக்கப்பட வேண்டுமென்பதையும் தீர்மானிக்கிறது.

சமூகங்கள் சுயகட்டளையிடும் முறைமைகள் நாங்கள் சுறுசுறுப்பற்றவர்களாக அதன் சுயாதீனமான / எழுந்தமான மீள் ஒழுங்குபடுத்தல்களை அவதானித்தல் தொடர்பில் எவ்வித ஆலோசனைகளையும் வழங்குவதில்லை. எனவே ஆத்மரீதியில் விழிப்பாக இருப்பதே சிறந்த களமாகும். செல்வாக்கான அரசியல் அகன்றுவிட்டது என நாம் சிந்திப்பது மிக மோசமான தவறாகும். தேர்தலின்போது தெரிவாவதற்கு மீள பகிர்ந்தளிப்பு என்பது பிரதான வழிமுறைகளில் ஒன்றாக எப்போதும் நிலைத்து நிற்கும். இத்தகைய தேர்தல் விளையாட்டில் உள்ளடக்கப்படுவது எப்போதும் அரசியலமைப்பு அரசாங்கத்திற்குச் சவாலாக நிலைத்துள்ளது.

அரசியலமைப்பு அரசாங்கத்தைப் பாதுகாத்து செழிப்படையச் செய்வதற்கு மேற்கொள்ளப்படும் முயற்சிகள். முன்பு கலந்தாராயப்பட்ட நான்கு நிபந்தனைகளையும் கவனத்திற்கொள்ள வேண்டும். முதலில், சகல மட்டங்களிலும் சட்ட ஆட்சி பற்றிய கருத்தியல் பற்றிய புலமைசார் போராட்டம் தொடரவேண்டும். மேலும், பகிரங்க மற்றும் தனியார் தத்துவங்களின் மீதான பொதுச்சட்டங்களின் மீயுயர்தன்மை பற்றிய மரபுரீதியாக புரிந்துணர்வை மீட்டெடுத்தல். இரண்டாவது, சட்ட ஆட்சி பற்றிய மரபு ரீதியான புரிந்துணர்வானது அரசியலமைப்பு பொருள்கோடல், சட்டவாக்கச் செயற்பாடு மற்றும் பொது நிருவாகம் ஆகியவை தொடர்பில் தெரியப்படுத்துவதோடு உத்தியோகபூர்வ அரசியலமைப்பு மரபுரீதியான இலட்சிய அரசியலமைப்புடன் மிக நெருக்கமாக இணங்கியொழுகுகிறது என்பதாகும். இந்த அடிப்படையில் சட்டத்தரணிகள் தமது மிக முக்கிய வகிபாகங்களான, ஆலோசகராக, ஆதரிப்பவராக, சட்டவாக்க வரைஞர்களாக, சட்டம் இயற்றுபவர்களாக, மன்ற உறுப்பினர்களாக மற்றும் நீதிபதிகளாக செயலாற்ற வேண்டும். மூன்றாவதாக, சட்டவாட்சியுடன் சீரான நிலையில் சட்டரீதியாகவும் பொருளாதார ரீதியாகவும் சமூக ஒழுங்கினம் கையாளப்பட வேண்டும். எங்கெல்லாம் சட்டம் மீறப்பட்டிருக்கின்றதோ அந்த விடயப்பரப்புகளில் சட்டம் மீண்டு நிலைநாட்டப்பட வேண்டியதே இதற்குரிய தீர்வு ஆகும். எனவே, பிரத்தியேக நடத்தை பற்றிய பொறுப்பு தனிப்பட்ட நபரில் தங்கியிருப்பதுடன், சனசமூகத்தில் அது ஒப்பந்தங்களை கௌரவப்படுத்துவதாகவோ, ஏனையவர்களை ஊக்குவிப்பதாலோ அல்லது குடும்ப உறவுகளாகவோ இருப்பினும் பரவுவதற்கான வாய்ப்பில்லை. அது படிப்படியாக நலன்புரி நிலைமையை வாபஸ் பெறக்கோருவதோடு, உண்மையில் தங்களைப் பராமரிக்க முடியாதவர்களுக்கு பாதுகாப்பு வலையமைப்பை வழங்குகின்ற பிரதான வகிபாகத்தை மேற்கொள்கிறது. அரை நூற்றாண்டிற்கு மேல் தேங்கிக்கிடக்கும் பொருளாதாரத்தின் மீதான எழுந்தமானத் தத்துவங்களை முன்னேற்றகரமான முறையில் நீக்குவதற்கு தேவைப்படும் சந்தைப்பொருளாதாரத்தின் இணைப்புகளினூடாக நம்பிக்கை என்பது உருவாக்கப்பட வேண்டியுள்ளது. ஒப்பந்த அனுமதி பொறுப்புகளின் தவறான அடிப்படை ஆகியவை தொடர்பில் ஆய்வு மேற்கொள்வது போன்ற சட்ட ஆட்சியின் அடிப்படைகளை மீட்டெடுத்தலாகும்.

(தொடரும்)

நவமணி





# பெரும்பான்மை வாக்குகளைப் பெற்ற மு.கா கூட்டமைப்பு பற்றி சிந்திக்காதது ஏன்?

## கிழக்கு மாகாண எதிர்க்கட்சி தலைவர் உதுமாலெப்பை கேள்வி

(யூ.கே.காலித்தீன் -சாய்ந்தமருது)

தமிழ் சமூகம் தங்களின் அரசியல் உரிமைகளுக்காக ஆயுதம் ஏந்திப் போராடினார்கள். அந்த ஆயுதப் போராட்டம் தோல்வியடைந்தது. குறிப்பாக தமிழ் அரசியல் கட்சிகளிடைய பல்வேறுப்பட்ட கருத்து முரண்பாடுகள் பிரச்சினைகள் இருந்தும் தமிழ் சமூகத்தின் விடுதலைக்காக தமிழ்க்கட்சிகள் ஒன்றிணைந்து தமிழ் கூட்டமைப்பு ஒன்றினை உருவாக்கினர். அதனால் அவர்கள் இன்று தமிழ் மக்களின் நியாயமான உரிமைகளுக்காக உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் குரல் கொடுத்து வருகின்றனர். ஆனால் முஸ்லிம்களின் பெரும்பான்மை ஆதரவினைப் பெற்ற ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் முஸ்லிம் சமூகம் எதிர்பார்க்கும் முஸ்லிம் கூட்டமைப்பு பற்றி சிந்திக்காது செயற்படுகின்றமை கவலையளிக்கின்றது என கிழக்கு மாகாண சபையின் எதிர்க் கட்சித் தலைவர் எம்.எஸ் உதுமா லெப்பை ஜே.பி. தெரிவித்தார்.

சாய்ந்தமருது கிங் ஹோர்ஸஸ் விளையாட்டுக் கழகத்தின் சீருடை அறிமுக சிநேகபூர்வ கிரிக்கட் போட்டி கழகத்தின் செயலாளர் ஏ.சி.நிசார் தலைமையில் சாய்ந்தமருது மர்ஹூம் பௌஸ் விளையாட்டு மைதானத்தில் கடந்த (17) நடைபெற்றது. இந்நிகழ்வில் பிரதம அதிதியாக கலந்துகொண்டு உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

முஸ்லிம்களின் பெரும்பான்மை வாக்குகளைப் பெற்ற முஸ்லிம் காங்கிரஸ் முஸ்லிம் சமூகம் எதிர்பார்க்கும் முஸ்லிம் கூட்டமைப்பு பற்றி சிந்திக்காதது ஏன் என்றும் கேள்வி எழுப்பினார்.

அவர் தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் நடவடிக்கைகள் போதாது எனக் கருதி வடமாகாண முதலமைச்சர் விக்னேஸ்வரன் தலைமையில் தமிழ் மக்கள் பேரவை என்ற இயக்கத்தை உருவாக்கி பல அழுத்தங்களை கொடுத்து போரினால் பாதிக்கப்பட்ட தமிழ் சமூகத்தின் உரிமைகளைப் பெறுவதற்கான நடவடிக்கைகளிலும் தமிழ் அரசியல் தலைவர்கள் ஈடுபட்டு வருகின்றனர். தமிழ் மக்கள் இழந்த காணிகளையும் சாத்வீக போராட்டங்களை நடத்தி அவர்கள் படிப்படியாக இழந்த காணிகளை மீட்டு வருகின்றனர்.

குறிப்பாக முஸ்லிம் சமூகத்தின் நலனை முன்னிட்டு முஸ்லிம் அரசியல் கட்சிகளை ஒன்றிணைத்து முஸ்லிம் கூட்டமைப்பு ஒன்று உருவாக்கப்பட வேண்டுமென முஸ்லிம் சமூகம் தற்போது எதிர்பார்க்கிறது இந்த விடயத்தினை முஸ்லிம் காங்கிரஸ் செவிசாய்க்காது கிடைத்த சந்தர்ப்பங்களை எல்லாம் வீணாக்கி விட்டு செயற்பட்டுக் கொண்டிருக்கிறது.

மேலும் கிழக்கு மாகாண மக்களும், இளைஞர்களும் கிழக்கு மாகாணத்தின் எதிர்காலம் பற்றி சிந்திக்க கூடாது என பதவிகளுக்காக சோரம் போனவர்கள் கூறுவது தொடர்பாக கிழக்கு மாகாண இளைஞர்கள் அவதானம் செலுத்த வேண்டும்.

முஸ்லிம்களின் பெரும்பான்மை வாக்குகளைப் பெற்று முஸ்லிம் சமூகத்தின் உரிமைகளுக்கு குரல் கொடுப்பதற்காக உருவாக்கப்பட்ட முஸ்லிம் காங்கிரஸ் நல்லாட்சி அரசாங்கம் உருவாவதற்கு ஆதரவு வழங்கிய போதிலும், இதுவரை முஸ்லிம் சமூகம் இழந்த ஓர் அங்குல காணியைக் கூட மீட்டு முஸ்லிம் மக்களுக்கு வழங்கவில்லை. மாறாக முஸ்லிம்களின் காணிகளை நல்லாட்சியிலும் இழக்க வேண்டிய துர்ப்பாக்கிய நிலை முஸ்லிம் சமூகத்திற்கு இன்று ஏற்பட்டுள்ளது.

கிழக்கு மாகாண மக்களின் எதிர்காலத்திற்காக கிழக்கு மாகாணம் பிரிந்தே இருக்க வேண்டும் என நாங்கள் அன்று குரல் கொடுத்தோம் ஆனால் அதனை பலர் பலவிதமாக விமர்சனம் செய்தனர். இன்று தமிழ் தலைமைகள் முஸ்லிம்களின் ஆதரவில்லாமல் வட கிழக்கை இணைக்க முடியாது என்ற யதார்த்தமான உண்மைகளை உணர்ந்துள்ளனர். எதுவானாலும் தமிழ் அரசியல் தலைமைகளும், முஸ்லிம் அரசியல் தலைமைகளும் பேச்சு வார்த்தைகளின் ஊடாகவே எமது பிரச்சினைகளுக்கு தீர்வு காண முடியும் என்ற நிலைமை உருவாகியுள்ளது.

பெருந்தலைவர் மர்ஹூம் எம்.எச்.எம்.அஷ்ரப் அன்று பேரினவாதக் கட்சிகளில் இருந்து முஸ்லிம் மக்களை விடுவிப்பதற்காக முஸ்லிம் காங்கிரஸ் கட்சியை உருவாக்கிய போது தலைவர் அஷ்ரபுக்கும் முஸ்லிம் காங்கிரஸுக்கும் கிழக்கு மாகாண இளைஞர்களே பக்க பலமாக இருந்தனர். அதனால்தான் முஸ்லிம் காங்கிரஸ் துரிதமாக வளர்ச்சி அடைந்தது.

இன்றைய அரசியல் சூழ்நிலையில் அரசியல் தீர்வு, புதிய தேர்தல் முறை மாற்றம், அதிகார பகிர்வு, முஸ்லிம்களின் காணிகள் விடுவிப்பு, புதை பொருள் இடம் என்ற பேரில் முஸ்லிம்களின் பூர்வீக காணிகளுக்கு ஏற்பட்டுள்ள அச்சமான சூழ்நிலை போன்ற விடயங்கள் நடைபெறவிருக்கின்ற முக்கியமான காலகட்டத்தில் கிழக்கு மாகாண முஸ்லிம்களும், இளைஞர்களும் நமது சமூகம் தொடர்பாக சிந்தித்து செயல் படுத்த வேண்டிய முக்கிய காலகட்டத்தில் நாம் இருக்கின்றோம் இளைஞர்களாகிய நீங்கள் அழுத்தங்களை கொடுக்கவேண்டும் - என்றார்.

நிகழ்வு தெ எக்கடமி கல்விநிலையத்தின் பணிப்பாளர் ஏ.வி.எம்.மாஹிர் கௌரவ அதிதியாகவும், தென்கிழக்குப் பல்கலைக்கழக உப பதிவாளர் எம்.எஸ். உமர் பாறுக் மற்றும் சாய்ந்தமருது பிரதேச செயலக திட்டமிடல் அதிகாரி எம்.ஜௌபர் ஆகியோர் விசேட அதிதிகளாகவும் கலந்து கொண்டனர்.

# 3 ஏ பெறுபேறுகளைப் பெற்ற புத்தளம் மாணவர்கள் கௌரவிப்பு

( புத்தளம் நிருபர் )

2016 க.பொ.த. உயர்தர பரீட்சையில் 3 ஏ பெறுபேறுகளைப் பெற்ற மாணவர்களை பரிசளித்து கௌரவிக்கும் நிகழ்வு எதிர்வரும் 25ஆம் திகதி மாலை 4.15 மணி முதல் மாலை 6.30 மணி வரை புத்தளம் முஸ்லிம் கலாச்சார மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

புத்தளம் நகர சபை எல்லைக்குட்பட்ட தமிழ் மற்றும் சிங்கள மொழி மூல பாடசாலைகளில் 2016 க.பொ.த. உயர்தர பரீட்சையில் 3 ஏ பெறுபேறுகளைப் பெற்ற மாணவர்களே கௌரவிக்கப்படவுள்ளனர். புத்தளம் பாத்திமா மகளிர் மகா வித்தியாலயம், சென். அன்ரூஸ் மத்திய கல்லூரி, ஸாஹிரா தேசிய பாடசாலை, ஆனந்தா தேசிய பாடசாலை, மணல் குன்று முஸ்லிம் மகா வித்தியாலயம், ஜனாதிபதி விஞ்ஞானக் கல்லூரி, தில்லையடி முஸ்லிம் மகா வித்தியாலயம் ஆகிய பாடசாலைகலைச் சேர்ந்த 24 மாணவர்கள் இந்த நிகழ்வின் போது பரிசளித்து கௌரவிக்கப்படவுள்ளனர்.

புத்தளம் மாவட்ட தமிழ் செய்தியாளர் சங்கத்தின் ஏற்பாட்டில் இலங்கை மனித உரிமை அமைப்பினால் இந்த மாணவர்கள் பரிசளித்து கேளரவிக்கப்படவுள்ளனர். புத்தளம் மாவட்ட தமிழ் செய்தியாளர் சங்கத்தின் தலைவர் ஜே.இஸட்.ஏ. நமாஸின் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் இலங்கை மனித உரிமை அமைப்பின் பிரதான நிர்வாக பணிப்பாளர் கலாநிதி டீ.எஸ். ஜயந்த கலுபோவில பிரதம அதிதியாகவும் இலங்கை மனித உரிமை அமைப்பின் பிரதி ஆளுநர் கலாநிதி எஸ்.ஆர்.எம்.எம். ஸராபத்துலாஹ் கௌரவ அதிதியாகவும் புத்தளம் பெரிய பள்ளி நிர்வாக சபை தலைவர் பீ.எம்.ஏ. ஜனாப் விசேட அதிதியாகவும் கலந்து கொள்ளவுள்ளனர்.

சகவாழ்வை மையமாகக் கொண்டு சர்வமத தலைவர்களின் விசேட உரைகளும் இந்த நிகழ்வில் இடம் பெறவுள்ளன. க.பொ.த. பரீட்சையில் சிறந்த பெறுபேறுகளைப் பெற்ற தமிழ் மற்றும் சிங்கள மொழி மூல பாடசாலை மாணவர்களை ஒன்றாக புத்தளம் நகரில் பரிசளித்து கௌரவிக்கப்படுவது இதுவே முதற் தடவை என்பது குறிப்பிடத்தக்கது.

# பிரதேச மக்களின் நன்மை கருதி திண்மக்கழிவகற்றும் உழவு இயந்திரம் மற்றும் நீர்த்தாங்கி வழங்கி வைப்பு




(ஏறாவூர் நிருபர் -ஏ.எச்.ஏ. ஹுஸைன்)

மட்டக்களப்பு கோறளைப்பற்று பிரதேச சபைக்கு திண்மக்கழிவகற்றும் உழவு இயந்திரம் மற்றும் நீர்த்தாங்கி என்பன கிழக்கு மாகாண முதலமைச்சர் செய்னுலாப்தீன் நஸீர் அஹமட்டினால் சனிக்கிழமை 18.03.2017 வழங்கி வைக்கப்பட்டது.

கோரளைப் பற்று பிரதேச சபையின் செயலாளர் எஸ். எம். ஷிஹாப்தீன் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் கிழக்கு மாகாண சபை உறுப்பினர் ஷிப்லி பாறூக் மற்றும் கே. கருணாகரம் ஆகியோர் உட்பட ஓட்டமாவடி பிரதேச சபையின் முன்னாள் தலைவரும் வீடமைப்பு அதிகார சபையின் தவிசாளருமான கே. பி. எஸ். ஹமீட் ஆகியோரும் பிரதேச சபை ஊழியர்களும் இந்த நிகழ்வில் கலந்து கொண்டனர்,

கோரளைப்பற்று பிரதேச சபைக்குட்பட்ட பல பகுதிகளில் குடிநீருக்குத் தட்டுப்பாடு நிலவும் நிலையில் இந்த நீர்த்தாங்கி பிரதேச மக்களுக்கு நீரை வழங்க பேருதவியாக உள்ளது என நிகழ்வில் உரையாற்றிய பிரதேச சபைச் செயலாளர் எஸ். எம். ஷிஹாப்தீன் தெரிவித்தார்.

# காத்தான்குடியில் டெங்கு ஒழிப்பை துரிதப்படுத்த உத்தரவு



(ஏறாவூர் நிருபர் -ஏ.எச்.ஏ. ஹுஸைன்)

மட்டக்களப்பு காத்தான்குடியின் சமூக ஆர்வலர்களினால் விடுக்கப்பட்ட அழைப்புக்கமைய டெங்கு ஒழிப்பு தொடர்பான கலந்துரையாடல் 18ஆம் திகதி சனிக்கிழமை இரவு கிழக்கு மாகாண முதலமைச்சர் செய்னுலாப்தீன் நஸீர் அஹமட் தலைமையில் இடம்பெற்றது.

அஷ்ஷஹீட் ஏ அஹ்மட் லெப்பை ஞாபகார்த்த மண்டபத்தில் இடம் பெற்ற இந்த கலந்துரையாடலில் காத்தான்குடியில் டெங்கு நோய் பரவும் இடங்களை உடனடியாக கண்டறிதல், அவற்றை ஒழித்தல் மற்றும் அது தொடர்பில் மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தல் போன்ற பல விடயங்கள் கலந்துரையாடப்பட்டன.

டெங்கு நோய் தாக்காத வண்ணம் அரச திணைக்களங்கள், வீடுகள், பொது இடங்கள், பூங்காக்கள், பாடசாலைகள், கடற்கரையோரங்கள், தோணாக்கள், வடிகான்கள் மற்றும் சுற்றுச் சூழலை சுத்தமாக வைத்துக்கொள்வதற்குரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளல் தொடர்பாகவும் கலந்தாலோசிக்கப்பட்டது.

மேலும் 24 மணி நேரமும் இயங்கக்கூடிய வகையில் 20 பேர் கொண்ட அவசர வேலையாட்களை நகர சபையினூடாக அமுல்படுத்தல் என்றும், காத்தான்குடி தள வைத்தியசாலைக்கு தேவைப்பாடாகவுள்ள ஆளணிகளை தற்காலிகமாக அவசரமாக வழங்குவதென்றும் தேவைப்பாடாகவுள்ள மருத்துவ வசதிகளை பெற்றுக்கொடுத்தல் என்ற விடயங்களும் இதன்போது கலந்தாலோசிக்கப்பட்டது.

பொதுமக்கள் மத்தியில் டெங்கு நோய் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கான ஒருங்கிணைந்த செயற்பாட்டுக் குழுவும் ஸ்தாபிக்கப்பட்டது.

இந்தக் கலந்துரையாடலில் கிழக்கு மாகாண சுகாதார அமைச்சர் ஏ.எல்.எம். நஸீர் கிழக்கு மாகாண சபை உறுப்பினர் ஷிப்லி பாறூக் ஆகியோருடன் காத்தான்குடி பள்ளிவாசல்கள் சம்மேளனம், வைத்தியர்கள், பிரதேச பொலிஸ் பொறுப்பதிகாரி, இராணுவ அதிகாரி உட்பட பொதுமக்களும் சமூக ஆர்வலர்களும் கலந்து கொண்டனர்

காத்தான்குடியில் வெள்ளிக்கிழமை டெங்குக் காய்ச்சலால் பாதிக்கப்பட்ட 9 வயது மாணவியொருவர் உயிரிழந்தமை குறிப்பிடத்தக்கது.

இது சமீப சில நாட்களில் மட்டக்களப்பு மாவட்டத்தில் இடம்பெற்ற முதலாவது டெங்கு நோய் மரணமாகும்.

## பேராதனை பல்கலைகயின் லலித் அதுலத் முதலியின் பெயர்ப்பலகை சேதம்

(வத்துகாமம் நிருபர்)

பேராதனைப் பல்கலைக்கழகத்தில் புதிய மாணவர் விடுதியின் பெயர்ப்பகை உடைப்பு தொடர்பாக உள்ளக விசாரணைகள் இடம் பெற்று வருகின்றன.

நானூறு மாணவர்கள் தங்கக் கூடிய வகையில் நூறு அறைகள் கொண்ட நான்கு மாடிக்கட்டிடம் ஒன்று அமைக்கப் பட்டிருந்தது. அதன் திறப்பு விழா இடம்பெற இருந்த நிலையில் இனம் தெரியாத சிலரால் அதன் பெயர்ப் பகை உடைத்தெரியப் பட்டிருந்தது.

மகாபொல புமைப்பரிசில் திட்டத்தின் ஸ்தாபகர் காலம் சென்ற அமைச்சர் லலித் அத்துலத் முதலியின் பெயர் இதற்கு சூடப்பட இருந்ததாகவும் அதற்கு மாணவர்கள் சிலர் எதிர்ப்புத் தெரிவித்திருந்ததாகவும் பேராதனைப் பல்லைக் கழக வட்டாரங்கள் தெரிவித்தன.

நிதி அமைச்சின் செயலாளரினால் திறந்து வைக்கப்பட இருந்த இக்கட்டிடம் மேற்படி பெயர்ப்பலகை உடைப்புச் சம்பவம் தொடர்பாக பிற்போடப்பட்டுள்ளது.

எனவே பல்லைக்கழக மட்டத்தில் ஆரம்ப விசாரணைகளை ஆரம்பித்துள்ளதாக பேராதனைப் பல்கலைக்கழக உப வேந்தர் பேராசிரியர் உபுல் திசாநாயக்கா தெரிவித்தார்.

## நெல்லியகமவில் மருத்துவமுகாம்

( கலாவெவ நிருபர்)

நெல்லியகம இளைஞர் கழகத்தின் ஏற்பாட்டில் இம்மாதம் 18 ஆம் திகதி இலவச மருத்துவ முகாம் நெல்லியகம முஸ்லிம் மகா வித்தியாலயத்தில் இடம்பெற்றது.

இம்மருத்துவ முகாமில் சிறுநீரக நோய் சம்பந்தமான பரிசோதனைகள் குருதி, குளுகோஸ் பரிசோதனை, குருதி அமுக்க பரிசோதனை என்பன செய்யப்பட்டதுடன் ,இதில் 500 பேருக்கு மேற்பட்டோர் கலந்து கொண்டனர்.இதில் வைத்தியர்கள் கலந்து கொண்டு சிகிச்சைகளும் , ஆலோசனைகளும் வழங்கியதுடன் மருத்துவ பரிசோதனை அறிக்கைகளும் வழங்கப்பட்டன ,

ஆயுர்வேத மருத்துவர்களும் கலந்து கொண்டு ஆயுர்வேத மருந்துகளும் வழங்கப்பட்டன.மேலும் நோய்கள் சம்பந்தமான விளக்கங்களும் அவைகள் ஏற்பட காரணங்களும் நோய்களிலிருந்து நிவாரணம் பெற உணவுப்பழக்கங்கள், தவிர்க்க வேண்டிய உணவுகள் சம்பந்தமாகவும் ஆலோசனைகளும், விளக்கங்களும் வழங்கப்பட்டன.



கட்டுகஸ்தோட்டை ரவுப் ஹாஜியார் மற்றும் ஹஸன் ரவூப் ஆகியோரின் அனுசரணையுடன் இன நல்லிணக்கத்தை கருத்திற் கொண்டு மிகவும் பின்தங்கிய பாடசாலை மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கி வைக்கும் நிகழ்வு அவரது இல்லத்தில் சமீபத்தில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் 220 வறிய பாடசாலை மாணவர்களுக்கு ரவூப் ஹாஜியார் மற்றும் அவரது மகன் ஹஸன் ரவூப் ஆகியோர் கலந்து கொண்டு பரிசில்கள் வழங்கி வைப்பதைப் படங்களில் இங்கு காணலாம். (இக்பால் அலி)

# பதுளை மகளிர் தின நிகழ்வில் 103 வயது பாட்டியும் பங்கேற்பு

(பதுளை நிருபர் வாஹிட் குத்தூஸ்)

தேசிய தோட்டத் தொழிலாளர் சங்கத்ன் மகளிர் தின நிகழ்வில் ஒரு சிறப்பம்சமாக பதுளை கோட்டகொட பெருந்தோட்டத்துறையைச் சேர்ந்த 103 வயதான பேரன் பேத்தி கண்ட பாட்டியும் கலந்து சிறப்பித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

சங்கத்தின் தலைவர் அமைச்சர் ஹரீன் பெர்னாந்து தலைமையில் பதுளை மகளிர் தின நிகழ்வு கோலாகலமாக நடைபெற்றது. விஹாரகொடை சந்தியிலிருந்த மாபெரும் மகளிர் பேரணி லோவர் விதி, தபால் நிலைய வீதி வழியாக நிமல் சிறிபால டி சில்வா தபால் கட்டட மண்டபத்தை வந்தடைந்தது.

மண்டபம் நிறைந்து வழிந்த மகளிர் மத்தியில் மகளிருக்கு மரியாதை செலுத்தி ஆக்ரோஷமாக உணர்ச்சிபூர்வமாக சங்கத்தின் பொதுச் செயலாளர் உரைநிகழ்த்திக் கொண்டிருந்த சமயத்தில் இப்பாட்டி கைத்தடியை ஊன்றிக் கொண்டு தனது பேத்தியுடன் வேகமாக நடந்து மண்டபத்தை விட்டு வெளியேறி ஆட்டோவில் பயணித்து சகலரையும் வியக்கவும் வைத்தார்.

# ஆபாசத்தின் கூடாரங்களாக மாறும் பாடசாலைகள் தீர்வு என்ன?

ரஸ்மின்

கடந்த பெப்ரவரி 2017இல் கொழும்பு பகுதியை சேர்ந்த சிங்கள மொழி மூல பாடசாலை ஒன்றில் நடைபெற்ற மாணவ, மாணவிகள் சிலரின் காமக் களியாட்டங்கள் இணையதளங்களில் வெளியாகி அனைவரினதும் கையடக்க தொலைபேசிகளிலும் முக்கிய காட்சியாக இடம் பிடித்ததுடன் வட்ஸ்அப், பேஸ்புக் மற்றும் யூடியுப் போன்ற சமூக வலை தளங்களிலும் வைரலாக பரவிய காட்சிகளை பார்த்திருப்பீர்கள்.

கல்வி, ஒழுக்கம், நேர்மை மற்றும் நல்ல பண்புகளை கற்று நாட்டின் நற்பிரஜைகளாக உருவெடுக்க வேண்டிய இளைஞர்கள் பாடசாலைக்குள்ளேயே அதுவும் பாடசாலை, பாட நேரத்திலேயே அசிங்கமாக நடந்து கொண்ட காட்சிகள் இலங்கை மக்கள் மத்தியில் பெரும் அதிர்வலைகளை உண்டாக்கியுள்ளது.

இரண்டு மாணவ ஜோடிகள் பாடசாலைப் படிக்கட்டில் கட்டியணைத்துக் கொள்வதும், முத்தம் கொடுப்பதும், மஞ்சப் பத்திரிக்கை கூட எழுதத் துணியாத வார்த்தைகளை உச்சரிப்பதும் குறித்த செல்போன் வீடியோவில் பதிவு செய்யப் பட்டிருந்தது.

பாடசாலை நேரத்தில் மாணவர்கள் மத்தியில் நடைபெற்ற குறித்த அசிங்கமான செயல்பாட்டின் உருவங்களை மறைத்து வீடியோவை செய்தியாக்கியிருந்தது ஒரு பிரபல சிங்கள செய்தி ஊடகம். மாணவர்கள் மத்தியில் பரவிவரும் இது போன்ற இழி செயல்கள் தொடர்பான சமூக விளிப்புணர்வுகள் இல்லாமையும், மாணவர்களுக்கு ஒழுக்கத்துடன் கூடிய



உரிய கல்வி வழங்கப்படாமையும் இதற்காக முக்கிய காரணங்களாகும்.

**மாற்றப்பட வேண்டிய கல்வி முறை**

இலங்கையின் கல்வி முறைமையில் மாற்றம் வேண்டும் என்கிற கோரிக்கைகள் கடந்த பல வருடங்களாகவே எழுந்து வருகின்றன. பாடத்திட்ட மாற்றம், நடைமுறை மாற்றம், ஆசிரியர் செயல்பாடுகளில் மாற்றம், கல்வி சார் ஊழியர்களின் செயல்பாடுகளில் மாற்றம் என்று கல்வித் துறை பல்வேறுபட்ட மாற்றங்களையும் வேண்டி நிற்கிறது.

வலியுறுத்தப்படும் மாற்றங்கள் செயல்பாட்டிற்கு வருவதில் ஏற்படும் தாமதமும், தயக்கமுமே பலவிதமான சீர்கேடுகளும் மாணவர்கள் மத்தியில் தொடர்ந்தும் காலூன்றுவதற்கு காரணமாக அமைகிறது.

**ஒழுக்கமற்ற கல்வி பார்வையற்ற கண்ணுக்கு ஒப்பானது**

தாம் கஷ்டப்பட்டு பெற்றெடுக்கும் பிள்ளைகளை நல்ல பிள்ளைகளாக, ஒழுக்கமுள்ளவர்களாக, நாட்டின் நற்பிரஜைகளாக வளர்த்தெடுக்க வேண்டும் என்பதற்காகவே பாடசாலைக்கு பெற்றோர் தம் பிள்ளைகளை அனுப்புகிறார்கள். மூன்று வயது, நான்கு வயது, ஐந்து வயது என்று ஒவ்வொரு பெற்றோரும் குறிப்பிட்ட ஒரு வயதை பிள்ளை அடைந்தவுடன் அவர்களை கல்வியின் பக்கம் நாட்டம் கொண்டவர்களாக மாற்ற எத்தணிக்கிறார்கள்.

LKG, UKG, Play School என்று ஆரம்பிக்கும் பாடசாலை பருவம், முதலாம் ஆண்டு முதலே மேலதிக வகுப்புகளும் ஆரம்பமாகி அதற்குப் பிள்ளைகளை பெற்றோர் அனுப்பி வைக்கிறார்கள். இவையனைத்தும் இரண்டு காரணங்களை முன்வைத்தே நடைபெறுகின்றன. ஒன்று பிள்ளைகள் கல்வியில் சிறந்து விளங்க வேண்டும். மற்றையது ஒழுக்கமுள்ள நற்பிரஜையாக தம் பிள்ளை மாற வேண்டும்.

ஒழுக்கத்தையும், கல்வியின் முன்னேற்றத்தையும் நினைத்து பாடசாலைக்கு தம் பிள்ளைகளை பெற்றோர் அனுப்பும் போது, அவர்களுக்குரிய சிறந்த கல்வியை கொடுப்பதும், ஒழுக்கமிக்கவர்களாக அவர்களை மாற்றுவதும் ஒவ்வொரு ஆசிரியரினதும் கட்டாயக் கடமையாகும்.

அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: மனிதன் இறந்து விட்டால் அவனது மூன்று செயல்களை தவிர மற்ற அனைத்தும் நின்று விடுகின்றன; 01. நிலையான அறக்கொடை 02. பயன்பெறப்படும் கல்வி 03. அவனுக்காக பிரார்த்திக்கும் (அவனுடைய) நல்ல குழந்தை.

அறிவிப்பவர்: அபூஹுரைரா (ரலி) அவர்கள். நூல்: முஸ்லிம் 3358

அதிக மதிப்பெண் பெறுவதினாலோ, பாடசாலை மட்ட கணிப்பீட்டில் முதல் இடம் பெற்றுக் கொள்வதினாலோ முறையான பிரதிபலனை வாழ்வில் நாம் பெற முடியாது. மாறாக பயன்பெரும் அளவுக்குள்ள சிறந்த ஒழுக்கத்துடன் கூடிய கல்வியே நம் வாழ்வில் சிறப்பையும் கண்ணியத்தையும் நமக்கு பெற்றுத் தரும்.

ஒரு மனிதன் இறந்த பின்னர் கூட அவனுடைய மண்ணறை வாழ்வின் ஈடேற்றத்திற்காக தொடர்ந்து அவனுக்கு கிடைக்கும் நன்மைகளில் மிக முக்கிய மானது பயன்பெறப்படுகிற கல்வியாகும் என நபியவர்கள் நமக்கு கற்றுத் தந்துள்ளார்கள்.

நமது கல்வியினால் நமக்கு பயன் கிடைக்க வேண்டும் என்றால் கண்டிப்பாக அது சிறந்த ஒழுக்கத்துடன் கூடிய கல்வியாக மாத்திரமே இருக்க வேண்டும்.

**பிள்ளைகளின் ஒழுக்க வாழ்வை கணக்கில் கொள்ளாத பெற்றோர்கள்**

எந்தவொரு மாணவனும் தனது எதிர்காலத்தில் சிறந்தவனாக ஒழுக்கமுள்ளவான வளர்வதற்கு பெரிதும் காரணமாக இருப்பவர்கள் அவனுடைய பெற்றோர்கள்.

பிள்ளைகளைப் பொருத்த வரையில் பிறக்கும் குழந்தை தனது முதல் ஆசானாக தாயையும், தந்தையையும் தான் பெற்றுக் கொள்கிறது. அன்புக்கு தாயும், அறிவுக்கு தந்தையும் உதாரணமாக இவ்வுலகில் பேசப்படுகிறார்கள். தம் பிள்ளைக்கு அன்பு காட்டும் பல பெற்றோர்கள் உரிய முறையில் அறிவை குழந்தைகளுக்கு போதிப்பதில்லை. அறிவு பெற்றவனாக தன் பிள்ளையை வளர்க்க நினைக்கும் பலர் ஒழுக்கமுள்ளவனாக தன் பிள்ளையை வளர்ப்பதில்லை.

அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: ஒரு விலங்கு எப்படி முழு வளர்ச்சி பெற்ற விலங்கைப் பெற்றெடுக்கிறதோ அதைப்போல, எல்லாக் குழந்தைகளுமே இயற்கையான (மார்க்கத்)தில் தான் பிறக்கின்றன. விலங்குகள் அங்கக் குறைவுடன் பிறப்பதை நீங்கள் பார்த்திருக்கிறீர்களா? (முழுமையான விலங்கை அங்க சேதப்படுத்துவதுபோல்) பெற்றோர்கள் தாம் குழந்தைகளை (இயற்கையான மார்க்கத்தை விட்டுத் திருப்பி) யூதர்களாகவோ கிறித்தவர்களாகவோ நெருப்பு வணங்கிகளாகவோ ஆக்கிவிடுகின்றனர்.

அறிவிப்பவர்: அபூஹுரைரா (ரலி) அவர்கள், நூல்: புகாரி 1385

உலகில் பிறக்கும் எல்லாக் குழந்தைகளும் இயற்கையாக சிறந்தவர்களாகத்தான் இறைவனால் படைக்கப்படுகிறார்கள். ஆனால் அவர்களை வளர்த்தெடுக்கும் பெற்றோர்கள் தான் ஒழுக்கமற்றவனாக, நற்குணமற்றவனாக, கல்வியறிவற்றவனாக, மார்க்கத் தெளிவற்றவனாக என்று பல விதங்களில் அவனை மாற்றி விடுகிறார்கள்.

எதிர்காலத்தில் டாக்டராக, எஞ்சினியராக, விஞ்ஞானியாக, மேதையாக வர வேண்டும் என்றெல்லாம் கனவு காணும் இன்றைய பெற்றோர்கள் தம் பிள்ளை ஊரில் சிறந்த, ஒழுக்கமுள்ள நல்ல குணமுள்ளவனாக வளர வேண்டும் என்பதில் அக்கறையற்றிருக்கிறார்கள்.

**பொறுப்புகளை உணர வேண்டிய ஆசிரியர்கள்**

இந்த உலகத்தில் வாழும் யாராக இருந்தாலும் அவர்கள் மீது சுமத்தப்பட்டுள்ள பொறுப்புகள் தொடர்பில் மறுமையின் விசாரணையில் அவர் கண்டிப்பாக விசாரிக்கப்படுவார். அந்த விசாரணையில் சரியான பதிலை கூறி இறைவனின் தண்டனையில் இருந்து தப்பித்துக் கொள்ள வேண்டும் என்றால் மாணவர்கள் விஷயத்தில் ஆசிரியர்கள் தம் பொறுப்புக்களை சரிவரி நிறைவேற்ற வேண்டும்.

நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: உங்களில் ஒவ்வொருவரும் பொறுப்பாளர் ஆவார். தன் பொறுப்புக்கு உட்பட்டவை பற்றி அவர் விசாரிக்கப் படுவார்.

அறிவிப்பவர்: இப்னு உமர் (ரலி) அவர்கள், நூல்: புகாரி 2409

உலகில் உள்ள தொழில்களில் மிகவும் மதிப்பு மிகுந்த தொழிலாக ஆசிரியர் தொழிலே பார்க்கப்படுகிறது. உலகில் எவ்வளவு பெரிய இடத்திற்கு உயர வேண்டும் என்றாலும் அதற்குரிய வழிகாட்டல்கள் ஆசிரியர் மூலம் தரப் படுகிறது. எந்தத் துறையில் ஒருவன் கோலோச்ச வேண்டும் என்றாலும் அதற்குறிய வழிமுறைகள், வழிகாட்டல்களை வழங்குபவர்கள் ஆசிரியர்களாக இருக்கிறார்கள்.

இவ்வளவு முக்கியத்துவம் மிக்க ஆசிரியர் பணியில் கடமையாற்றும் பல ஆசிரியர்கள் தமது பொறுப்புக்களை உணர்ந்து நிறைவேற்றாதவர்களாகவே இருக்கிறார்கள். சம்பளத்திற்கு வேலை செய்யும் அதிகாரியாகவே பலர் இருக்கிறார்களே ஒழிய. சமுதாயத்திற்கு சேவை செய்யும் உன்னத பணியாக ஆசிரியர் பணியை அவர்கள் நினைப்பதில்லை.

தாம் பெற்ற கல்வியை, ஒழுக்கத்தை முறைப்படி மாணவர்கள் மத்தியில் ஆசிரியர் ஒப்புவித்தால் கண்டிப்பாக அந்தக் குழந்தைகளும் ஒழுக்கமுள்ள சிறந்த கல்வியாளர்களாக மாறுவார்கள்.

ஆகவே, பிள்ளைகளின் பொறுப்பாளர்களாக பாடசாலையில் பொறுப்புச் சுமத்தப்பட்டுள்ள ஆசிரியர்கள் தமது பணியில் கூடிய கவனம் செலுத்துவதே மாணவர்களின் எதிர்கால ஒழுக்க வாழ்வுக்கு உகந்ததாக அமையும்.

**கல்விக்கு முன் ஒழுக்கத்தை கற்றுக் கொடுக்க வேண்டும்.**

பாடசாலையில் கல்வி கற்கும் மாணவன் தன்னுடன் கல்வி கற்கும் சக மாணவியுடன் காதல் வயப்படுகிறான். மாணவனும் மாணவியும் சல்லாபத்தில் ஈடுபடுகிறார்கள். அதனை சக மாணவன் தன் மொபைலில் வீடியோ படமெடுக்கிறான் என்றால் என்ன காரணம்?

மாணவர்கள் புத்தகத்தை சுமக்கும் சுமைதாங்கிகளாகத் தான் வளர்க்கப்படுகிறார்களே தவிர, ஒழுக்கத்தை சுமக்கும் உத்தமர்களாக அவர்கள் வளர்க்கபடுவதில்லை என்பதே யதார்த்தமானதாகும்.

பாடசாலை நேரத்தில் மாணவர்களும், மாணவியரும் சக மாணவர்களுக்கு முன்னால் சல்லாபத்தில் ஈடுபடுகிறார்கள். அசிங்கமான வார்த்தைகளை, ஆபாசமான வாசகங்களை பேசிக் கொள்கிறார்கள். கீழ் வகுப்புகளில் படிக்கும் மாணவர்கள் அதனை பார்க்கிறார்கள். இவ்வளவும் நடக்குமளவுக்கு பாடசாலையின் ஒழுக்கம் கீழ்நோக்கி சென்று விட்டது என்பதே உண்மையாகும்.

சிங்கள பாடசாலை தானே அப்படித் தான் இருக்கும் என்ற அசட்டுப் பேச்சின் மூலம் பல முஸ்லிம் பாடசாலை ஆசிரியர்களும், அதிபர்களும், புத்திஜீவிகளும், சமுதாயப் பெரியவர்களும் இந்த இடத்தை தாண்டிச் செல்வதற்கு முற்படுவார்கள்.

காதலுக்கோ, காமத்திற்கோ முஸ்லிம் பாடசாலை, சிங்கள பாடசாலை, இந்துப் பாடசாலை என்ற வித்தியாசம் இல்லை. ஒழுக்கம் எங்கில்லையோ அங்கு இவை சாதாரணமாக நடந்தேறிவிடும்.

இன்னும் சொல்லப் போனால் மாற்று மதப் பாடசாலையாக இருந்தால் கூட அவர்களிடம் இஸ்லாம் இல்லை. அவர்களின் மதம் வேறு, கலாசாரம் வேறு, பண்பாடு, ஆடை முறை என்று அனைத்திலும் வித்தியாசம் இருக்கிறது எனலாம். ஆனால் முஸ்லிம் பாடசாலைகளில் இஸ்லாமிய மாணவர்கள் படிக்கும் கல்லூரிகளிலும் இது போன்ற சம்பவங்கள் நடைபெறுகின்றனவே அதற்கு என்ன காரணம்? இஸ்லாமிய ஒழுக்கம் அவர்களுக்கு கற்றுக் கொடுக்கப்படவில்லை என்பதே முழுக் காரணமாக அமைகிறது.

நபி (ஸல்) அவர்களின் வளர்ப்பு மகனாகிய உமர் பின் அபீசலமா (ரலி) அவர்கள் கூறியதாவது:

நான் அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களின் மடியில் வளர்ந்துவந்த சிறுவனாக இருந்தேன். (ஒரு முறை) என் கை உணவுத் தட்டில் (இங்கும் அங்குமாக) அலைந்து கொண்டிருந்தது. அப்போது அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் என்னிடம், சிறுவனே! அல்லாஹ்வின் பெயரைச் சொல். உன் வலக் கரத்தால் சாப்பிடு. உன(து கை)க்கு அருகிலிருக்கும் பகுதியிலிருந்து எடுத்துச் சாப்பிடு! என்று சொன்னார்கள். அதன் பிறகு இதுவே நான் உண்ணும் முறையாக அமைந்தது.

நூல்: புகாரி 5376

உணவு உண்ணும் போது தன் மகனை அருகில் வைத்துக் கொள்ளும் நபிகள் நாயகம் அவர்கள், உண்ணும் முறையைப் பற்றி தன் மகனுக்கு கற்றுக் கொடுக்கிறார்கள். உணவின் ஒழுக்கத்தை பாடம் நடத்துகிறார்கள். சிறு பிள்ளை தானே என்ன செய்ய? விளையாடி விட்டுப் போகட்டுமே. என விட்டு விட வில்லை. சிறு வயது தான் ஒழுக்கம் கற்றுக் கொடுக்க வேண்டிய முக்கியமான வயது என்பதினால் அச்சிறுவனுக்க நபியவர்கள் அழகாக பாடம் கற்றுக் கொடுக்கிறார்கள்.

அபூஹுரைரா (ரலி) அவர்கள் கூறியதாவது: மரத்தின் அறுவடையின்போதே பேரீச்சம் பழத்தின் ஸகாத், நபி(ஸல்) அவர்ளிடம் கொண்டு வரப்படும். இவ்வாறு ஒவ்வொருவரும் தத்தமது பேரீச்சம் பழங்களைக் கொண்டு வந்ததும் அது பெரும் குவியலாக மாறிவிடும். (சிறுவர்களான) ஹசன் (ரலி) ஹுஸைன் (ரலி) இருவரும் அக்குவியலருகே விளையாடுவார்கள். ஒரு நாள் அவ்விருவரில் ஒருவர் ஒரு பேரீச்சம் பழத்தை எடுத்துத் தம் வாயில் போட்டார். இதைக் கண்ட நபி (ஸல்) அவர்கள் உடனே அதை வெளியே எடுத்துவிட்டு முஹம்மதின் குடும்பத்தார் ஸகாத்தின் பொருளை உண்ணக் கூடாது என்பதை நீ அறியவில்லையா? எனக் கேட்டார்கள்.

புகாரி: 1485

நபியவர்களின் குடும்பத்தினர் ஸக்காத் பொருட்களை உண்ணக் கூடாது என்பது மார்க்க விதி. இந்த விதியைப் பற்றிய சரியான புரிதல் இல்லாத சிறு வயது சிறுவனாக இருந்த ஹஸன் அல்லது ஹுஸைன் (ரலி) அவர்கள் ஸக்காத் வகையை சார்ந்த பேரீச்சம் பழம் ஒன்றை எடுத்து வாயில் போட்டு விட்டதை, உடனே எடுத்து வெளியில் வீசிய நபிகள் நாயகம் அவர்கள் நமது குடும்பத்திற்கு இந்தப் வகை பொருட்கள் உண்பது தடுக்கப்பட்டுள்ளது. என்றும் விபரித்து விளக்கம் சொல்லிக் கொடுக்கிறார்கள்.

உண்பதின் ஒழுக்கத்தை மாத்திரமல்லாது, ஹராம், ஹலால் போன்ற சிறுவர்கள் அறியாத பல ஒழுக்க விஷயங்களை நபியவர்கள் தனது பேரப்பிள்ளைக்கு கற்றுக் கொடுத்துள்ளார்கள். இப்படி கற்றுக் கொடுக்கப்படும் போது அறியாத பிள்ளைகள் சரியானதை அறிந்து கொண்டு அதன் படி வாழப்பழகுவர்.

(ஒரு முறை) அனஸ் பின் மாலிக் (ரலி) அவர்கள் சிறுவர்களை கடந்து சென்ற போது அவர்களுக்கு ஸலாம் சொன்னார்கள். மேலும் நபி (ஸல்) அவர்கள் இவ்வாறுதான் செய்து வந்தார்கள் என்று கூறினார்கள்.

அறிவிப்பவர்: ஸாபித் அல் புனானி (ரஹ்), நூல்: புகாரி 6247

பெரியவர்கள் என்றால் சிறுவர்கள் தான் முதல் மரியாதை வழங்க வேண்டும் என்று பழக்கப்படுத்தப்படும் உலக வாழ்வில் மரியாதை அனைவருக்கும் சமமானது. என்பதை மிகத் தெளிவாக இஸ்லாமிய மார்க்கம் கற்றுக் கொடுத்தது மாத்திரமற்றி ஒழுக்கத்தின் ஆரம்ப இடமான அடுத்தவர்களை கண்டால் ஸலாம் சொல்லும் வழிமுறையை நபியவர்கள் சிறுவர்களுக்கு முதலில் கற்றுக் கொடுக்கிறார்கள். எனக்கு நீ ஸலாம் சொல்ல வேண்டும் என்று சொல்லாமல் இறைவனின் தூதர் அவர்கள், தானே முன்சென்று ஸலாம் சொல்லி ஒழுக்கம் கற்றுக் கொடுக்கிறார்கள்.

இது போன்ற ஒழுக்க நடைமுறைகள் கற்றுக் கொடுக்கப்படாமல் எவ்வளவு பெறுமதியான உலகியில் கல்வியை குழந்தைகளுக்கு கற்றுக் கொடுத்தாலும் அதனால் எவ்வித பயனும் ஏற்படப் போவதில்லை.

**மாணவிகளுக்கான ஆடை முறையில் மாற்றம் வேண்டும்.**

ஒழுக்கத்தையும், நல்ல பண்புகளையும் கற்றுக் கொடுக்க வேண்டிய பாடசாலைகளிலேயே மாணவர்கள் தவறான நடத்தையில் ஈடுபடுவதும், காதல், காம, களியாட்டங்கள் செய்வதும் நடந்தேறுவதற்கு இன்னொரு முக்கிய காரணமான அமைவது மாணவிகளின் ஆடை முறையாகும்.

இலங்கை நாட்டில் முஸ்லிம் மாணவிகளுக்கு தனியானை ஆடை முறையும், முஸ்லிம் அல்லாத மற்ற மதங்களை பின்பற்றும் மாணவிகளுக்கு வேறு விதமான ஆடை முறையும் நடைமுறையில் இருக்கிறது.

முஸ்லிம் மாணவிகளின் ஆடை முறை ஆபாசமற்ற, ஒழுக்கம் மிக்கதாக அமையப் பெற்றுள்ளது. இதே நேரம் மற்ற மதம் சார்ந்த மாணவிகளின் ஆடை ஆபாசத்தை தூண்டும் விதமாக அமையப் பெற்றுள்ளது. இப்படியான ஆடை முறையும் இது போன்ற வழிகேடுகளுக்கு காரணமான அமைந்து விடுகிறது.

முஸ்லிம் பெண்கள் அணியும் ஆடைகள் ஒழுக்கம் மிக்கது. முஸ்லிம் மாணவிகள் அணியும் ஆடை சிறந்தது. என வஜிர சிறுவர் நிலையத்தின் பணிப்பாளர் கலாநிதி ஹுனுபலாக வஜிர ஸ்ரீ நாயக்க தேரர் அண்மையில் தெரிவித்திருந்தமை இவ்விடத்தில் அவதானத்திற்கு உரியதாகும்.

பௌத்த தேரரான ஹுனுபலாக வஜிர ஸ்ரீ நாயக்க தேரர் முஸ்லிம் மாணவிகள் அணியும் ஆடை சிறந்தது என கருத்து வெளியிட்டமைக்குக் காரணம் என்ன? பெண்களுக்கு ஆண்களிடமிருந்து ஏற்படும் பல பிரச்சினைகளுக்கு தீர்வாக இஸ்லாம் கற்றுக் கொடுக்கும் ஆடை முறை அமைந்து விடுகிறது.

அதே போல் இஸ்லாமியப் பெண்கள் எப்படி பர்தா அணிகிறார்களோ அதே போல தமிழ்நாட்டுப் பெண்களும், ஒட்டுமொத்த இந்தியப் பெண்களும் பர்தா அணிய வேண்டும். இதன் மூலம் ஆண்களின் வக்கிரப் பார்வையிலிருந்து பெண்கள் தப்ப முடியும், பாலியல் குற்றங்களையும் குறைக்க முடியும் என்று தமிழகத்தின் பிரபலமான சாமியார்களில் ஒருவரான மதுரை ஆதீனம் அருணகிரிநாதர் அண்மையில் கருத்து வெளியிட்டிருந்தமையும் குறிப்பிடத் தக்கதாகும்.

மாற்று மத அறிஞர்களே இஸ்லாமிய பெண்களின் ஆடை முறைதான் சரியானது என்பதை ஒப்புக் கொள்ளும் விதமான சிறந்த ஆடை முறையை இஸ்லாம் பெண்களுக்கு அறிமுகம் செய்துள்ளது.

(முஸ்லிம் பெண்கள் முகத்தை திறந்து, கைகளில் மணிக்கட்டு வரை மறைத்து, காலில் கரண்டை வரை மறைக்கும் பகுதியைத் தான் இஸ்லாம் ஹிஜாப் என்று சொல்கிறது. இந்தப் பகுதிகளை எவ்வகையான ஆடையில் மறைத்தாலும் அது ஹிஜாப் என்ற வகையைத் தான் சாறும்).

இன்றைய பாடசாலை மாணவிகளின் ஆடை முறையில் மார்பகங்களை முந்தானையிட்டு மறைக்காத ஆபாசத் தனமான ஆடை முறையே பின்பற்றப்பட்டு வருகிறது. இந்நிலை காமத்திற்கு மாணவர்களை இழுத்துச் செல்லும் தவறான ஆடை முறையாக அமைந்திருக்கிறது.

சில பொழுதுகளில் கற்றுக் கொடுக்கும் ஆசிரியர்களே மாணவிகளுடன் தவறாக நடந்து கொள்ள முற்பட்டு கையும் களவுமாக மாட்டிக் கொண்ட வரலாறுகளும் இலங்கையில் இல்லாமலில்லை.

அத்துடன், மாணவிகளின் ஆடை முறை ஆபாசமாக அமையப் பெற்றிருக்கிறது அதில் மாற்றம் வேண்டும் என்பது மட்டுமல்லாது ஆசிரியைகளின் ஆடை முறையிலும் கண்டிப்பான மாற்றம் கொண்டுவரப்பட வேண்டும்.

பாடம் கற்பிக்கும் ஆசிரியைகள் மறைக்க வேண்டிய பகுதிகளை வெளிக் காட்டிக் கொண்டு ஆடை அணிந்து வருகிறார்கள். இதுவும் பாடசாலை பருவத்திலேயே மாணவ, மாணவிகள் வழி தவறிச் செல்வதற்கு வழியமைத்துக் கொடுக்கிறது.

பாடசாலை மாணவனுடன் ஆசிரியை ஓட்டம், ஆசிரியை காதலித்து கரம் பிடித்த மாணவன் போன்ற பத்திரிகை செய்திகளெல்லாம் உலகுக்கு புதியவை அல்ல.

ஆகவே, மாணவிகளின் ஆடை முறையில் மாத்திரமன்றி ஆசிரியைகளின் ஆடை முறையிலும் ஒழுக்கமான ஆடை முறைமை ஒன்று வகுக்கபடுவதே இது போன்ற செயல்களுக்கு முடிவாக அமையும்.

(தொடர் 11 ஆம் பக்கம்)

## சிரிய தீவிரவாதிகளின் கட்டடத்தையே தாக்கினோம் பள்ளிவாசலை அல்ல:

# அடித்து சொல்கிறது பென்டகன்; மறுக்கிறது மனித உரிமை ஆணையம்

### 42 பேர் பலி; 100 பேர் படுகாயம்





சிரியாவில் அல்-ஜினோ கிராமத்தில் தீவிரவாதிகள் பதுங்கியிருந்த கட்டடத்தையே குறிவைத்து தாக்கியதாகவும், பள்ளிவாசல் மீது தாக்குதல் நடத்தவில்லை என்றும் அமெரிக்க பாதுகாப்பு அமைப்பான பென்டகன் தகவல் தெரிவித்துள்ளது.

சிரியாவில் அலெப்போ நகரத்திற்கு வடக்கு பகுதியிலுள்ள அல்-ஜினோ கிராமத்தில் நடைபெற்ற அல்-கைதா இரகசிய கூட்டத்தை குறிவைத்து, அமெரிக்க இராணுவம் வான்வெளித் தாக்குதலை நடத்தியதாகவும், பள்ளிவாசல் மீது தாக்குதல் நடத்தவில்லை என்றும் அமெரிக்கா தெரிவித்துள்ளது.

ஆனால் இந்த சம்பவம் குறித்து தகவல் தெரிவித்த சிரிய மனித உரிமைகள் ஆணையம், உயிரிழந்தவர்களில் பெரும்பாலானோர் பொதுமக்கள் என்று தெரிவித்துள்ளது.

வொஷிங்டன்னை தலைமையிடமாகக் கொண்டு செயற்பட்டு வரும் அமெரிக்க பாதுகாப்பு நிறுவனமான பென்டகன் இதனை மறுத்துள்ளது.

இதுகுறித்து பென்டகன் செய்தித் தொடர்பாளர் கடற்படை தளபதி ஜெப் டேவிஸ் தெரிவித்ததாவது,

அமெரிக்க விமானம் அல்-ஜினா பள்ளிவாசலுக்கு அருகில் 100இற்கும் மேற்பட்ட அல்-கய்தா இயக்கத்தினர் பேச்சு நடத்திய கட்டடத்தையே குறிவைத்து தாக்கியதாக தெரிவித்துள்ளது. மாறாக அல்-ஜினாவிலுள்ள பள்ளிவாசல் மீது தாக்குதல் நடத்தப்படவில்லை என்றும் அந்த பள்ளிவாசல் எந்தவித பாதிப்பும் இன்றி பத்திரமாக இருப்பதாகவும் டேவிஸ் தெரிவித்துள்ளார்.

மேலும் நாங்கள் குறிவைத்த இலக்கை சரியாக தாக்கிவிட்டதாகவும், மாறாக பள்ளிவாசல் மீது தாக்குதல் நடத்தப்படவில்லை என்றும் கூறிய டேவிஸ், அதுகுறித்த வரைபடம் ஒன்றையும் காட்டியுள்ளார். அதில் பள்ளிவாசலுக்கும், தாக்குதல் நடத்தப்பட்ட கட்டடத்திற்கும் இடையேயான இடைவெளியை அவர் சுட்டிக்காட்டினார்.

ஈராக்கில் நடைபெற்று வரும் உள்நாட்டு போரின் காரணமாக தீவிரவாதிகளை ஒழிக்க கடந்த 2014ஆம் ஆண்டு முதல் அமெரிக்கா சர்வதேச கூட்டு நடவடிக்கையில் ஈடுபட்டு வருவது குறிப்பிடத்தக்கது. இவ்வாறு நடத்தப்படும் தாக்குதலில் எத்தகைய நோக்கமுமின்றி இதுவரை நூற்றுக்கும் மேற்பட்ட பொதுமக்களும் கொல்லப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. சிரியாவில் கடந்த 6 வருடங்களாக நடைபெற்று வரும் உள்நாட்டுப் போரில் 3.20 லட்சம் பேர் உயிரிழந்துள்ளனர்.

முன்னதாக நேற்றுமுன்தினம் பள்ளிவாசல் மீது நடத்தப்பட்ட வான்வெளித் தாக்குதலில் 42 பேர் உயிரிழந்துள்ளதுடன் 100இற்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்துள்ளாகவும் சிரிய மனித உரிமைகள் ஆணையம் தகவல் தெரிவித்திருந்தது.

மாலை நேர பிரார்த்தனையின் போது, அலெப்போ மாகாண பள்ளிவாசல் மீது அடையாளம் தெரியாத போர் விமானங்கள் அதிரடி தாக்குதல்களை நடத்தியது. இந்த தாக்குதலில் பள்ளிவாசலிலிருந்த பொதுமக்கள் 42 பேர் பரிதாபமாக உயிரிழந்ததாக மனித உரிமைகள் ஆணையத்தின் தலைவர் ரமி அப்தல் ரஹ்மான் தெரிவித்திருந்தார்.

மேலும் இந்த தாக்குதலில் 100இற்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். அலெப்போ மாகாணத்திற்கு மேற்கு பகுதியில் சுமார் 30 கி.மீ. தொலைவிலுள்ள அல்-ஜினா என்ற கிராமத்திலுள்ள மசூதியில் தான் இந்த தாக்குதல் நிகழ்ந்துள்ளதாக மனித உரிமைகள் ஆணையம் சார்பில் தெரிவிக்கப்பட்டது. அல்-ஜினா கிராமத்தை பொறுத்தவரை கிளர்ச்சியாளர்கள் மற்றும் இஸ்லாமிய குழுக்களை சேர்ந்த மக்கள் அதிகளவில் வாழ்ந்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# சுற்றுப் பயணத்தை நிறைவு செய்து ரியாத் திரும்பினார் சவூதி மன்னர்



சீன - பெய்ஜிங் பல்கலைக் கழகம் வழங்கிய கௌரவ டாக்டர் பட்டத்தையும் பெற்றுகொண்ட சவூதி மன்னர் சல்மான்

நாட்டின் பொருளாதாரத்தை உயர்த்தும் நோக்கத்தில் சீனா, ஜப்பான், இந்தோனேசியா உள்ளிட்ட ஆசிய நாடுகளில் ஒரு மாத கால அரசுமுறை சுற்றுப்பயணத்தை நிறைவு செய்த சவூதி மன்னர் சல்மான் ரியாத் நகருக்கு திரும்பினார்.

பொருளாதார நெருக்கடியால் தள்ளாட்டம் போட்டுவரும் சவூதி அரேபியாவை சரிவிலிருந்து மீட்கும் அரசின் புதிய பொருளாதார புனரமைப்பு திட்டத்துக்கு அந்நாட்டின் அமைச்சரவை கடந்த ஆண்டு ஏப்ரல் மாதம் ஒப்புதல் அளித்தது.

சர்வதேச சந்தையில் பெற்றோலின் விலை தொடர்ந்து கடும்சரிவைச் சந்தித்து வருவதால் எண்ணெய் வளத்தை மட்டுமே நம்பியுள்ள சவூதி உள்ளிட்ட வளைகுடா நாடுகள் சமீபகாலமாக பொருளாதார மந்தநிலையை சந்தித்து வருகிறது.

இதற்கிடையில், சவூதி அரேபியாவில் வாழும் மக்களின் மின்சாரத்தேவை நாளுக்குநாள் அதிகரித்துக் கொண்டே வருகிறது. இந்த தேவையை நிறைவு செய்ய மசகு எண்ணெயை எரித்து மின்சாரம் தயாரிக்கப்படுவதால் அவ்வகையிலும் அந்நாடு பெரும் இழப்பை சந்தித்து வருகிறது.

இந்த நிலையை மாற்ற, பல்வேறு பொருளாதார சிக்கனம் மற்றும் சீர்திருத்த நடவடிக்கைகளை எடுப்பது தொடர்பாக சவூதி மன்னர் முஹம்மது பின் சல்மான் தலைமையிலான நிபுணர்கள் குழு விரிவாக ஆலோசனை நடத்தியது. இதன் விளைவாக, அமைச்சரவையின் செலவினங்களில் ஒருபகுதியை குறைத்துக் கொள்ள முடிவு செய்யப்பட்டது.

கடந்த ஆண்டு டிசம்பர் மாதம் வெளியான தேசிய பட்ஜெட்டில் பல ஆண்டுகளுக்கு பின்னர் மின்சார கட்டணம் மற்றும் பெற்றோல் விலை உயர்த்தப்பட்டதும் நினைவிருக்கலாம்.

மேலும், வெளிநாட்டில் கடன் வாங்கும் நிலைக்கு சவூதி தள்ளப்பட்டுள்ளது. பல்வேறு சர்வதேச வங்கிகளில் இருந்து ரூ.60 ஆயிரம் கோடி கடன் கேட்டு அந்நாடு விண்ணப்பித்துள்ளது. கடனை வாங்கினால் தான் நாட்டை நடத்திச்செல்ல முடியும் என்ற நிலை ஏற்பட்டுள்ளது.

இந்நிலையில், பொருளாதார நெருக்கடியை சமாளிக்க சவூதி அரசுக்கு சொந்தமான 'அரம்கோ' எண்ணெய் நிறுவனத்தின் பங்குகளை விற்க சவூதி பட்டத்து இளவரசரும், அந்நாட்டின் பாதுகாப்புத் துறை அமைச்சருமான முஹம்மது பின் சல்மான் கடந்த ஆண்டில் முடிவு செய்தார்.

இந்நிலையில், சவூதி நாட்டு மன்னர் சல்மான் பின் அப்துல் அஜீஸ் தற்போது ஜப்பான், சீனா உள்ளிட்ட ஆசிய நாடுகளில் சுற்றுப் பயணம் செய்தார். சவூதி இளவரசர்கள் 25 பேர் உட்பட சுமார் ஆயிரம் உயரதிகாரிகள் கொண்ட பெரிய குழுவும் அவருடன் சென்றிருந்தது.

சீனா, ஜப்பான் உள்ளிட்ட நாடுகளின் தலைவர்களை சந்தித்த மன்னர் சல்மான் தங்களது நாட்டின் பொருளாதாரச் சரிவை சமநிலைப்படுத்த பேச்சு நடத்தி வந்தார். கடந்த வியாழக்கிழமை சீனா - சவூதி அரேபியா நாடுகளுக்கு இடையில் மட்டும் 65 பில்லியன் அமெரிக்க டொலர்கள் அளவுக்கு புதிய ஒப்பந்தங்கள் செய்யப்பட்டன.

இதையடுத்து, மாலைதீவுக்கு செல்லவிருந்த மன்னர் சல்மானின் முந்தைய பயண திட்டம் அந்நாட்டில் பரவி வரும் விஷக் காய்ச்சலால் ரத்து செய்யப்பட்டது, இதைதொடர்ந்து அவர் வெள்ளியன்று ரியாத் நகரை சென்றடைந்துள்ளதாக சவூதி ஊடகங்கள் குறிப்பிட்டுள்ளன.

## உலகச் செய்திகள்

# யெமன் இராணுவ பள்ளிவாசல் மீது கிளர்ச்சியாளர்கள் ஏவுகணை தாக்குதல்

### இராணுவ வீரர்கள் 34 பேர் பலி; நூற்றுக்கும் மேற்பட்டோர் படுகாயம்



யெமன் இராணுவ பள்ளிவாசல் மீது கிளர்ச்சியாளர்கள் நடத்திய ஏவுகணை தாக்குதலில் இராணுவ வீரர்கள் 34 பேர் உயிரிழந்துள்ளனர்.

யெமன் தலைநகர் சனாவை தங்களது கட்டுப்பாட்டில் வைத்துள்ள ஹவுதி கிளர்ச்சியாளர்கள் சனாவுக்கு கிழக்கேயுள்ள இராணுவ முகாம் மீதே மேற்படி ஏவுகணைத் தாக்குதலில் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

மரிப் மாகாணத்திற்கு மேற்கு பகுதியிலுள்ள கோஃபல் இராணுவ முகாமிலுள்ள பள்ளிவாசலை குறிவைத்த ஹவுதி கிளர்ச்சியாளர்கள் 2 ஏவுகணைகளை அனுப்பி தாக்குதல் நடத்தியதாக யெமன் இராணுவ அதிகாரிகள் தெரிவித்தனர். ஈரானின் தயாரிப்பான சென்ஷெல்-1 பீரங்கி மூலம் கட்யுஷா வகை ஏவுகணையை பயன்படுத்தி தாக்குதல் நடத்தப்பட்டு விசாரணையில் தெரியவந்துள்ளதாக மரிஃப் இராணுவ அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இராணுவ முகாமிலுள்ள பள்ளிவாசலை அந்த ஏவுகணை தாக்கியதில், அப்போது தொழுகையில் ஈடுபட்டிருந்த 34 வீரர்கள் உயிரிழந்தனர். மேலும் நூற்றுக்கும் மேற்பட்ட வீரர்கள் படுகாயமடைந்தனர்.

யெமன் அரசுக்கு எதிராக கிளம்பிய கிளர்ச்சியாளர்களை குறிவைத்து யெமன் இராணுவம் தாக்குதல் நடத்தி வருவது போல, கிளர்ச்சியாளர்களும் அவ்வப்போது தாக்குதல் நடத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# வெள்ளத்தில் மிதக்கும் பெரு; மண்சரிவில் 68 பேர் பலி

### இருப்பிடங்களை இழந்து மக்கள் திண்டாட்டம்











பெருவில் தொடர் கனமழையால் ஏற்பட்ட வெள்ளத்தில் சிக்கி 68 பேர் பரிதாபமாக உயிரிழந்தனர்.

தென் அமெரிக்க நாடான பெருவில் தொடர்ந்து 4 நாட்களாக பெய்து வரும் கனமழையால் மக்களின் இயல்பு வாழ்க்கை கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது. எல்நினோ விளைவு காரணமாக பெய்து வரும் கனமழையால் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கு மற்றும் நிலச்சரிவில் சிக்கி இதுவரை 62 பேர் உயிரிழந்துள்ளனர்.

வெள்ளம் பாதிக்கப்பட்ட பகுதிகளில் தங்கியிருந்த ஆயிரத்திற்கும் மேற்பட்ட மக்கள் மீட்கப்பட்டுள்ளனர். அதேநேரத்தில் பலர் வீடுகளின் மேற்கூரையின் மீது உதவிக்காக காத்திருப்பதாகவும் கூறப்படுகிறது.

இந்த கனமழையால் ஏற்பட்ட வெள்ளம் காரணமாக பல்வேறு நகரங்கள் நீரில் மிதக்கின்றன. 8 ஆயிரத்திற்கும் மேற்பட்ட குடியிருப்புகள் மற்றும் கால்நடைகள் அடித்துச் செல்லப்பட்டன. 12,000 பேர் வீடுகளை இழந்து தவிக்கின்றனர். 1,15,000 வீடுகள், 117 பாலங்கள் மற்றும் பல ஆயிரம் கிலோ மீற்றர் தொலைவிலான வீதிகள் தண்ணீரில் அடித்துச் செல்லப்பட்டன.

ஒரு தீவிர காலநிலை பிரச்சினையை நாம் எதிர்கொண்டுள்ளதாக அந்நாட்டு ஜனாதிபதி பெட்ரோ பப்லோ குசான்ஸ்கி தெரிவித்தார். 1998இற்கு பின்னர் பெரு சந்திக்கும் மற்றொரு பெரிய நிகழ்வு இது என்றார். இராணுவத்தின் மூலம் மீட்புப் பணிகள் தீவிரமாக நடைபெற்று வருவதாகவும், வெள்ளத்தில் வீடுகளை இழந்தவர்கள் முகாம்களில் பாதுகாப்பாக தங்க வைக்கப்பட்டுள்ளதாகவும் குசான்ஸ்கி தெரிவித்துள்ளார்.

பசுபிக் கடலில் வெப்பம் அதிகரித்ததன் காரணமாக ஏற்பட்ட பருவநிலை மாற்றம் (எல் நினோ விளைவு) காரணமாக பலத்த மழை பெய்து வருவதாக வானிலை அந்நாட்டு ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர்.

## ஹம்பாந்தோட்டை...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

எதிர்ப்புக்கள் வெளிவந்து கொண்டிருக்கும் நிலையிலேயே மேற்படி அமைச்சரவைப் பத்திரமானது வரவுள்ளது. இதனைத் தொடர்ந்து அடுத்த சில மாதங்களிலேயே ஹம்பாந்தோட்டை துறைமுகத்தை சீன நிறுவனத்துக்கு வழங்கும் ஒப்பந்தமானது செய்து கொள்ளப்படவுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

## ஐ.நா.வின்...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

பலர் கலந்து கொள்ளவுள்ள இந்த ஆர்ப்பாட்டத்தில், ஐ.நா. தீர்மானத்தை இலங்கையில் நடைமுறைப்படுத்த அரசு ஒத்துழைப்பு வழங்கக் கூடாது என்றும் இராணுவத்தினருக்கு எதிராக சர்வதேசத்தினரால் முன்வைக்கப்படும் குற்றச்சாட்டுக்கள் அடிப்படை ஆதாரமற்றவை என்றும் எனவே, இதற்கு இலங்கை அரசு இணை அனுசரனை வழங்கக் கூடாது என்றும் வலியுறுத்தப்படவுள்ளது.

அதேநேரம், இந்த ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொள்ளுமாறு எந்தவொரு அரசியல் பிரமுகர்களுக்கோ சிவில் சமூகத்தினருக்கோ அழைப்பு விடுக்கப்படவில்லை என்றாலும், இதில் கலந்து கொண்டு ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்கு எதிரான தமது கண்டனத்தை வெளியிட முடியும் எனவும் ஏற்பாட்டாளர்களால் கூறப்பட்டுள்ளது.

## உச்ச...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

தடை விதித்தார். அதே நேரத்தில் அந்த 6 நாட்டு மக்களும் 90 நாட்களுக்கு அமெரிக்காவில் நுழைய தடை விதித்து டிரம்ப் உத்தரவிட்டார்.

தீவிரவாதிகள் அமெரிக்காவில் நுழைவதை தடுக்கும் விதமாக இந்த தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டதாக டிரம்ப் தெரிவித்திருந்தார். இந்த நடவடிக்கைக்கு பல்வேறு தரப்பினரும் கடும் எதிர்ப்பு தெரிவித்துள்ளனர்.

டிரம்ப் விதித்த இந்த பயணத் தடை அமுலுக்கு வருவதற்கு முன்பே அந்நாட்டு உச்சநீதிமன்றம் டிரம்ப் உத்தரவுக்கு தடை விதித்தது. உச்சநீதிமன்றத்தின் இத்தகைய தீர்ப்பினால் கடும் அதிருப்தி அடைந்த டிரம்ப், தனது ஆதரவாளர்கள் மத்தியில் நீதித்துறையின் தலையீடு அதிகமாக இருப்பதாக கடுமையாக சாடினார்.

தேசிய நலனுக்காக குடியேற்றங்களுக்கு தற்காலிக தடை விதிக்க இந்நாட்டின் அரசியல் அமைப்பு சட்டம் ஜனாதிபதிக்கு அதிகாரம் வழங்கியிருக்கிறது என்றும் டிரம்ப் தெரிவித்திருந்தார்.

இந்நிலையில், டிரம்ப் அரசுக்கு எதிராக உச்சநீதிமன்றம் விதித்த தடையை நீக்க வலியுறுத்தி கிரீன்பெல்ட் மாவட்டத்திலுள்ள மேரிலேண்ட் நீதிமன்றத்தில், வெள்ளை மாளிகையில் செயற்பட்டு வரும் டிரம்பின் நீதித்துறை மேல்முறையீடு செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## வடமத்திய...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

நிறைவேற்றச் செல்லுவோர்களுக்கு விடுமுறை பெற்றுக் கொள்ள முடியாத வகையில் அந்தச் சுற்று அறிக்கையில் நிபந்தனை விதிக்கப்பட்டுள்ளது. இந்தச் சுற்று அறிக்கையானது ஹஜ் கடமையை நிறைவேற்றச் செல்லவுள்ள ஆசிரியர்களுக்கு பொருத்தமானது அல்ல. கல்வி அமைச்சர் மற்றும் வட மத்திய மாகாண கல்வி அமைச்சர் உள்ளிட்டவர்களுடன் கவனத்திற்கு கொண்டு வந்து புனித ஹஜ் கடமையை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்று முஸ்லிம் சமயம் கலாசாரம் மற்றும் தபால் துறை அமைச்சர் எம். எச். ஏ. ஹலீம் தெரிவித்தார்.

வட மத்திய மாகாண கல்வித் திணைக்களத்தின் பணிப்பாளர் ஈ. எம். என். எப். ஏக்கநாயவினால் வடமத்திய பாடசாலைகளுக்கு ஆசிரியர் விடுமுறை தொடர்பாக அனுப்பி வைக்கப்பட்டுள்ள சுற்று நிரூபம் தொடர்பாகமுஸ்லிம் சமயம் கலாசாரம் மற்றும் தபால் துறை அமைச்சர் எம். எச். ஏ. ஹலீம் இவ்வாறு இதனைத் தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கையில்

அனைத்து ஆசிரியர்கள் சேவைகள் தொடர்பாக அதிபரினால் அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளது எனவும்

ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் வகுப்பு, உயர் வகுப்புக்களில் பாடம் நடத்தும் ஆசிரியர்களுக்கு வருட இறுதியில் மட்டும் விடுமுறை வழங்க வேண்டும் எனவும் இதற்கு இணங்க புலமைப் பரிசில் பரீட்சைக்குத் தயார் படுத்தி வரும் 4,5 வகுப்பு ஆசிரியர்களுக்கும் சாதாரண வகுப்புக்காக பாடம் நடத்தும் 10, 11 வகுப்பாசிரியர்களுக்கும் மற்றும் 12, 13 ஆம் வகுப்பாசிரியர்களுக்கு மேற் குறித்த சுற்று நிரூபத்துக்கு அமைய வெளிநாட்டு விடுமுறைக்கான அனுமதியைப் பெற்றுக் கொள்ள அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மேலும் எதிர் வரும் காலத்தில் வெளிநாட்டு விடுமுறை வழங்க அனுமதி கோரி விண்ணப்பம் செய்வோருக்கு மேற்படி இந்த ஆலோசனை விடயங்கள் யாவும் விசேடமாக பொறுப்புவாய்ந்த முயாமையாளர், உதவி அதிகாரிகள், அதிபர்கள், ஆசிரியர்கள் ஆகியோருக்கு அறிவுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது. மேலும் பாடசாலை விடுமுறை நாட்களில் வெளிநாடு செல்வதற்கு விடுமுறை பெறும் ஆசிரியர்களுக்காக இந்த நிபந்தனைகள் விதிக்கப்பட வில்லை எனவும்

மேலும் வெளிநாடு செல்வதற்கு ஆசிரியர் அனுமதியைப் பெற்றுக் கொள்வதற்காக விண்ணப்பிக்கும் போது விடுமுறைக்கு விண்ணப்பம் செய்யும் ஆசிரியருடைய கால அட்டவணை அதிபரின் மேற்பார்வையுடன் சமர்ப்பிக்கப்பட வேண்டும் என அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

புனித ஹஜ் கடமைக்காகச் செல்லவுள்ளவர்கள் முஸ்லிம் சமயம் கலாசாரத் திணைக்களத்தில் முன் கூட்டியே பதிவு செய்யப்பட வேண்டும். பதிவு செய்த நபர்களுக்கு மூன்று வருடங்களுக்குப் பிற்பாடுதான் அங்கு செல்வதற்கு சந்தர்ப்பம் கிடைக்கின்றது.

புனித ஹஜ்ஜை நிறைவேற்ற மக்காவுக்குச் செல்ல விண்ணப்பித்த ஆசிரியர்களுக்கு ஹஜ் செல்ல சந்தர்ப்பம் கிடைக்கின்ற பட்சத்தில் இவ்வாறான நிபந்தனை விதிப்பு முஸ்லிம் ஆசிரியர்களுக்கு நடைமுறைப்படுத்தக் கூடியதொன்று அல்ல. அது அவர்களுக்கு தடையாகவுள்ள நிபந்தனைகளே அதில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

எனவே வடமத்திய மாகாண கல்வித் திணைக்களத்தினால் அனுப்பி வைக்கப்பட்டுள்ள சுற்று நிரூபத்தில் புனித மக்கா ஹஜ் கடமைகளுக்கு முஸ்லிம் ஆசிரியர்கள் செல்வதற்கு அனுமதி வழங்க முடியாத போக்கையினைக் கொண்ட விடயங்கள் விதிக்கப்பட்டுள்ள நிபந்தனைகளே அதில் உள்ளன. அதனை எவ்வகையிலும் முஸ்லிம் ஆசிரியர்களுக்கு நடைமுறைப்படுத்த முடியாது என்கின்ற நிலை எழுந்துள்ளது.

எனவே இது தொடர்பாக முஸ்லிம் ஆசிரியர்களுடைய விடயத்தில் கூடுதல் கவனம் செலுத்தி ஹஜ் விடுமுறைக்கான நியாயத்தைப் பெற்றுப் கொடுப்பதற்கு சகல நடவடிக்கைகளையும் எடுக்கவுள்ளதாக அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

## கிண்ணியா டெங்கை...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

சிகிச்சை பெற்றுவரும் பொதுமக்களை நேரில் சென்று பார்வையிட்ட பின்னர், சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையில் நடைபெற்ற சந்திப்பில் கலந்துகொண்டு உடியாற்றுகையிலேயே இதனைத் தெரிவித்தார்.

அங்கு கருத்து தெரிவித்த அமைச்சர் மேலும் கூறியதாவது,

திருகோணமலை மாவட்டத்தில் குறிப்பாக கிண்ணியா பிரதேசத்தில் வேகமாக பரவிவரும் டெங்கு நோயை கட்டுப்படுத்துவது தொடர்பாக சுகாதார அமைச்சு, கிழக்கு மாகாண சுகாதார அமைச்சு, முப்படை அதிகாரிகள், உள்ளூர் மருத்துவ சேவை அதிகாரிகள் உள்ளிட்டோருடன் கலந்துரையாடினோம்.

டெங்கு நோய் தொடர்பாக மக்கள் விழிப்புணர்வு செயற்பாடுகளை நடாத்துவதற்கு தீர்மானித்துள்ளோம். அத்துடன் தற்போது வீடுகளை சுத்தம் செய்துவரும் படையினருக்கு மேலதிகமாக 800 பேரை அப்பணியில் ஈடுபடுத்துவதற்கு முப்படையினரும், பொலிஸ் அதிகாரிகளும் தீர்மானித்துள்ளனர்.

அத்துடன் சிவில் சமூக அமைப்பு, விளையாட்டுக் கழகங்கள் மற்றும் தொண்டர்களை இந்த பணிகளில் ஈடுபடுத்துவதற்கும் தீர்மானங்கள் மேற்கொள்ளப்பட்டன. இதற்கு மேலதிகமாக தேவைப்படும் ஒதுக்கீடுகள், வாகனங்கள், உபகரணங்கள் உள்ளிட்ட ஏனைய தேவைகளை நிறைவேற்றிக்கொடுப்பதற்கான பொறுப்புகளை நாங்கள் ஏற்றுக்கொண்டிருக்கிறோம்.

இங்கு நடைபெற்ற கலந்துரையாடலின் சராம்சங்களை சுகாதார அமைச்சர் மூலம் அடுத்த அமைச்சரவையில் சமர்ப்பிப்பதற்கும் நாங்கள் தீர்மானித்துள்ளோம். அத்துடன், இந்த விவகாரம் தொடர்பில் பூரண விளக்கத்தை அளிக்குமாறு சுகாதார அமைச்சருக்கு வேண்டுகோள் விடுக்கவுள்ளேன்.

கிண்ணியா தள வைத்தியசாலை மற்றும் அதனை அண்டியுள்ள வைத்தியசாலைகளில் நிலவும் குறைபாடுகள், தேவைப்பாடுகள் மற்றும் ஆளனி பற்றாக்குறை குறித்து இங்கு கலந்துரையாடப்பட்டன. அவற்றுக்கான தீர்வுகளை மிக விரைவில் பெற்றுக்கொடுப்பதற்கான முயற்சிகளையும் நாங்கள் செய்திருக்கிறோம்.

கிண்ணியாவில் முழுமையான வடிகாலமைப்பு மற்றும் கழிவுநீர் தொகுதியை அமைத்து முறையான கழிவகற்றல் நடவடிக்களை மேற்கொள்வதற்கான பணிப்புகரைகளை சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் விடுத்துள்ளேன்.

இந்த டெங்கு காலத்தில் பிள்ளைகள் வீடுகளில் இருப்பதை விட பாடசாலைகளிலேயே பாதுகாப்பாக இருப்பதாக டெங்கு நோய் கட்டுப்பாட்டு அதிகாரி டொக்டர் சரத் அமுனுகம எம்மிடம் தெரிவித்தார். அதற்கமைய மூடப்பட்ட சகல பாடசாலைகளையும் இன்று திங்கட்கிழமை திறப்பதற்கு நாங்கள் தீர்மானித்துள்ளோம் என்றார்.

கிழக்கு முதலமைச்சர் நஸீர் அஹமட், சுகாதாரத்துறை பிரதி அமைச்சர் பைசால் காசீம், பாராளுமன்ற உறுப்பினர் எம்.எஸ். தௌபிக், கிழக்கு மாகாண சுகாதார அமைச்சர் ஏ.எல்.எம். நஸீர், பாராளுமன்ற முன்னாள் உறுப்பினர் ஹனைஸ் பாறுக், கிழக்கு மாகாணசபை உறுப்பினர்களான ஆர்.எம். அன்வர், ஜே.எம். லாஹிர், முன்னாள் தவிசாளர் எச்.எம். எம். பாயிஸ், முப்படை அதிகாரிகள், சுகாதார வைத்திய அதிகாரி உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

## மாலைதீவில்...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

அரசாங்கத்தின் சுகாதார பாதுகாப்பு பிரிவு தெரிவித்தது.

கடந்த ஒரு வாரத்திற்குள் இலங்கைக்கு வருகை தந்த 300 பயணிகள் இந்த தொற்றுக்கு உள்ளாகியிருக்கலாம் என்றும் சந்தேகிக்கப்பட்டுள்ளது.

இதனை கருத்திற் கொண்டு மாலைதீவுக்கு பயணிக்கும் மற்றும் அங்கிருந்து இலங்கை வரும் விமானங்களில் பரவும் நோய்களை தடுப்பதற்காக வேலைத் திட்டம் ஒன்று செயற்படுத்துவதற்கு ஸ்ரீலங்கன் விமான சேவை நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

அதற்கமைய மாலைதீவிற்கு பயணிக்கும் விமான பயணங்களில் முகத்தை மூடும் வகையிலான பாதுகாப்பு கவசம் பயன்படுத்துவதற்கு ஸ்ரீலங்கன் நிறுவனம் ஆலோசனை வழங்கியுள்ளது.

## சுமந்திரன்...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

இம்தியாஸ் காக்கிர் மாக்கார் நேற்று நாட்டுத் தலைவர்களுக்கு அழைப்பு விடுத்தார்.

தகவல் திணைக்களத்தில் நடைபெற்ற வெலிகம ஊடகப் பிரகடனம் தொடர்பான கருத்தரங்கில் அறிமுக உரையை நிகழ்த்தியே அவர் இதனைத் தெரிவித்தார்.

தொடர்ந்து பேசிய அவர் கூறியதாவது, நாம் இலங்கையர்கள் என்ற வகையில் எமக்குள் உள்ள பிரச்சினைகளைத் தீர்த்துக் கொண்டாலே எமக்கு தலைநிமிர்ந்த ஒரு நாடாக மிளிரலாம் அதற்கான நல்ல சந்தர்ப்பம் இப்போது உருவாகியுள்ளது.

நாட்டின் சுதந்திரத்துக்குப் போராடிய சிறுபான்மைத் தலைவரை தம் தோளில் சுமந்து வந்த மக்கள் வாழ்ந்த நாடு இது. எனவே, சவால்கள் இருந்தாலும் நாட்டை நல்வழியில் இட்டுச் செல்வதில் ஊடகங்களுக்கு பாரிய பொறுப்புள்ளது. வெலிகம பிரகடனம் மூலம் நாம் அதற்கு வழிகாட்டியுள்ளோம். 10 வருடங்களின் பின் அதனை மீள் பரிசீலனை செய்வதற்கு இந்த கருத்தரங்கினை நடத்துகிறோம்.

## கிண்ணியா பாடசாலைகள்...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

இன்று திங்கட்கிழமை (20) முதல் மீண்டும் இயங்க உள்ளதாக கிண்ணியா வலயக்கல்விப் பணிப்பாளர் ஏ.எம். அகமட் லெப்பை தெரிவித்தார்.

இவ்வாறான நிலையில் கிண்ணியா கல்வி வலயத்தில் உள்ள சுமார் 66 பாடசாலைகள் கடந்த வாரம் மூன்று தினங்கள் மூடப்பட்டிருந்தது.

கிண்ணியா கல்வி வலயத்தில் உள்ள பாடசாலைகளில் டெங்கு பரவாமல் இருப்பதற்கான உத்தரவாதத்தை கிண்ணியா தள வைத்தியசாலை வைத்திய அதிகாரி டொக்டர் ஏ.எம். சமீம், கிண்ணியா சுகாதார வைத்திய அதிகாரி ஏ.எம். அஜீத் , குறிஞ்சாக்கேணி சுகாதார வைத்திய அதிகாரி டொக்டர் எம்.எச்.எம். றிஸ்வி , ஆகியோர்கள் தனக்கு வழங்கிய உறுதி மொழியை வழங்கியதையடுத்து தான் இப்பாடசாலைகளை மீண்டும் இயங்குவதற்கான நடவடிக்கை எடுத்துள்ளதாக வலயக் கல்விப் பணிப்பாளர் தெரிவித்தார்.

கிண்ணியா கல்வி வலயத்தில் உள்ள பாடசாலைகளின் சுற்றிச் சூழலை டெங்கு ஒழிப்பு சுத்தம் செய்யும் பணிகளில் ஈடுபட்ட முப்படையினர் , மற்றும் பிரதேச பொது மக்கள், தொண்டு நிறுவனங்கள் சுகாதார தொண்டு நிறுவனங்கள் , வெளி மாவட்டத்தில் இருந்து வந்திருந்த பொதுச் சுகாதார அதிகாரிகள் , பொது அமைப்புக்கள், பாடசாலை அபிவிருத்திச் சங்கங்கள், அதே நேரத்தில் டெங்கு ஒழிப்பில் எமது வலயத்தில் உள்ள அதிபர்கள் , ஆசிரியர்கள் மற்றும் வலயக்கல்வி பணிமனையின் பிரதிக் கல்விப் பணிப்பாளர்கள், உதவிக் கல்விப் பணிப்பளர் ஆசிரிய ஆலோசகர்கள் இணைப் பாளர்கள், அலுவலக உத்தியோகத்தர்கள் ஊழியர்கள் அனைவரும் கிண்ணியா பிரதேச செயலகத்துடன் இணைந்து தொண்டாறிருந்தனர். அவர்களுக்கும் வலயக்கல்விப் பணியாளர் நன்றியை தெரிவித்தார்.

கிழக்கு மாகாண கல்வித் திணைக்களத்தினால் பாடசாலைகளில் டெங்கு ஒழிப்பு நடவடிக்கைக்காக கிண்ணியா கல்வி வலயத்திலுள்ள 66 பாடசாலைகளுக்கும் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது இதில் 1 ஏ.பி 05 பாடசாலைகளுக்கு 8,000 ரூபா நிதியும் , 1 சீ 15 பாடசாலைகளுக்கு 7,000 ரூபாவும் , தரம் 02, 15 பாடசாலைகள் மற்றும் தரம் 3, 31 பாடசாலைகளுக்கு தலா 6,000 ரூபா ஒதுக்கப்பட்டுள்ளதாகவும் இந்நிதியைக் கொண்டு பாடசாலை சுற்றுச் சூழலை துப்பரவு செய்யுமாறு கிழக்கு மாகாண கல்விப் பணிப்பாளர் எம்.ரீ.ஏ. நிசாம் தனக்கு அறிவுத்தல் வழங்கியுள்ளதாகவும் விடுமுறை வழங்கப்பட்ட மூன்று தினங்களுக்கும் பொருத்தமான சனிக்கிழமைகளில் பதில் பாடசாலையினை நடத்துவதற்கு தான் தீர்மாணித்துள்ளதாக கிண்ணியா வலயக் கல்வி பணிப்பாளர் ஏ.எம். அகமட் லெப்பை மேலும் தெரிவித்தார்.

மேலும் கிண்ணியாவில் டெங்குத் தாக்கத்தில் இது வரை பாடசாலை மாணவர்கள் இருவர் உட்பட பதிமூன்ற பேர் (13) உயிரிழந்துள்ளதேடு 1450 பேர்ருக்க மேற்பட்டோர் நேரடியாக டெங்கினால் பாதிக்கப்பட்டுள்ளனர். அத்தோடு திருகோணமலை நகர் பிரதேசத்தில் பாடசாலை மாணவி ஒருவர் உட்பட இருவர் உயிரிழந்தனர். இதன் அடிப்படையில் திருகோணமலை மாவட்டத்தில் டெங்கினால் மெத்தமாக (15) பேர் உயிரிழந்துள்ளதாக வைத்திய வட்டாரங்கள் தெரிவிக்கின்றனர்.

## இனவாத...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

தேசிய ஐக்கியத்துக்கான பாக்கீர் மாகார் நிலையம் 2006இல் வெளியிட்ட தேசிய ஐக்கியத்துக்கான ஊடகத்தின் பங்களிப்பு தொடர்பான வெலிகம பிரகடனத்தின் பத்தாண்டு நிறைவினை முன்னிட்டு அப்பிரகடனத்தை மீளாய்வு செய்யும் கருத்தரங்கு நேற்று தகவல் திணைக்கள கேட்போர் கூடத்தில் நடைபெற்ற போது பிரதம அதிதியாகக் கலந்து கொண்டுரையாற்றுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

தேசிய ஐக்கியத்துக்கான பாக்கீர் மாகார் நிலையத்தின் தலைவர் இம்தியாஸ் பாக்கீர் மாகார் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில், முதல் அமர்வில் பாராளுமன்ற சீர்திருத்த ஊடக அமைச்சர் கயந்த கருணாதிலக, யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் எம். ஏ. சுமந்திரன், கல்கந்த தம்மானந்த தேரர், பேராசிரியர் சந்திராணி ராஜபக்ஷ ஆகியோர் உரையாற்றினர். தொடர்ந்து பேசிய சபாநாயகர் கூறியதாவது,

பாக்கீர் மாகார் நிலையத்தினால் அன்று 2006 ஆம் வெலிகமவில் நடாத்திய தேசிய ஐக்கியத்திற்கான ஊடகத்தின் ஆரம்ப வைபவத்தில் பங்குபற்றினேன். அன்று போர் உக்கிரமாக நாட்டில் நடைபெற்ற காலம். இன்று 10 வருடங்களின் பின் அதே பிரகடனத்தினை பாக்கீர் மாகார் நிலையம் மீளாய்வு செய்கின்றது. அப்போது நான் எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினராக இருந்த சமயத்தில் முன்னைய ஆட்சியில் பாரிய படுமோசமான நெருக்கடிகளை ஊடகங்களும் பொது மக்களும் அனுபவித்தனர். ஜனாதிபதி முறைமையை கொண்டுவந்த ஐ.தே.கட்சி, பின்னர் 1995 -1996 காலப்பகுதியில் கதிர்காமத்தில் கூடி அதிகாரமளிக்கப்பட்ட ஜனாதிபதி முறைமையினை அதிகாரங்களை குறைப்பதற்கு ஒன்று கூடி தீர்மானம் எடுத்தது. அதன் பின்னர் 1998 வயம்பா மாகாண சபைத் தேர்தலிலும் ஒன்று கூடி விருப்பு வாக்குமுறையை ஒழிப்பதற்கும் அத்துடன் 17ஆவது அரசியலமைப்பு திருத்தத்தினை மேற்கொள்ளவும் நடவடிக்கை எடுத்தது. இருந்தும் 2 வருடத்திற்குள் ஐ.தே.கட்சி முடிவடைந்து விட்டது.

வெலிகம பிரகடனத்தில் குறிப்பிட்டிருப்பது போன்று அரசாங்கம் நாட்டில் 9 சுதந்திர ஆணைக்குழுக்களை அமைத்துள்ளனர். இதன் மூலம் தகைமையுடையவர்களுக்கு உரிய இடம் கிடைப்பதற்கு வழி சமைக்கப்பட்டுள்ளது.

கடந்த அரசாங்க காலத்தில் கிலின் ஹான்ட் (சுத்தமான கை) என ஓர் அமைப்பு உருவாகி நாட்டில் அபிவிருத்தி திட்டங்களுக்கு ஒதுக்கப்படும் நிதி பற்றி ஆராய்ந்தது. ஒதுக்கப்படும் நிதியில் 40-45 சதவீதம் வீண் விரயமாக்கப்படுவது கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. இப்போது அமுலுக்கு வந்துள்ள தகவல் அறியும் சட்டம் எதிர்காலத்தில் மக்கள் பணம் இப்படி வீண் விரயம் செய்யப்படுவதைத் தடுக்க இடமளிக்கின்றது.

வெலிகம பிரகடனத்தில் குறிப்பிட்டிருப்பது போன்று மிக விரைவில் புதிய தேர்தல் முறை அமுலுக்கு வரவுள்ளது. சைக்கிளில் சென்று வாக்குகளைக் கேட்கக் கூடிய தேர்தல் முறை எதிர்காலத்தில் அமுலுக்கு வரவுள்ளது.

சுதந்திரத்தின் பின்னரும் சிங்கள், தமிழ், முஸ்லிம் மக்கள் ஒன்றிணைந்து செயற்பட்டார்கள். சிங்கள விளையாட்டுக் கழகத்தில் தமிழர்களும் முஸ்லிம்களும் விளையாடினார்கள். தமிழ் விளையாட்டுக்கழகத்தில் சிங்களவர்கள் விளையாடினார்கள். சோனக விளையாட்டுக்களகத்தில் மூன்று இனத்தவர்களும் விளையாடினார்கள். நாட்டில் தேசிய ஐக்கியம் கட்டி எழுப்பப்பட்டால் மட்டுமே எமக்கு முன்னேறலாம். மதவாதம், இனவாதம் இருந்தால் எமக்கு முன்னேற முடியாது. சுதந்திரத்திற்கு முன்பும் முரண்பாடுகள் இருந்தால் அதனை மறந்து ஒன்று சேர்ந்து போராடியதனாலேயே சுதந்திரம் கிடைத்தது. பேதங்களை மறந்து எல்லோரும் ஒன்றுபட்டுச் செயற்படுவதன் மூலம் அடுத்த பரம்பரைக்கு ஒரு புதிய நாட்டில் வாழும் உரிமையை வழங்க முடியும்.

## ஆபாசத்தின்.....

(09ஆம் பக்க தொடர்)

அப்படியானால் முஸ்லிம் பாடசாலைகளின் காதல் போன்ற வழிகேடுகள் அரங்கேறுவதில்லையா? என்றொரு கேள்வி எழுவது இவ்விடத்தில் தவிர்க்க முடியாயது. முஸ்லிம் பாடசாலைகளிலும் நடைபெறுகிறது என்பதில் எவ்வித மாற்றுக் கருத்தும் இல்லை. ஆனால் மாற்ற மதம் சார்ந்த பாடசாலைகளை விட குறைவான அளவு தான் நடைபெறுகிறது என்பதை அனைவரும் ஏற்றுக் கொள்ள வேண்டும். காரணம் முஸ்லிம்கள் மதம் சார்ந்த நடைமுறைகளை ஓரளவுக்காவது பாடசாலைகளில் நடைமுறைப் படுத்துவதே இதற்கான காரணமாகும்.

முஸ்லிம் பாடசாலைகள் பல ஆண், பெண் கலவன் பாடசாலைகளாக இருப்பதும் முஸ்லிம் பாடசாலைகளிலும் இது போன்ற அனாச்சாரங்கள் நடைபெறுவதற்கு வழியமைத்துக் கொடுக்கிறது.

ஆண்களுக்கு தனியான பாடசாலையும், பெண்களுக்கு தனியான பாடசாலையும் அனைத்துப் பகுதிகளிலும் அமைக்கப்படுமாக இருந்தால் இந்தப் பிரச்சினைகளை வெகுவாக குறைக்கப்பட்டு விடும் என்பதில் சந்தேகமில்லை.

நபியே! (முஹம்மதே!) உமது மனைவியருக்கும், உமது புதல்வியருக்கும், (ஏனைய) நம்பிக்கை கொண்ட பெண்களுக்கும் முக்காடுகளைத் தொங்க விடுமாறு கூறுவீராக! அவர்கள் (ஒழுக்கமுடைய பெண்கள் என்று) அறியப்படவும், தொல்லைப்படுத்தப்படாமல் இருக்கவும் இது ஏற்றது. அல்லாஹ் மன்னிப்பவனாகவும், நிகரற்ற அன்புடையோனாகவும் இருக்கிறான்.

அல்குர்ஆன் 33 : 59

சீரழிக்கும் சினிமா

சினிமா தொடர்பான விளிப்புணர்வுகள் மாணவர்கள் மத்தியில் இல்லாமலிருப்பதும் இது போன்ற ஆபாச காடைத்தனத்திற்கு மாணவர்களை இட்டுச் சென்று விடுகிறது.

குறிப்பாக தமிழ் பேசும் மக்கள் மத்தியில் தமிழ் சினிமா ஆதிக்கம் செலுத்துவதைப் போல், சிங்கள மொழி பேசும் மக்கள் மத்தியில் ஹிந்தி சினிமா பாரிய தாக்கத்தை செலுத்துகிறது. மொத்தத்தில் அனைத்து மொழி சினிமாக்களும் தெளிவாகவே இந்த அனாச்சாரங்களுக்கு வித்திடுகின்றன என்பதில் சந்தேகமில்லை.

சினிமா கற்றுக் கொடுக்கும் காதல் சமாச்சாரத்தை பார்க்கும் மாணவனும், மாணவியும் நிஜத்தில் அதனை நடைமுறைப்படுத்த நினைக்கிறார்கள். பாடசாலை மாணவர்கள் முதல் பல்கலைக் கழக ஆசிரியர்கள் வரை அனைவரின் காதல் கதைகளும் சினிமாவாகவே காணப்படுகிறது.

சினிமாவில் தான் ரசிக்கும் ஹீரோவைப் போல் தன்னை கற்பனை செய்யும் மாணவன் தன் காதலியை தனது ஹீரொயினாக கற்பனை செய்கிறான். பாடசாலை பாடத்தில் கவனம் செலுத்துவதை விட தன் காதலியை பார்த்து ரசிப்பதில் அதிக கவனம் செலுத்துகிறான். பெரும்பாலான பாடசாலைகளில் ஆண்களை விட பெண் பிள்ளைகள் கல்வியில் முன்னிலையில் இருப்பதற்கும் மாணவர்கள் பின்தங்கி இருப்பதற்கும் இதுவொரு முக்கிய காரணமான இருக்கிறது.

மாணவர் மன்றங்கள் என்ற பெயரில் பாடசாலை மாணவர்களின் திறமைகளை வெளிக்காட்ட நடத்தப்படுகிற நிகழ்வுகளில் கூட ஆண் பெண் கலவை களியாட்டங்களும், சினிமா பாடல்களும், ஆடல்களும், குத்தாட்டங்களும் நடந்தேறுவதை நாம் அவதானிக்க முடிகிறது.

அண்மையில் மத்திய மாகாணத்தில் அமைந்துள்ள ஒரு முஸ்லிம் பாடசாலையில் ஆசிரியர் ஒருவரே சினிமா பாடலொன்றுக்கு குத்தாட்டம் போட்ட வீடியோ அனைவரின் வாட்ஸ்அப்களிலும் வைரலாக பரவியதை அவதானித்திருப்பீர்கள்.

இந்த சினிமா பைத்தியங்களினால் ஒன்று மறியா மாணவர்களின் வாழ்வும் வீணாகி, எதிர்காலத்தில் எவ்வித அறிவுமற்ற போதை பொருள் வியாபாரியாக, சாராய கடை நடத்துபவனாக, பெரும் ரவுடியாகவெல்லாம் மாணவர்கள் மாறிப் போவதற்கும் இதுவே காரணமாக அமைகிறது.

செல்போன் - இணையதளங்கள்

பாடசாலையில் குறித்த மாணவர்கள் இருவரும், மாணவிகள் இருவரும் சல்லாபத்தில் ஈடுபட்டதை ஒரு மாணவன் தனது செல்போனில் வீடியோ பதிவு செய்துள்ளான்.

அந்த மாணவன் வீடியோ பதிவு மேற்கொண்ட நேரம் பாடசாலை பாட நேரமாக இருக்கிறது. குறித்த நேரத்தில் பாடசாலைக்குள் அவன் செல்போன் வைத்துக் கொண்டிருப்பதை எந்த ஆசிரியரும் கண்காணிக்க வில்லை. பகிரங்கமாக சல்லாபத்தில் 04 மாணவர்கள் ஈடுபடுகிறார்கள். அதனையும் ஆசிரியர்கள் கண்காணிக்க வில்லை.

மாணவர்களை ஒழுக்கமுள்ளவர்களாக வளர்ப்பதற்காக இல்லாவிட்டாலும் அரசு தரும் சம்பளத்திற்காகவாவது கண்காணித்திருக்க வேண்டாமா?

காலையில் 07.00 மணிக்கு பாடசாலை செல்ல வேண்டிய பல ஆசிரியர்கள் தங்கள் இஷ்டப்படி பாடசாலைக்கு செல்வதும், அதிபரை சமாளித்து பொய் காரணம் சொல்லி ஏமாற்றுவதும், பல பொழுதுகளில் ஆசிரியர்களின் இத்தகைய செயல்பாட்டுக்கு அதிபர்களே துணை போவதும் சகஜமான ஒன்றாகி விட்டது.

அதே போல் பாட நேரத்தில் அசமந்தமாக, அசட்டையாக சக ஆசிரியருடன் அநாவசியப் பேச்சுக்களில் ஈடுபடுவதும், கொஞ்சுவதும், கெஞ்சுவதும் கூட பாடசாலைகளில் ஆசிரியர்களுக்கு மத்தியிலேயே நடைபெறும் காரியங்கள் தான்.

கல்வியையும், ஒழுக்கத்தையும் கற்றுக் கொடுக்க வேண்டியவர்களே இப்படியிருக்கும் போது மாணவர்கள் எப்படியிருப்பார்கள்?

பாடசாலைக்குள் செல்போன் எடுத்து வருவதும், இணையதளங்கள் பயன்படுத்துவதும், பாடசாலைக்குள்ளிருந்தே பேஸ்புக்கில் தகவல் பதிவதும் கூட இன்று சர்வ சாதாரணமான ஒன்றாக மாறியிருக்கிறது. இவற்றுக்கெல்லாம் காரணமாக இருப்பது ஆசிரியர்கள் தான்.

கொழும்பில் குறித்த பாடசாலையில் ஏற்பட்டதைப் போன்ற காரியங்கள் இனியும் பாடசாலை மட்டத்தில் மாணவர்களுக்கு மத்தியில் ஏற்படாமல் இருக்க வேண்டுமாயின் உரிய முறைப்படி ஒழுக்கமுள்ள இஸ்லாத்துடன் கூடிய ஒழுக்கக் கல்வி புகட்டப்பட வேண்டும் என்பதே சரியான தீர்வாக அமையும் என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை.

நவமணி



# Sports
விளையாட்டுச் செய்திகள்

# 100 ஆவது டெஸ்டில் பங்களாதேஷ் வெற்றி

## தொடர் சமநிலையில் முடிவு




4 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் இலங்கையை தோற்கடித்து பங்களாதேஷ் முதல் வெற்றியை பதிவு செய்துள்ளது. பங்களாதேஷ் அணிக்கு இது நூறாவது போட்டியாகும்.

இலங்கைகான சுற்றுலாவை மேற்கொண்டுள்ள பங்களாதேஷ் அணி 3 டெஸ்ட் போட்டிகள், 3 சர்வதேச ஒருநாள் போட்டிகள் மற்றும் 2 இருபதுக்கு 20 போட்டிகளிலும் பங்கேற்க உள்ளது.

அந்தவகையில் நேற்று கொழும்பு பி.சரவணமுத்து மைதானத்தில் நடைபெற்ற இரண்டாவது இன்னிங்சில் 191 ஓட்டங்களை பெற்றால் வெற்றி என்ற இலக்கில் விளையாடிய பங்களாதேஷ் அணி 4 விக்கட்டுகளால் வெற்றிபெற்றது.

முதல் இன்னிங்ஸில் இலங்கை அணி சண்டிமலின் அசத்தல் சதத்தால் அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து 338 ஓட்டங்களை குவித்தது. இதைத் தொடர்ந்து முதல் இன்னிங்ஸ் ஆடிய பங்களாதேஷ் அணி அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து 467 ஓட்டங்கள் குவித்தது.

129 ஓட்டங்கள் பின் தங்கிய நிலையில் 2ஆவது இன்னிங்ஸை தொடங்கிய இலங்கை அணி 4ஆம் நாள் ஆட்ட நேர முடிவில் 8 விக்கெட் இழப்பிற்கு 268 ஓட்டங்கள் எடுத்திருந்தது. இலங்கை அணி சார்பில் அதிகபட்சமாக கருணரத்ன சதம் கடந்து 126 ஓட்டங்களும் குசல் மெண்டிஸ் 36 ஓட்டங்களும் எடுத்திருந்தனர்.

வங்கதேச அணி சார்பில் முஸ்தபிசுர் ரஹ்மான் மற்றும் சகிப்அல் ஹசன் தலா 3 விக்கெட்டுகள் வீழ்த்தினர்.

இந்நிலையில் நேற்றைய தினம் 5ஆவது நாள் ஆடுகளம் மிகவும் எதிப்பார்ப்பு மிக்கதாக அமைந்திருந்தவேளை 191 ஓட்டங்களை பெற்றால் வெற்றி என்ற இலக்கில் களமிறங்கிய பங்களாதேஷ் அணி 4 விக்கட்டுகள் வித்தியாசத்தில் இலங்கை அணியை சொந்த மண்ணில் வீழ்த்தி வெற்றியை தனதாக்கிக் கொண்டது.

பங்களாதேஷ் அணிக்கெதிரான ஒருநாள் போட்டி:

# மேத்யூசுக்கு ஓய்வு - தலைவராக உபுல் தரங்க; நீண்ட இடைவெளிக்கு பின் திஸர - குஷால்



இரண்டாவது டெஸ்ட் நடைபெற்று வரும் நிலையில் பங்களாதேஷ் அணிக்கெதிரான ஒருநாள் போட்டியில் விளையாடும் 15 பேர் கொண்ட இலங்கை அணி அறிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கை அணித் தலைவர் அஞ்சலோ மேத்யூஸ் பூரண உடல் தகுதியில்லாமையால் இத் தொடருக்கும் உபுல் தரங்க தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார்.

நீண்ட இடைவெளியின் பின்னர் இலங்கை அணியில் திஸர பெரேரா மற்றும் குஷால் பெரேரா ஆகியோர் சேர்த்துக்கொள்ளப்பட்டுள்ளனர்.

இந் நிலையில் இரண்டு டெஸ்ட் போட்டிகளும் நிறைவடைந்துள்ள நிலையில் ஒருநாள் போட்டிகளுக்கான ஆயத்தங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

அந்தவகையில் பங்களோதேஷ் அணிக்கெதிராக ஒருநாள் போட்டியில் விளையாடும் இலங்கை அணி அறிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த போட்டிகளின் போது சிறப்பான ஆட்டத்தை வெளிக்காட்டாத குஷால் பெரேரா இலங்கை அணியில் இருந்து நீக்கப்பட்டார்.

இவர் 68 போட்டிகளில் விளையாடி 3 சதம் மற்றும் 8 அரைசதங்களுடன் 1635 ஓட்டங்களை பெற்றுக் கொண்டுள்ளார்.

அவ்வாறே திஸர பெரேராவும் பல போட்டிகளின் பெயர்பட்டியலில் இணைக்கப்படாத நிலையில் தற்போது பங்களாதேஷ் அணிக்கெதிரான போட்டியில் இணைக்கப்பட்டுள்ளமையானது இலங்கை ரசிகர்களுக்கு பெரும் மகிழ்ச்சியாக உள்ளது. அத்துடன் இந்த அணியின் வீரர்கள் பட்டியலில் நுவான் குலசேகர விலக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

மேலும், இலங்கை ஏ அணியின் தொடக்க துடுப்பாட்டகாரரான தனுஷ்க குணதிலக்க ஒரு நாள் அணியில் இடம்பெற்றுள்ளார்.

இலங்கைக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள பங்களாதேஷ் அணி, இலங்கை அணிக்கு எதிராக 2 டெஸ்ட், 3 ஒரு நாள், 2 டி20 தொடர்களில் விளையாடவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இலங்கை வீரர்களின் விவரம்

நிரோஷன் டிக்வெல்ல, தனஞ்சய டி சில்வா, குசல் மெண்டிஸ், அசேல குணரத்ன, சந்திமால், குசல் ஜனித் பெரேரா, தனுஷ்க குணதிலக்க, சுரங்க லக்மால், லகிரு குமார, விகும் சஞ்சய பண்டார, திஸர பெரேரா, சஜித் பத்திரண, சீக்குகே பிரசன்ன, லக்ஷ்சன் சந்தகன் ஆகியோர் பங்களாதேஷ் அணிக்கெதிராக விளையாடவுள்ள 15 பேர் கொண்ட இலங்கை குழாமில் இடம்பெற்றுள்ளனர்.




# கோஹ்லியை கேலி செய்த ஆஸி. வீரர் மேக்ஸ்வெல்





இந்தியா - அவுஸ்திரோலிய அணிகளுக்கிடையே ராஞ்சியில் நடைபெற்று வரும் 3ஆவது டெஸ்ட் போட்டியின் போது அவுஸ்திரேலிய அணியின் சகலதுறை ஆட்டக்காரரான க்ளென் மேக்ஸ்வெல் இந்திய அணி தலைவர் விராட் கோஹ்லியை கேலி செய்துள்ளார்.

3ஆம் நாள் ஆட்டத்தின் போது புஜாரா அடித்து, பவுண்டரி லைன் பக்கம் சென்ற பந்தை தடுத்த மேக்ஸ்வெல் தனது வலது தோள் பட்டையை பிடித்தபடி சிரித்துக் கொண்டே கிண்டல் செய்தார்.

முன்னதாக, நாணய சுழற்சியில் வென்று முதல் இன்னிங்சை தொடங்கிய அவுஸ்திரேலிய அணி, முதல்நாள் ஆட்டத்தின் 40ஆவது ஓவரில் பவுண்டரி லைன் நோக்கி சென்ற பந்தை தடுத்த அணித்தலைவர் கோஹ்லியின் வலது தோள் பட்டையில் தாக்கியதில், பலத்த காயமடைந்தார். இதையடுத்து களத்தடுப்பு செய்யாமல் மைதானத்தை விட்டு வெளியேறினார்.

அதனைத்தொடர்ந்து, 2ஆவது நாள் ஆட்டத்தின் போதும் கோஹ்லி களத்தடுப்பு செய்ய வரவில்லை. மாறாக இந்திய அணியின் முதல் இன்னிங்சில் களமிறங்கிய கோஹ்லி 6 ஓட்டங்களை எடுத்திருந்த போது கம்மின்ஸ் வீசிய பந்தில் ஸ்மித்திடம் பிடிகொடுத்து பெவிலியன் திரும்பினார்.

அவுஸ்ரேலிய அணி நிர்ணயித்த 451 ஓட்டங்களை விரட்டி செல்லும் இந்திய அணி, 3ஆம் நாள் ஆட்ட நேர முடிவில் 6 விக்கெட்டுக்களை இழந்து 360 ஓட்டங்களை குவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. இந்திய அணியில் புஜாரா அதிகபட்சமாக 130(328) ஓட்டங்களை எடுத்து ஆட்டமிழக்காமல் களத்திலுள்ளார்.

# 2ஆவது டெஸ்டில் தென் ஆபிரிக்கா அபாரம்

நியூசிலாந்து அணியுடனான 2ஆவது டெஸ்ட் போட்டியில், தென் ஆப்ரிக்கா 8 விக்கெட் வித்தியாசத்தில் வென்றது.

வெலிங்டன், பேசின் ரிசர்வ் மைதானத்தில் நடந்த இப்போட்டியின் முதல் இன்னிங்சில் அனைத்து விக்கெட் இழப்பிற்கு நியூசிலாந்து 269 ஓட்டங்களும், தென் ஆபிரிக்கா 359 ஓட்டங்களும் எடுத்திருந்தன. 91 ஓட்டங்கள் பின்தங்கிய நிலையில் 2ஆவது இன்னிங்சை விளையாடிய நியூசிலாந்து, 63.2 ஓவர்களில் 171 ஓட்டங்களுக்கு சுருண்டது.

தென் ஆபிரிக்க பந்துவீச்சில் கேஷவ் மகாராஜ் 6 விக்கெட், மார்னி மார்கெல் 3, ரபாடா 1 விக்கெட் வீழ்த்தினர். இதைத் தொடர்ந்து 81 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற எளிய இலக்குடன் களமிறங்கிய தென் ஆபிரிக்கா, 24.3 ஓவரில் 2 விக்கெட் இழப்புக்கு 83 ஓட்டங்கள் எடுத்து வென்றது. ஸ்டீபன் குக் 11, எல்கர் 17 ஓட்டங்களில் வெளியேறினர். அம்லா 38, டுமினி 15 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காமல் இருந்தனர். மகாராஜ் ஆட்ட நாயகன் விருது பெற்றார். மொத்தம் 3 போட்டிகள் கொண்ட தொடரில் தென் ஆபிரிக்கா 1-0 என முன்னிலை வகிக்க, கடைசி போட்டி ஹாமில்டனில் 25ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# 3,851 ஒரு நாள் போட்டிகளுக்கு பின்னர் 2 சுழற்பந்து வீச்சாளர்கள் படைத்த சாதனை






ஆப்கானிஸ்தான் மற்றும் அயர்லாந்து அணிகளுக்கிடையே நடந்த ஒருநாள் போட்டியில் இரண்டு சுழற்பந்து வீச்சாளர்கள் 6 விக்கெட்டுகள் வீழ்த்தி சாதனை படைத்துள்ளனர்.

ஆப்கானிஸ்தான் - அயர்லாந்து அணிகளுக்கு இடையேயான இரண்டாது ஒரு நாள் போட்டி நோய்டாவில் நடைபெற்றது. இதில் முதலில் ஆடிய ஆப்கானிஸ்தான் 50 ஓவர்கள் முடிவில் அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து 338 ஓட்டங்களை எடுத்தது. கடின இலக்கை துரத்திய அயர்லாந்து அணி 47.3 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து 304 ஓட்டங்கள் குவித்து, 34 ஓட்டங்கள் வித்தியாசத்தில் தோல்வியை சந்தித்தது.

இப்போட்டியில் இரண்டு சுழற்பந்து வீச்சாளர்கள் 6 விக்கெட்டுகளை வீழ்த்தியுள்ளனர். ஆப்கானிஸ்தான் சார்பில் பால்ஸ்டிர்லிங் 6 விக்கெட்டுகளும், அயர்லாந்து அணி சார்பில் ராசித்கான் 6 விக்கெட்டுகளும் வீழ்த்தி சாதனை படைத்துள்ளனர். ஒரே போட்டியில் இரண்டு சுழற்பந்து வீச்சாளர்கள் 6 விக்கெட்டுகள் வீழ்த்துவது 3,851 ஒரு நாள் போட்டிகளுக்கு பின்னர் நடந்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

# உதைபந்தாட்டத்திற்காக வாழ்நாளை அர்ப்பணித்த மருதமுனை ஏ.எம்.இப்றாகீம்

(மருதமுனை நிருபர்)

தனது வாழ்நாளை உதைபந்தாட்டத்திற்காக அர்ப்பணித்த மருதமுனையைச் சேர்ந்த ஏ.எம்.இப்றாகிமின்(மெரிகோல்ட்) சேவையை கௌரவித்து மருதமுனை மருதம் விளையாட்டுக் கழகம் அவரை வாழ்த்தி விருது வழங்கி கௌரவித்த நிகழ்வு வெள்ளிக்கிழமை மருதமுனை மசூர் மௌலானா விளையாட்டுத் தொகுதியில் கழகத்தின் தலைவர் எம்.ஏ.எம்.முஸ்தாக் அபூபக்கர் தலைமையில் நடைபெற்றது.

இதில் பிரதம அதிதியாக கிழக்கு மாகாண சபை உறுப்பினர் கே.எம்.ஏ.றஸாக்,கௌரவ அதிதியாக சறோ பாம் பிறைவெட் லிமிட்டட் முகாமைத்துவப் பணிப்பாளர் எம்.எச்.எம்.தாஜூதீன் ஆகியோருடன் கழகத்தின் தலைவர் எம்.ஏ.எம்.முஸ்தாக் அபூபக்கர், முகாமையாளர் ஏ,எச்.எம்.பாரிஸ், செயலாளர் ஏ.மனாஸ் ஆகியோரும் இணைந்து இவருக்கான விருதை வழங்கி கௌரவித்தனர்.

மெரி கோல்ட் என செல்லமாக அழைக்கப்படும் எ.எம்.இப்றாகிம் 1955.09.26ஆம் திகதி மருதமனையில் பிறந்தவர். தனது ஆரம்பக் கல்வியை அல்-ஹம்றா வித்தியாலயத்தில் கற்று இடைநிலைக் கல்வி மற்றும் உயர்தர கல்வி என்பவற்றை முறையே அல்-மனார்,உவெஸ்லி உயர்தரப் பாடசாலை மற்றும் கார்மேல் பாத்திமாக்கல்லூரி என்பவற்றில் கற்றார்.

தனது 15 வயதிலேயே உதைபந்தாட்டத்தில் மோகம் கொண்ட இப்றாகிம் 1970 தொடக்கம் 1974 வரையான காலப்பகுதியில் கல்முனை கார்மேல் பாத்திமா கல்லூரி அணிக்காக தனது முழுத்திறமையையும் பிரயோகித்து விளையாடினார். 1973ஆம் ஆண்டு கிழக்கு மாகாண உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டிக்கு பாடசாலை சார்பாக பிரதிநிதித்துவப் படுத்தி சம்பியனாக வெற்றியும் பெற்றுக் கொடுத்தார்.

1975ஆம் ஆண்டு காலப்பகுதியில் அம்பாறை மாவட்ட அணியில் விளையாடும் வாய்ப்பைப் பெற்று 1993ஆம் ஆண்டுவரை அவரது திறமையின் மூலம் தனது இடத்தை தக்க வைத்துக் கொண்டிருந்தார். அக்காலகட்டத்திலேயே அவர் 1982 இல் மருதமுனையில் புகழ்பூத்திருந்த ஈஸ்டன் யூத் விளையாட்டுக் கழகத்தில் இணைந்து கொண்டார். ஈஸ்டன் யூத் கழகத்தின் பொதுச்செயலாளர் பதவியை 1985அம் ஆண்டு முதல் 2016ஆம் ஆண்டு வரை தடைகளையெல்லாம் தகர்த்தெறிந்து சுமார் 31 வருடங்கள் சேவையாற்றினார்.







விளையாட்டில் மாத்திரமின்றி நடுவர் பரீட்சை தரம் மூன்றில் 1976 ஆம் ஆண்டிலும், தரம் இரண்டு பரீட்சையில் 1978ஆம் ஆண்டிலும்,சித்தியடைந்தார். மேற்கு ஜேர்மனியின் பயிற்றுவிப்பாளர் ஆக. கயிநவினால் வழங்கப்பட்ட உதைபந்துப் பயிற்சி நெறியில் 1979அம் ஆண்டில் கலந்து கொண்டார். இலங்கை உதைபந்தாட்ட சம்மேளனத்தினால் நடாத்தப்பட்ட மேலதிக உதைபந்தாட்ட பயிற்சி நெறி முகாமில் 1987 ஆம் ஆண்டில் கலந்து கொண்டார். 1996ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 19ஆம் திகதி முதல் 27ஆம் திகதி வரை மலேசியாவில் இடம்பெற்ற உதைபந்தாட்ட நிருவகிப்பு தொடர்பிலான வதிவிடப் பயிற்சி நெறியில் கலந்து சிறப்பித்தார். 1996ஆம் ஆண்டு செப்ரம்பர் மாதம் 15ஆம் திகதி தொடக்கம் 30ஆம் திகதி வரையான காலப்பகுதியில் Doha Qatarரில் நடைபெற்ற 1998ஆம் ஆண்டுக்கான உலகக் கோப்பை காற்பந்து தெரிவுப் போட்டியின் போது இலங்கை தேசிய அணியின் உதவி முகாமையாளராக கடமையாற்றினார்.

1997ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 08ஆம் திகதி இலங்கை உதைபந்தாட்டச் சம்மேளனத்தினால் நடாத்தப்பட்ட நடுவன மதிப்பீட்டாளர் மற்றும் போட்டி ஒழுங்கமைப்பு ஆணையாளர்களுக்கான பயிற்சிப் பாசறையில் மருதமுனை சார்பாகக் கலந்து கொண்ட ஒரே மகன் இவர் என்பது குறிப்பிடத்தக்கது.

இவர் அம்பாரை மட்டகளப்பு பிராந்திய அணிகளின் இணைப்பாளராகவும் 2005ஆம் ஆண்டு தொடக்கம் 2010ஆம் ஆண்டு வரை பதவிவகித்தார். இது மாத்திரமின்றி அம்பாரை மாவட்ட உதைபந்தாட்ட சம்மேளனத்தின் பொதுச் செயலாளராக 1994ஆம் ஆண்டில் இருந்து 2011ஆம் ஆண்டுவரை கடமையாற்றி மீண்டும் 2015ஆம் ஆண்டு தொடக்கம் இன்றுவரை அப்பதவியை வகித்து வருகின்றார். 2009ஆம் ஆண்டு ஒகஸ்ட மாதம் 5ஆம் திகதி தொடக்கம் 10ஆம் திகதிவரை களுத்துறை மாவட்டத்தில் இடம்பெற்ற Fifa Futuro 3ல் நிருவாக முகாமையாளராகவும் செயற்பட்டார்.

மேலும் 2013ஆம் ஆண்டு காலப்பகுதி முழுவதும் இலங்கை கால்பந்தாட்ட Soccer Master Association Exco உறுப்பினராகவும் மசூர்மௌலானா விளையாட்டுத் தொகுதியின் முகாமையாளராகவும் தற்போது பதவி வகித்துக் கொண்டிருக்கிறார்.

Printed and Published by Freelanka Media Ltd. #156, Hospital Road, Kalubowila, Dehiwala. on 20TH MARCH 2017